

# தமிழரசு

1-2-1981

50 காசு.

# திருவள்ளுவர் திருநாள்

(15-1-'81)



















வள்ளுவர் கோட்டம்
சென்னை





# சொல்லழகர் அண்ணா

— கவிஞரேறு வாணிதாசன்



கடல்மல்லைத் திருநாட்டுக் காஞ்சிதந்த செம்மல்!
கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பேற்றும் நீண்ட
மடற்றாழை மலர்மணந்து வருந்தென்றற் காற்று!
வளர்புன்னைப் பூவிருந்து வண்டெழுப்பும் பாடல்
இடமகன்ற தமிழகத்தின் இருள்போக்கி வானில்
எழுந்தசுடர்! மாற்றாரும் எண்ணியெண்ணி ஏங்க
நடமாடும் அறிவூற்று! தமிழகத்தில் வாய்த்த
நல்லறிஞர்! சொல்லழகர் எங்களரும் அண்ணா

கற்றவர்கள் வியக்கின்ற தனித்தமிழ்மா மேதை!
கலையுலகில் எழுத்துலகில் தனிப்பாதை காட்டி
மற்றவர்கள் துயர்காணின் மனங்கலங்கும் நெஞ்சர்!
வாய்இனிக்க செவிஇனிக்க வாதாடும் செம்மல்!
நற்றமிழ்த்தாய் ஈன்றுலக நாட்டிற்கே தந்த
நல்லோருள் நமதண்ணா வல்லவராம் கண்டீர்!
பெற்றோர்கள் பெயர்வாழ்த்த பெரும்புகழைச் சேர்த்த
பேரறிஞர் சொல்லழகர் எங்களரும் அண்ணா!



தமிழரசு

மலர்: 11 இதழ்: 15

1-2-1981



பிப்ரவரி 3 ஆம் நாள்
பேரறிஞர் அண்ணா
நினைவு நாள்



# வீட்டுக்கு ஒருவருக்கு வேலை!

## மேதகு ஆளுநர் உரை

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

உங்கள் அனைவரையும் முதன்முறையாக இந்த ஆண்டில் சந்திப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு உங்கள் அனைவர்க்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நடைமுறை ஆண்டு, தமிழ் நாட்டு மக்களுக்குக் குன்றாச் செல்வத்தையும் குறையாத வளத்தையும் வரையாது வழங்குமென நம்பிக்கைக் கொள்வோமாக !

**2.** உவகை தரும் வகையில், அண்மையில் நடந்து முடிந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுடன் இந்த ஆண்டானது நல்ல முறையில் தொடங்கியுள்ளது. பழம் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட மதுரையில் நடைபெற்ற இந்த மாநாட்டினை நடத்துவதற்கு நன்கு உருவாக்கப்பட்ட சீரிய திட்டத்தினை வகுக்க இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைத் தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்கள் மட்டுமல்லாமல், நாட்டின் பல பகுதிகளிலும் பரவியிருக்கும் தமிழார்வமுடையவர்களும், அதிலும் குறிப்பாக, உலகில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்திக்கொண்டனர். இந்த மாநாட்டின் மூலம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் நாட்டின் பின்னணியில் நாம் வாழ்வது போன்றதொரு உணர்வு ஏற்பட்டது ; தமிழ்ப் பண்பாட்டின் பொலிவும் இலக்கியத்தின் பெருமையும் உணரப்பட்டன ; வழிவழி வந்த தமிழ்த் தலைமுறையின் பெருமை உலகுக்கு உணர்த்தப்பட்டது.

**3.** இந்த மாநாடு நிறைவெய்திய நாளன்று இந்தியத் தலைமையமைச்சர் கலந்துகொள்ளும் பெரும் பேற்றினை இம் மாநிலம் பெற்றது. இதனைப் பல இலட்சக்கணக்கான மக்கள் போற்றிப் புகழ்ந்தனர். மதுரையில் இத்திங்கள் 10ஆம் நாளன்று கூடிய பெருந்திரளான மக்களிடையே பேருரையாற்றிய இந்தியத் தலைமையமைச்சர் அவர்கள் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்கள் மீது வலுக்கட்டாயமாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்று உறுதியளித்தார். தமிழ் நாட்டின் மீது ஒருபோதும் இந்தி திணிக்கப்படமாட்டாதென்று மறைந்த பண்டித சவகர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்திக் கூறியதற்காகத் தமிழ்நாடு அரசும், மக்களும் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**4.** உலகத்தில் பல்வேறு நாடுகளிலிருந்தும் வெளிநாட்டினர் பெருமளவில் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்டது, வெளிநாட்டினர்க்கு தமிழ் மொழியினிடத்து எத்துணைப் பற்று உள்ளது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. தமிழைப் பயிலுவதற்காக இந்நாட்டிற்கு வருகிற வெளிநாட்டு மாணவர்களுக்குத் தாராளமாகப் படிப்புதவித்தொகைகள் வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்கிறது. அதேபோன்று வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தமிழ் கற்க ஆசிரியர்கள் தேவைப்படும்போது, அத்தகைய ஆசிரியர்களைத் தமிழக அரசு அவர்களுக்கு அனுப்பி உதவி செய்ய மத்திய அரசு துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**5.** மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றினை ஏற்படுத்துவது எனவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனத்தில் தமிழ் மொழி வல்லுநர்கள் பணிபுரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு இயங்கும். ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்னும் கோட்பாட்டைச் செயல்படுத்துவதற்கு இம் மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**6.** தமிழ் நாட்டின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு அண்மையில் டில்லியில் முடிவு செய்யப்பட்டிருப்பது மற்றொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும். நமது முதலமைச்சரும் மத்திய திட்ட அமைச்சரும் பலமுறை கூடிப் பேசிய பின்னர், இம்மாநிலத்தின் திட்ட அளவு ரூ. 3,150 கோடியென நிர்ணயிக்கப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட அளவாகிய ரூ. 1,122 கோடியைக் கணக்கிடும்போது, இது கிட்டத்தட்ட மும்மடங்கு கொண்டதாகும். மேலும் முன்னர் 1978-83 கால அளவுக்கான ஐந்தாண்டு வரைவுத் திட்டத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தொகையாகிய ரூ. 2,150 கோடியை விட ரூ. 1,000 கோடி அதிகமாகும். 1980-81ஆம் ஆண்டுக்கு இம் மாநில ஆண்டுத் திட்டம் ரூ. 411 கோடியாக இருக்க, 1981–82ஆம் ஆண்டுத் திட்டம் ரூ. 514 கோடியாக இருக்குமெனத் திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

**7.** ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்கு மத்திய அரசின் நிதி உதவி அளவை உயர்த்துமாறு பல்வேறு வாய்ப்புக்களில் இம் மாநில அரசு மத்திய அரசை வேண்டி வந்துள்ளது. மத்திய அரசின் நிதி உதவி 'காட்கில் ஏற்பாட்டின்' கீழ் தற்போது நிர்ணயிக்கப்பட்டுவருவது மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யாவரும் அறிந்ததே. புதுடில்லியில் அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும்கூட, இந்த ஏற்பாட்டின்கீழ் நிதி ஒதுக்க, தற்போது பின்பற்றும் அடிப்படையை மாற்ற வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். கடந்த திங்களில் திட்டக் குழுவுடன் நடத்திய விவாதங்களின்போது, ஒரு மாநிலத்தின் பின்தங்கிய நிலையை, நபர்வாரி வருமான அடிப்படையில் தீர்மானிப்பதற்குப் பதிலாக, வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள மக்கள் சதவீதம், மாநிலத்தின் நபர் வாரித் திட்டச் செலவு ஆகியவற்றின்

அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. வறுமையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்னும் கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், இந்த நியாயமான கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்கும் என்று நம்புகிறோம்.

**8**. விலைவாசி ஏறுமுகத்தையும் அதைத் தொடர்ந்து பணவீக்க நிலை தொடர்ந்து இருப்பதையும் கண்டு, இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. பணவீக்கம் ஏற்பட்டுள்ளபோது, ஊதிய உயர்வுகளினால் உண்மையில் பயன் ஏற்படாது; அதற்கு மாறாக ஊதிய உயர்வு பணவீக்கம் என்கிற தீயை மேலும் வளர்ப்பதாக அமைந்துவிடுகிறது. விலைவாசி உயர்வும் ஊதிய உயர்வும் ஒன்றையொன்று தொடர்ந்து வரும் ஒரு நச்சு வட்டமாகவே தோன்றுகிறது. மேலும், அமைப்பு ரீதியாகச் செயல்படும் சிறுபான்மையினர் பெறும் ஊதியம் அவர்களுக்கு எதிர்பார்த்த பலனை அளிக்காதது மட்டுமல்ல, அதனால் ஏறும் விலைவாசி, அமைப்பில்லா பெரும்பான்மையினரான கைத்தறி நெசவாளர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைத்திறப் பணியாளர்கள் போன்ற ஏழை, எளிய உழைக்கும் மக்களையும் பாதித்து விடுகிறது. அமைப்பு ரீதியான சிறுபான்மையினரிடம் உள்ள கூடுதல் ஊதியம் பெறும் சக்தி, மிகப் பெரும்பான்மை உழைக்கும் மக்களிடம் இல்லை. இந்நிலையில், இவ்வமைதிப் பெரும்பான்மையினரே பெரும் அவதிக்காளாகின்றனர். இத்தகைய போக்கினை உடனடியாகத் தடுத்து நிறுத்துவது இன்றியமையாத பணியாகும். சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களுக்கும், குறிப்பாக நலிந்த பிரிவினர்களுக்கு நியாயமான விலையில் இன்றியமையாப் பொருட்கள் கிடைக்கச் செய்யும் பொருட்டு முதற்கண் பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டும்; அடுத்து, எல்லா இன்றியமையாப் பொருட்களின் உற்பத்தியும் பெருக வேண்டும். பொது விநியோக முறையை வலுப்படுத்துவதற்காக, இம் மாநிலத்தில் உள்ள வருவாய்க் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாயவிலைக் கடைகளை அரசு ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ளதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, நுகர்பொருள்களின் உயர்வு ஏதும் ஏற்படாமல், நியாயமான விலையில் இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், டீசல் போன்ற இடுபொருள்கள் வழங்குதல், உயர் கொள்முதல் விலை அளித்தல் போன்ற எல்லா வகையான ஊக்கமும் ஆக்கமும் உழவர்களுக்கு வழங்க வேண்டுமென எனது அரசு கருதுகிறது.

**9.** நாட்டின் பொருளாதாரம் செழிப்பதற்கு வேளாண்மையே முக்கிய கூறாக விளங்குவதால், கிராம பொருளாதாரத்தின் மிக முக்கிய அம்சமாக அது திகழ்கிறது. நிலவுடைமையாளர்கள் மட்டுமின்றி, கிராமச் சமுதாயத்தில் சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைத்திறப் பணியாளர்கள் முதலிய நலிந்த பிரிவினர்களும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தும் பொருட்டு அவர்கள் நல்ல வருவாய் பெற்று வாழ்வாங்கு வாழும் நிலையை உருவாக்குவது அவசியமாகும். இத்துறையில் அவர்கள் நன்முறையில் வாழ்வதை உறுதிப்படுத்த அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உரிய ஆதாயம் கிட்டும் வகையில் விலையை நிர்ணயிப்பது அவசியமாகும். உழவர்களுக்கு நியாயமான ஆதாயம் கிடைக்கும் வகையில் விளைபொருளுக்கு உரிய விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று எல்லா வாய்ப்புக்களிலும் மீண்டும் மீண்டும் நமது அரசு, மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 130-ம், கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ. 200-ம் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென எனது அரசு வலியுறுத்தி வந்துள்ளது. இருப்பினும், சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 105 ரூபாயாகவும்,



ஒரு டன் கரும்பின் சட்டப்படியான குறைந்த அளவு விலை 130 ரூபாயாகவும் மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. மேற்சொன்ன முடிவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசை இன்னும் வற்புறுத்தி வரும்போதே, எனது அரசு ஒரு குவிண்டால் நெல்லின் விலையை 115 ரூபாயாகவும், ஒரு டன் கரும்பின் விலையை 175 ரூபாயாகவும் தானாகவே உயர்த்தியுள்ளது.

**10**. விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, மழை இல்லாமலும் இயற்கையின் சீற்றங்களினாலும், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத சிறு விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, அரசு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நடுத்தரக் காலக்கடன்களாக மாற்றப்பட்ட குறுகிய கால கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் (1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவர நிலுவை) குறைந்தது சிறு உழவர்கள் வாங்கிய கடன்களை மட்டிலுமாவது தள்ளுபடி செய்வதற்கு உதவிசெய்யும்படி இந்திய அரசை இம் மாநில அரசு கேட்டுள்ளது. எனினும், இவ்வேண்டுகோளை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம்நாள் நிலவரப்படி நடுத்தரக் கால கடன்களையும், நடுத்தரக் கால தவணை ஒத்திவைப்பு கடன்களையும், அவற்றிற்குரிய வட்டியையும், தண்ட வட்டியையும் சிறு உழவர்கள் சார்பில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்காக, மாநில அரசு தன்னுடைய சொந்த நிதியிலிருந்து ரூ. 42 கோடி அனுமதித்தது. இத்தொகைக்கு மேற்பட்டும், 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் நிலவரப்படி, மேற்கூறிய விதிகளுக்குட்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொகையைச் செலுத்தவேண்டிய சிறு உழவர்கள் இருந்தால், மாநில அரசு, அவர்களுடைய கடன்களையும் திருப்பிச் செலுத்தும். ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்தகைய கடன்களைத் திருப்பிச் செலுத்தியுள்ள சிறு உழவர்களும் சிலர் உள்ளனர். கடன் தொகையைச் செலுத்தத் தவறியவர்களுக்கு அளிக்கின்றச் சலுகைகளைக் கடன் தொகையைச் செலுத்திய சிறு உழவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது. எனவே, அச்சிறு உழவர்கள் 1981-82ஆம் ஆண்டில் செலுத்த வேண்டியிருக்கும் கடன் தொகையில் இத்தொகையைக் கழித்து, அவர்களுக்கும் அப்பயன்கள் அளிக்கப்படும்.

**11**. தக்காவிக் கடன் தொடர்பான நிலுவை வசூலிப்பை ரத்து செய்தும், எனது அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாணையைச் செயற்படுத்தியதன் விளைவாக, 1980ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3ஆம் நாள் வரை ரூ. 20,61,50,077 கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது; சுமார் 9,17,559 உழவர்கள் இதனால் பயனடைகின்றனர்.

**12**. இவ்வரசுக்கு உள்ள நிதி ஆதாரங்கள் குறைவு. ஆத்தகைய நிலையிலும், இத்தகைய தாராளச் சலுகைகளை இவ்வரசு வழங்கியுள்ளது. இருப்பினும், மின் கட்டணங்கள், கூட்டுறவுச் சங்கக் கடன்கள், அரசு உள்ளாட்சி மன்றங்கள் முதலியவற்றுக்குச் சேர வேண்டிய வரிகள் ஆகியவற்றைச் செலுத்த வேண்டாமென வலியுறுத்தி, உழவர்களில் ஒரு பகுதியினர், வரிகொடா இயக்கம் நடத்தி, மாநில அரசுக்கு எதிராகச் செயல்பட்டனர். சுமார் 35 கோடி

ரூபாய் அளவுக்கு மின் கட்டணங்களை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுத்தபோது, பல்வேறு உழவர் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த விரும்பின. அச் சங்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் என்னுடைய அரசு இருமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தியது; அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் எளிய தவணைகளில் அதாவது ஒவ்வொரு மாதமும் நடப்பு மாத மின் கட்டணத்தையும் பழைய நிலுவையில், ஒருமாதக் கட்டணத்தையும் வசூல் செய்யும் '1+1 என்னும் ஏற்பாட்டை அரசு ஏற்றுக்கொண்டது. துரதிருஷ்டவசமாக உழவர்களில் ஒரு சங்கத்தினர் மட்டும் இந்த ஏற்பாட்டை ஏற்கவில்லை. அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நகரங்களுக்கு இன்றியமையாப் பொருள்கள் செல்வதைத் தடுத்தனர்; சில இடங்களில் பால், உணவுப் பொருள்களைப் பாழ்படுத்தினர்; அதுமட்டுமின்றி, வன்முறையில் ஈடுபட்டு, உயிருக்கும் உடைமைக்கும் ஊறு விளைவித்தனர். இத்தகைய செயல்களை எந்த அரசும் அனுமதிக்க இயலாது. எனவே, சட்டம் ஒழுங்கைக் காக்க அவசிய நடவடிக்கைகளை எனது அரசு எடுத்தது. உழவர்களுக்கு இயன்றவரை உதவி வரும் அரசின் நிலையில் நியாயம் இருப்பதை உணர்ந்து இவர்கள் தீர்க்கமாகச் சிந்தித்து ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன்.

**13**. இவ்வாண்டில் மிதமிஞ்சிய அளவுக்குப் பெய்யாதபோதிலும்கூட, பெய்த மழை கணிசமான அளவுக்குத் திருப்திகரமாகவே இருந்துள்ளது. ஆயினும், பருவ மழை பொய்த்ததன் காரணமாக, புதுக்கோட்டை, வடார்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் வறட்சி நிலை ஏற்பட்டது. அங்கு ரூ. 1·30 கோடி செலவில் புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடார்க்காடு மாவட்டத்தில், பயிர் விளைச்சல் 50 சதவீதத்திற்கும் குறைந்த நிலங்களுக்கு நிலவரியைத் தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டது. இதுபோன்ற வறட்சி நிலை, குறிப்பாகக் காணப்படும் இடங்களிலெல்லாம் துயர்தணிப்பு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

**14**. வேளாண்மைத் துறையில் உதவி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்போது, நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள் ஆகியோரது நலனை அரசு கண்ணுங்கருத்துமாகக் கட்டிக்காத்து உதவி செய்து வந்துள்ளது. இவர்களுக்கு உறுதுணையாகவும் பரிவுடனும் நடந்து கொள்ளும் போக்கு, இவ்வரசின் கொள்கையாக இனியும் தொடர்ந்து நிலவும்.

**15**. இம் மாநிலச் சட்ட மன்றம் நிறைவேற்றியுள்ள தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்தச் சட்டவரைவு, குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. நில உச்சவரம்பு குறித்து முன்பு இயற்றிய சட்டத்தை ஏமாற்றும்பொருட்டு, 1958ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1ஆம் நாளிலிருந்து 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நில மாற்றங்களை அம்பலப்படுத்தும் இச் சட்ட வரைவு சட்டமாகிவிட்டால், உபரியாகக் கிடைக்கும் நிலங்கள், நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

**16**. வேளாண்மைத் தொழிலுக்குப் பாசனம் இன்றியமையாததாகும். பெரிய ஆறுகளின் நீர் முழுவதையும் பாசனத்தின் பொருட்டு அநேகமாகப் பயன்படுத்தியாகி விட்டதால், பாசனப் பரப்பை விரிவுபடுத்தும் பொருட்டும், குறிப்பாக, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வறட்சிப் பாங்கான பகுதிகளுக்கு உதவும் பொருட்டு, கேரளாவில் மேற்கே பாயும் ஆறுகளின் உபரி நீரிலிருந்து ஓரளவு நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட கேரள அரசுடன் என்னுடைய அரசு விரைவில் பேச்சு வார்த்தை நடத்தும். காவிரியாறு சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன், 1968-ம் ஆண்டிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகளாகப் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன; இருப்பினும், காவிரி நீர்த்தகராறில் உடன்பாடு ஏற்படவில்லை என்பது வருந்துதற்குரியது. இவ்வாண்டிலேனும் நாம் தமிழ்நாட்டின் நலனுக்கேற்ற நல்லதொரு தீர்வு காண முடியுமென்று நம்புகிறேன்.

**17**. மீனளம், வேளாண்மையுடன் தொடர்புள்ள ஒன்றாகும். நீண்ட கடற்கரையைப் பெற்றிருக்கும் பேறு தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது. என்றாலும், இயற்கை தந்த இவ்வளத்தை மிகுதியான அளவு பயன்படுத்தும் பேறுமட்டும் இல்லாமல் போய்விட்டது. இவ்வகையில் முதல் நடவடிக்கையாக, இந்தியாவின் கிழக்குக் கடற்பகுதியில் மீனளப் பரப்புக் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி நடத்துமாறு மத்திய அரசை மாநில அரசு வேண்டியுள்ளது. இக்கோரிக்கை பரிசீலிக்கப்படுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது. அடுத்த நடவடிக்கையாகக் கிழக்குக் கடற்பகுதியில் உயிரினங்களைப் பிடித்தல், கடல் பகுதி சுற்றுச்சூழல், கடலுறை வளங்கள் முதலியவை குறித்து ஆய்வு மேற்கொள்ள வசதியாக விரிவான செயற்குறிப்புகள் தயாரிக்குமாறு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



**18**. அதே சமயத்தில், கடலின் மிக ஆழமான பகுதிகளில் உள்ள மீன்களைப் பிடிக்க இயலும்பொருட்டு, வெவ்வேறு மீன்பிடிப் பகுதிகளுக்கேற்ற ஆழ்கடல் மீன்பிடி இழுபடகுகள் எவையெவை என்பதையும், அவற்றை எவர்களிடமிருந்து வாங்கலாம் என்பதையும் அறிய உதவுவதற்கு மத்திய அரசிடமிருந்து தொழில் நுட்ப உதவியைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. அரசு மேற்கொண்டுள்ள இந்நடவடிக்கைகள், இம் மாநிலக் கடல் வளத்தை மேலும் சிறந்த முறையில் பயன்படுத்தவும், மீனவர் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் துணை புரியும்.

**19.** பொருளாதார வளர்ச்சிக்கு, மின்சாரம் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாக இருப்பதால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1,023 கோடி அளவுக்குப் பெரும் முதலீடு செய்யக் கருதப் பட்டுள்ளது. ரூ. 89·71 கோடி செலவில் கீழ் மேட்டூர் புனல் மின் திட்டமும், ரூ. 189·70 கோடி செலவில் மேட்டூர் அனல் மின்திட்டமும் ஏற்கவவே அனுமதிக் கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து மேலும் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இருந்தபோதிலும், தற்போது மின்சாரப் பற்றாக்குறை உள்ளது. இதனால் தொழிற்சாலைகளுக்கு 30 சதவீத மின்சார வெட்டு விதிக்கப்பட்டுள்ளது. 1981-ஜூன் மாதம் வரை மின்சார வெட்டு இந்நிலையிலேயே தொடர்ந்து இருக்கும்.

**20.** இம்மாநிலத்தைத் தொழில்மயமாக்கும் திட் டத்தை மேலும் செயல்படுத்துவதற்கும், வேலை வாய்ப்பு வசதிகளை உருவாக்கவும், தனியார் துறை யிலும், அரசுத் துறையிலும் தொழில்களைத் தொடங்க அரசு ஊக்கமளித்து வருகிறது. மின்சாரம், சாலைப் போக்குவரத்து வசதி, தேர்ச்சிபெற்ற மனித ஆற்றல் முதலியவை நல்முறையில் நமக்குக் கிடைக்கும் வாய்ப் பினைக்கொண்டு பார்த்தால், இம்மாநிலத்தில் தனி யார் துறை போதிய முதலீடுகள் செய்யுமென்று நான் நம்புகிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டு றவுத் துறையில் நாளொன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியக்கூடிய திறனுடைய சர்க்கரை ஆலையொன்றை ஏற்படுத்த உரிமம் வழங்குமாறு இந்திய அரசுக்கு நாம் எழுதிக் கேட்டுள்ளோம். அரசுத்துறையில் தொடங்க விருக்கிற பத்திரிகைக் காகிதத் தொழில் திட்டத்தைச் செயலாக்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்திய அரசும், திட்டக்குழுவும், உலக வங்கியும் இத்திட்டத்தில் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றன.

**21.** இவ்வரசு பின்பற்றும் முன்னேற்றமான தொழி லாளர் கொள்கை கனிந்த பயனை நல்கி வந்துள்ளது. இம்மாநிலத்தில் தொழிலாளர் நலன் 1980ஆம் ஆண்டில் மொத்தத்தில் திருப்திகரமாகவே இருந்து வந்திருக்கிறது. 1948ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3) பகுதியின்கீழ் செய்து கொள்ளப்படும் உடன்பாடு, வேலை நிறுத்தங்கள் தொடங்குவது தொழிலாளர்களில் 60 சதவீதத்தினரின் உடன் பாட்டுடன் மேற்கொள்ள தேவையான சட்டத் திருத்தங்களை ஏற்படுத்த இந்த அரசு கருதியுள்ளது. தொழிலாளர் சட்டங்கள் குறித்த நிலைக் குழு முன் இது வைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**22.** ''பக்கிங்காம்-கர்நாடிக் ஆலை'' தற்போது மூடப்பட்டிருப்பது நம்முன் உள்ள பெரிய பிரச்சினை ஆகும்; இதனால் சென்னை மாநகரின் ஏறக்குறைய 13,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பற்றோருக்கு வேலைவாய்ப்பளிப்பதற்காக, அரசு தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொண்டுவரும்போது, இவ்வாலை மூடப்படுவதனால் இவ்வாலையில் ஏற்கனவே வேலை செய்து வருவோர் தங்களது வேலையை இழக்கும்படியான நிலை ஏற்பட்டுள்ளது என்பது உண்மையிலேயே வருந்தத்தக்கதாகும். இப்பிரச்சினைக்கு முடிவுகாண, மாநில அரசு தன்னால் ஆகக்கூடிய எல்லாவற்றையும் செய்து வருகிறது. நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையை மத்திய அரசே தீர்த்து வைக்க வேண்டியிருக்கிறது என்பதைக் குறிப்பிடுவது பொருத்த மாகும். மத்திய அரசு, இது தொடர்பாகப் பல கூட்டங் களைக் கூட்டியது; இவ்வாலை மீண்டும் செயல்படுத்தத் தொடங்க இயலும் வகையில், இப்பிரச்சினை மிக விரைவில் சுமுகமாக தீர்த்துவைக்கப்படுமென எனது அரசு நம்புகிறது.

**23.** இம்மாநிலத்தில் 376 வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன; அவற்றில் 69 வளர்ச்சி வட்டாரங்களில், சுமார் ரூ. 43 கோடி மதிப்பீட்டுச் செலவில் தன்னிறைவுத் திட்டம் தற்போது செயல்படுத்தப் படுகிறது. 69 வளர்ச்சி வட்டாரங்கள் அடங்கிய முதல் தொகுதிக்காக நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்குகள், நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் எய்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம், அடுத்த நிதி யாண்டில் மேற்கொண்டு புதிய 120 வளர்ச்சி வட்டாரங் களில் செயல்படுத்தப்படும். திட்டத்தின் அளவை முடிவு செய்தல், இலக்குகளை நிர்ணயித்தல், மதிப்பீடு களைத் தயாரித்தல் போன்ற தொடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாநில அளவில் உள்ள உயர் அதிகாரக்குழு, இத்திட்டம் செயல்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்காணித்து வருகிறது.



**24.** வேலைக்கு உணவுத் திட்டம் இப்போது திருத்தியமைக்கப்பட்டு கிராமப்புற வேலைவாய்ப்பு தேசியத் திட்டமாகப் பெயர் பெற்றுள்ளது. கிராம மக்களுக்கு உதவி செய்யும் வகையில் இம்மாநிலத்தில் இத்திட்டம் மிகுந்த முனைப்புடன் செயல் படுத்தப்படும்.

**25.** மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தபின் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது நல்ல தென்று மத்திய அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பணிகள் முடித்தவுடன் தேர்தல்கள் நடத்தப் படும். எவ்வளவு விரைவில் இந்தத் தேர்தலை நடத்த வேண்டுமோ அவ்வகையில் நடத்தி, மக்களால் நேரிடை யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையில் உள்ளாட்சிப் பொறுப்பை எனது அரசு ஒப்படைக்கும்.

**26.** கல்வித் துறையில், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் இரு பல்கலைக் கழகங்கள் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டன. அதைச் செயற்படுத்துவதற்கான சட்டம் ஒன்று விரைவிலேயே கொண்டுவரப்படும். இவ்வாண்டிலேயே தமிழ் பல்கலைக் கழகமும், காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகமுமாக மேலும் இரு பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தவும் எனது அரசு முயற்சி எடுத்து வருகிறது.



**27.** கடல் பரப்பாய்வியல் தேசிய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சோழமண்டலக் கடற்பகுதியில் (அதாவது தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில்), முக்கியமாக காவிரிப்பூம்பட்டிணத்தில் படுகை தொல் பொருளியல் ஆய்வுகளை, அரசு அண்மையில் வெளியிட்ட ஆணைகளையொட்டி, மாநில அரசின் தொல் பொருளியல் துறை நடத்திவருகிறது.

**28.** பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை ஈராண்டுக் காலத்திற்குப் பொது நலனை முன்னிட்டு அரசு மேற்கொண்டுள்ளது.

**29.** சென்னை மாநகருக்கு எனத் தனிப்பட்ட சில பிரச்சினைகள் உள்ளன. பருவமழை தவறினால், குடிநீர் கிடைப்பதும் அரிதாகிவிடுகிறது. சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவைப் பெருக்குவதற்காக திருச்சி மாவட்டத்தில் கட்டளைப் பொறி மதகின் கீழ் காவிரி ஆற்றிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டுவர அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தினால் நாளொன்றுக்கு 99·5 கோடி லிட்டர் கூடுதலாக நீர் கிடைக்கப்பெறும். இத்திட்டம் 5 ஆண்டுக்கால அளவில் முடிக்கப்படலாம் என்று தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார். கட்டுமானக் காலத்தில், ஏறக்குறைய ஒரு நாளுக்கு இலட்சம் பேருக்கு 5 ஆண்டு காலத்திற்கு இதனால் தினசரி வேலைவாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்திற்கு ரூ. 459 கோடி வரை செலவாகும்; இதில் உலக வங்கி அக்கறை காட்டியுள்ளது.

**30.** சென்னை மாநகரைக் குறித்த மற்றொரு சிக்கலான பிரச்சினை, விரைவான போக்குவரத்துப் பிரச்சினையாகும். சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் முனைக்கு, சுமார் ரூ. 60 கோடிக்குக் கூடுதலான செலவில், பெரும்பகுதியினரைக் கொண்டு செல்லும் விரைவுப் போக்குவரத்துத் திட்டம் (Mass Rapid Transit System) குறித்து மத்திய அரசுடன் இவ்வரசு தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறது.

**31.** இம் மாநிலத்தில், விமானப் போக்குவரத்து வகையில், மூன்றாம் நிலை கிளை வழி விமானப் போக்குவரத்தைத் தொடங்குமாறு, மாநில அரசு மத்திய அரசைச் சில காலமாக வலியுறுத்தி வருகிறது. இம் மாநிலத்திலுள்ள சுற்றுலா இடங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், பண்பாட்டைப் பறைசாற்றும் இடங்கள், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சமயப் பெருமை உறையும் இடங்கள் பலவற்றுக்கு 'இந்தியன் ஏர்லைன்ஸ்' போக்குவரத்து வசதிகள் இல்லை. இம்மாதம், இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் மூன்றாம் நிலை கிளை வழி விமானப் போக்குவரத்துத் தொடங்கப்படுமென அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில், தமிழ்நாட்டிற்கென அளித்துள்ள செயற்குறிப்புக்கு மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்குமென மாநில அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

**32.** மதுவிலக்கு முக்கியமானதொரு சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாகும். எனினும், இதுபற்றி இந்த மாமன்றத்தில் பல்வேறு கருத்துக்கள் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன. நாட்டுமக்களுக்கு நலன் விளைவிக்கும் மதுவிலக்குக் கொள்கையை எந்த வகையில் சிறப்பாகச் செயற்படுத்தலாம் என்பதையும் இக்கொள்கையை மறுபரிசீலனை செய்வது அவசியமா என்பதையும் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை மனந்திறந்து தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**33.** அனைத்து நாடுகளிலும் நிலவும் நிலைமை காரணமாகப் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இவற்றின் விலையைக் கட்டுப்படுத்துவது நம் கையில் இல்லை. பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளமையால், பேருந்துக் கட்டணம் உயர்வதைத் தவிர்க்க இயலாது. எனவே, பேருந்துக் கட்டணம் உயர்வதற்கான நியாயமான காரணங்களை இம்மாநில மக்கள் ஏற்றுக் கொள்வர் என்று எனது அரசு நம்புகிறது.

**34.** எந்த ஒரு கொள்கையும் செவ்விய முறையில் செயல்பட வேண்டுமானால் நிர்வாகத்தைச் சீரமைப்பது இன்றியமையாததாகும். இந்தக் கொள்கையைச் செயலாக்கும் வகையில், சென்ற ஆண்டு அரசு வருவாய் வாரியத்தைக் கலைத்தது. இதன் தொடர்ச்சியாக, பகுதிநேர கிராம அதிகாரிகள் அமைப்பை, காலத்துக்கு ஒவ்வாத காரணத்தாலும், கிராம நிர்வாகத்தில் தற்கால தேவைகளை பூர்த்தி செய்ய இயலாததாலும், மாற்றியமைக்க முடிவு செய்தது. ஆகவே, இதற்காக அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்ட முன் வடிவு இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

**35.** எந்த அரசும் இயங்குவதற்கு வரி வசூலிப்புப் பணி மிகவும் இன்றியமையாததாகும். அரசுக்கு, உள்ளாட்சி மன்றங்களுக்கு, மாநில மின்சார வாரியத்திற்கு அல்லது கூட்டுறவுச்சங்கங்களுக்குச் சேரவேண்டிய அல்லது செலுத்தத்தக்க நிலவரி, வரிகள் ஏனைய தொகைகளைச் செலுத்தக் கூடாது என்று உழவர்களைத் தூண்டி வருவதும், ஒழுங்காக அரசுக்கு வரி செலுத்துவோரை துன்பத்துக்குள்ளாக்கி, பாதுகாப்பற்ற நிலை ஏற்படுத்துவதும் போன்ற சமூக விரோத செயல்களில் சில பிரிவினர், ஈடுபட்டு வருவது மாமன்ற உறுப்பினர்கள் அறிந்தவையாகும். கிளர்ச்சியை நடத்துபவர்கள், அரசுப் பணியாளர்கள் மீது வன்முறை நடவடிக்கை எடுக்குமாறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தூண்டி வருவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது அரசுக்கு விரோதமாகச் செய்யும் நடவடிக்கை என்பதாலும், அரசு அமைப்பையே குலைக்கக்கூடும் என்பதாலும், சட்டத்திற்குட்பட்டு வாழ்பவர்களுக்குத் தக்க பாதுகாப்பு தர வேண்டுவது ஒரு அரசின் தலையாய கடமை என்பதா

லும் இத்தகைய சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது அவசியமாயிற்று. ஆகவே, இவர்களின் நடவடிக்கைகளைச் சமாளிப்பதற்காக, 1980 நவம்பரில் அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, சட்ட வரைவு ஒன்று விரைவில் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும்.

**36.** 1979 டிசம்பர் 31ஆம் தேதி முடியும் ஆண்டில், ஆண்டு குடும்ப வருமானம் 4,800 ரூபாய்க்கு மேற்படாதவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டது. வறுமை நிலையிலுள்ள கடனாளிகளுக்கு மட்டுமே நிவாரணம் அளிப்பதுதான் இச்சட்டத்தின் நோக்கமாகும். ஆனால், இச்சட்டத்தின் சில விதிப்பிரிவுகளுக்குச் செல்வந்தர்கள் தங்களுக்குச் சாதகமாக பொருள்விளக்கம் கொள்கின்றனர். இக் குறைபாட்டை நீக்க, தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தினால் இச் சட்டம் திருத்தப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டவரைவு ஒன்று விரைவிலேயே சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும்.

**37.** அரசு நிர்ணயித்த கூலியை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல் அவர்களுக்கு வேலையில்லாமற் செய்ய, வேண்டுமென்றே நிலங்களை தரிசாகப் போடுவதும் உணவு வகைகளைப் பயிரிடும் நிலங்களில் சவுக்கு போன்ற பணப்பயிர்கள் பயிரிடுவதும் ஆகிய செயல்கள் ஒரு சில வசதி படைத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நடவடிக்கை மக்களிடையே உணவுப் பஞ்சத்தை உண்டாக்குவது மட்டுமல்லாமல், விவசாயத் தொழிலையே நம்பிவாழும் பல இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்களை அன்றாடம் பட்டினிபோடவும் செய்யும் செயலாகும். நல்ல நிலங்களைத் தரிசாகப் போட்டாலோ அல்லது உணவுப் பயிர்கள் பயிரிடுவதற்கு மாறாக உழவர்களைப் பட்டினி போடும் வகையில் சவுக்கு போன்ற வேறு பயிர்களை பயிரிட்டாலோ அத்தகைய நிலங்களை அரசு எடுத்து நிலமற்ற உழைக்கும் விவசாயிகளுக்குப் பங்கிட்டு கொடுக்கும் வகையில் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படும்.

**38.** வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலை இல்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின், அவர்களுக்கு முன்னுரிமை அளித்து ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை தர எனது அரசு நடவடிக்கை எடுக்கும். வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற மைய, மாநில அரசின் கொள்கையை ஒட்டித் தொடங்கும் முதல் முயற்சியாகும்.

**39.** இம்மாநிலத்தில் சட்டம், ஒழுங்கமைதி, குற்ற நிகழ்வு நிலைமை பொதுவாகத் திருப்திகரமாகவே யுள்ளது. தமிழ்நாட்டில் கடந்த ஆண்டில் வகுப்புக் கலவரங்கள், அவற்றையொட்டிய வன்முறைச் சம்பவங்கள் முந்தைய ஆண்டுகளைவிட குறைந்து வரும் தன்மை நமக்கெல்லாம் ஓரளவுக்கு மன ஆறுதல் தரத்தக்கதாகும். பொது அமைதிக்குப் பெரிதும் குந்தகம் விளைவித்து வந்த தீவிரவாதிகளின் தொல்லைகள் குறிப்பாக, வடார்க்காடு, தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளில் பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும், பொறுப்புகளையும் மிகவும் திறமையுடன் நிறைவேற்றுவதற்கு அவசியமான அறிவியல் சாதனங்களின் தரத்திறனையும் எண்ணிக்கையையும் மேம்படுத்துவதில் மேலும் கவனம் செலுத்த எனது அரசு முடிவெடுத்துள்ளது.

**40.** காவலர் நல நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டதன் காரணமாக, காவல் படையினரின் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் மனத்திட்பமும் உயரிய தன்மையிலேயே உள்ளன. இத்தகைய நல நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை, மலிவு விலையில் இன்றியமையாத பொருள்கள் வழங்குதல், இடர்படி வழங்குதல், காவலர் வீட்டு வசதிக் கழகம் ஏற்படுத்தல் போன்றவையாகும்.

**41.** சமுதாயத்தில் நலிந்த, எளிய பிரிவினர்மீது, குறிப்பாக, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை உறுதியோடு ஒடுக்கவேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்றே, மக்கள் உரிமை பாதுகாப்பு சட்டத்தின் விதிப் பிரிவுகளைச் செவ்வனே செயல்படுத்த, காவல் துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவித்தரத்தில், முதுநிலை அதிகாரி ஒருவரை அரசு அண்மையில் நியமித்துள்ளது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்மீது இழைக்கப்படும் குற்றங்களைத் தனியே விசாரித்து ஒடுக்குவதற்குத் தனிப்பட்ட காவல் பிரிவுகள் மாவட்டங்களில் இயங்குகின்றன. சமுதாயத்திற்கே பெருந்தீங்கு விளைவிக்கும் சமூக விரோத சக்திகள் செய்யும் குற்றங்களைப் பார்த்துக்கொண்டு அரசு வாளா இருக்காது. இத்தகைய கொடுமையான செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகள் மீது எனது அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

**42.** தமிழ்நாட்டு மக்களும், தமிழக அரசும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களாகிய நீவிரும் இணைந்து எடுத்துக்கொள்ளும் ஒத்துழைப்போடு எதிர்காலம் சிறந்து விளங்கும் என்று நான் திண்மையாக நம்புகிறேன். தோழமை உணர்வுடனும் ஒத்துழைப்புடனும் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி, ஏழை எளிய, உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தமிழகத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும் எல்லா வகையிலும் ஒன்றுபட்டு நின்று கடமையாற்றி வெற்றி பெறுவோமாக.

வணக்கம்.

(தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் ஆற்றிய உரை 21-1-1981)

## குடும்ப அட்டை வைத்திருப்பவர்களே!

# உங்களுக்கு, மேலும் சிறப்பாகப் பணிபுரிய எங்களுக்கு உதவுங்கள்!

### உங்கள் நலனுக்கு ஒரு விண்ணப்பம்!

அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்களை நியாய விலையில் பெற உங்கள் குடும்ப அட்டை உத்தரவாதமளிக்கிறது. எனவே, தொடர்புடைய அதிகாரிகள் பரிசீலிக்கும் போது, உங்கள் குடும்ப அட்டையை அவரிடம் காண்பிப்பது உங்களது கடமையாகும்.

*** சிலர் செய்யும் தவறுகளால், பலருக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய இன்றியமையாப் பொருட்கள் கிடைக்காமல் போய் விடுகின்றன.**

1955-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு இன்றியமையாப் பொருள் (குடும்ப அட்டைமூலம் விநியோகத்தை ஒழுங்கு படுத்தல்) ஆணை 1974ன்படி கீழ்க் கண்ட செயல்கள் குற்றமாகும்.

குடும்ப அட்டை

- இல்லாத ஒருவர் பெயரில் அல்லது பொய்ப் பெயரில் குடும்ப அட்டை பெறுவது அல்லது
- குடும்பத்தில் இல்லாத ஒருவர் பெயரை அல்லது கற்பனையான பெயரை குடும்ப அட்டையில் சேர்த்திருப்பது.
- வேறு ஒரு குடும்பத்திற்கு வழங்கப் பட்ட அட்டையில், சேர்க்கப்பட்டுள்ள நபரின் பெயரை மற்றொரு குடும்ப அட்டையில் சேர்த்திருப்பது.
- வேண்டுமென்றே தவறான அல்லது பொய்யான தகவல்கள் குடும்ப அட்டையில் இடம்பெற்றிருப்பது.
- குடும்ப அட்டையைப் பிறருக்கு மாற்றுவது அல்லது அடகுவைப்பது
- குடும்ப அட்டையை அதற்கு உரியவர்கள் உபயோகிக்காமல், மற்றவர்கள் உபயோகிப்பது.

மேற்கூறிய ஆணையின் 12-வது பிரிவுப்படி, கீழ்க்கண்டவைகளும் குற்றமாகும்:

- ஒருவர் பெயர் ஏற்கனவே ஒரு குடும்ப அட்டையில் இடம் பெற்றிருப்பது தெரிந்தும், தவறான முறையில் அவர் வேறொரு குடும்ப அட்டை பெற விண்ணப்பிப்பது அல்லது பெறுவது.
- தவறான தகவல் தந்து குடும்ப அட்டை பெறுவது.
- சட்டபூர்வமான- அங்கீகாரமின்றி குடும்ப அட்டையில் திருத்தங்கள் செய்வது அல்லது அழிப்பது.

## *பொதுமக்கள் கவனத்திற்கு*

**குடும்ப அட்டையைப் பெறவும், அதில் மாற்றங்கள் செய்யவும், உணவுத் துறை உதவி ஆணையரின் அலுவலகத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள். வேறு எந்த நபரின் உதவியையும் நம்பி ஏமாறாதீர்கள்!**






**இயக்குநர். செய்தி. மக்கள் தொடர்புத்துறை, சென்னை 600 009.**



# ஆருயிர் காக்க அரியதோர் திட்டம்!

## மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. குழந்தைவேலு

''மண்டினி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்பது மணிமேகலை. ஒரு சாண் நீளமே வயிற்றின் மொத்த அளவு என்றாலும் கூட—அந்த வயிற்றில் தோன்றுகின்ற பசி என்னும் ஒரு பாவி ஏற்படுத்துகின்ற தீமைகள் மற்றும் உருவாக்குகின்ற பிரச்சினைகளுக்கு அளவு கிடையாது.

உண்ண உணவும், உடுக்க உடையும், தங்குவதற்கு வீடும்—மற்றும் இடர்ப் பாடில்லா வாழ்வையும் ஒவ்வொரு குடிமகனுக்கு ஏற்படுத்தித் தரும் பொறுப்பை ஆளுகின்ற அரசு ஏற்கத்தான் வேண்டும். தமிழகத்தில்—குறிப்பாகக் கிராமப்புறங்களில் வாழும் மக்களுக்கு வாழ்வின் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் ''தன்னிறைவுத் திட்டமும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் களையும் தேசிய கிராமப் புறவேலை வாய்ப்புத் திட்டமும்'' தீவிரமாக செயல்பட்டு வரும் இந்நேரத்தில்—வறுமைக் கோட்டின் அடிமட்டத்திலே உழலும் மக்களின் பசியையும் உடனடியாக அறவே அகற்ற விரும்பும் தமிழக அரசு இப்போது அறிமுகப்படுத்தியுள்ள மற்றொரு நல்வாழ்வுத் திட்டம்தான், ''பட்டினிச் சாவுத் தடுப்புத் திட்டம்''.

''பட்டினிச் சாவுத் தடுப்புத் திட்டம்'' என்று இத்திட்டத்தின் பெயரைக் கேட்டதுமே... தமிழகத்தில் பட்டினிச்சாவு ஏற்பட்டுள்ளது போலும்.'' என்று எண்ணி விடுவது பொருத்தமற்றது. பட்டினி காரணமாக தமிழகத்தில் சாவுகள் ஏற்பட வழியில்லை. பின் ஏன் இந்தத் திட்டம்.....?'' என்ற வினா எழுப்பலாம்.

அரசின் உதவிகளைப் பெற இயலாமலும்—அல்லது பெறத் தெரியாமலும் உள்ள ஆதரவற்றோருக்கு அரசே வலிய உதவ வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இந்தத் திட்டம் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென அண்மையில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் கிராமப்புறங்களில் எவ்வித ஆதரவும் இன்றி பசியால் வாடும் நிலையில் யாரேனும் இருந்தால், அவருக்கு, பட்டினி காரணமாக இறக்க நேரும் வாய்ப்பைத் தடுக்க ரூ. 100 (ரூபாய் நூறு) உதவித்தொகையாக அளிக்கப்படும். பட்டினியோடு இருப்பவர்கள் ''எங்கே, எந்த அதிகாரியைச் சந்தித்து எப்படி இவ்வுதவித் தொகையைப் பெற இயலும்?....பட்டினியால் எங்கோ ஒதுங்கிக் கிடக்கும் அவரால் ஊராட்சி ஒன்றியம் வரை செல்ல இயலுமா?...'' என்ற ஐயம் முதற்கண் எழலாம். எனவே இத்தகையோருக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் ஆற்றவேண்டுமென ஊர்நல அலுவலர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளார்கள். யாரேனும் தொடர்ந்து பட்டினியால் வாடினால் அவர் ஊர்நல அலுவலரை அணுகி முறையிட்டுக் கொள்ள வேண்டும்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் அனுமதிக்குப் பின்னர், இவ்வுதவித் தொகை அளிக்கப்பட, பாதிக்கப்பட்டவரை ஊராட்சி ஒன்றியத்திற்கு அழைத்து வர ஆகும் பயணச் செலவையும்கூட முதலில் ஊர்நல அலுவலரே ஏற்றுக் கொள்வார்.

இவ்வாறு அளிக்கப்படும் இவ்வுதவித் தொகை ஒரு தற்காலிக உடனடி நிவாரணம் தான். நூறு ரூபாயை அளித்ததும் பட்டினியால் வாடியவரின் பிணி முழுவதும் நீங்கி விடாது. நீக்கவும் முடியாது—எனவே அவர் இனிமேலும் பட்டினியால் வாடாமல் இருக்க வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்று விரும்பிய அரசு அதற்கும் வழி வகைகளைச் செய்துள்ளது.

இந்த உதவித் தொகையைப் பெறுகின்றவர் உடல் உழைப்புக்கு ஏற்றவராக இருந்தால் அவரின் பெயர் ''வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தில்'' பதிவு செய்யப்பட்டு மிக விரைவில் அவருக்கு வேலை அளிக்கப்படும். உதவித்தொகையைப் பெறுகின்றவர் உடல் உழைப்புக்கு ஏற்றவராக இல்லாமல்-முதியோர் ஓய்வூதியம்'' பெறும் தகுதி அவருக்கு இருக்குமாயின்—அந்த ஓய்வூதியம் அவருக்கு வழங்கப்பட உரிய நடவடிக்கையும் உடனே மேற்கொள்ளப்படும்.

மொத்தத்தில், கிராம வாழ் மக்கள் வாழ்வில் நாட்டம் மிகக் கொண்டு திகழும் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ள இத்திட்டம், இச்சமுதாயத்தில் பட்டினி காரணமாக எவரும் வருந்தலாகாது— என்ற நல்லெண்ணத்தின் வெளிப்பாடேயாகும்.

# உங்கள் முதல் குழந்தைக்கு உரியவை கிடைக்காமல் செய்து விடாதீர்கள்

முதலாவது குழந்தைக்கும் இரண்டாவதற்குமிடையில் மூன்றாண்டுகள் இடைக்காலம் விடுங்கள்



முதல் மூன்றாண்டுகள், குழந்தையின் உள-உடல் வளர்ச்சிகளுக்கு உயிர்நாடி போன்றவை. இக்காலத்தில் அவனுக்கு உங்கள் முழு அன்பும் கவனிப்பும் தேவை.

அவனது வளர்ச்சிக் காலமான இந்த மூன்றாண்டுகளில், மற்றொரு குழந்தையின் பொறுப்பில்லாமலிருந்தால் தான் உங்களால் அவனை குறையற கவனிக்க முடியும்.

குழந்தைகளுக்கிடையில் இடைவேளை ஏற்படுத்துவதற்கு உதவுபவை

## நிரோத், மாத்திரைகள் அல்லது லூப்

மேற்கொண்டு விவரங்களுக்கு அருகிலுள்ள சுகாதார நிலையத்தை அணுகுங்கள்

## உங்கள் குழந்தைக்கு முதல் மூன்றாண்டுகளுக்கு முழுக் கவனம் அளியுங்கள்

davp 80/245

தெள்ளுதமிழுக்கு மதுரை திருநகரிலே மாநாடு நடத்திய சூட்டோடு சூடாக தெய்வநெறிப் புலவன் வள்ளுவனுக்கு சென்னையிலே சிறப்பான விழா எடுத்துப் போற்றியது தமிழக அரசு!

உலகமொழிகளில் உயர்தனிச் செம்மொழியான தமிழுக்கு— உலகத் தமிழ் மாநாடு கண்டு உலகத்துப் பேரறிஞர்களெல்லாம் வந்து கூடிட வகைசெய்த தமிழக அரசின் தொண்டைப் பாராட்டிய தமிழறிஞர்கள், உலக இலக்கியங்களிலெல்லாம் அறநெறியை - வாழ்வு நெறியைப் போதிக்கும் அற்புத இலக்கியமான திருக்குறளைத் தந்த வள்ளுவனுக்கு அரசு எடுத்த விழாவையும் கண்டு பாராட்டினர்.

வள்ளுவனுக்கு எடுக்கப்பட்ட விழாவிலும் பெரும் புலவர்களை தமிழக அரசு மறந்துவிடவில்லை என்பது போற்றிப் பாராட்டக் கூடிய சிறப்பு அம்சமாகும்!

''காலத்தால் அழிக்க முடியாத கருத்துக் கருவூலம் 'திருக்குறள்' அதை உலகினுக்குத் தந்த ஒப்பற்ற புலவர் திருவள்ளுவர்'' என அவர் புகழ்ந்துரைத்தார்.

விழாவுக்கும் கருத்தரங்கிற்கும் தலைமை ஏற்ற மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் பேசுகையில்—

''உலக இலக்கியங்களில் ஒன்றாக ரஷ்ய மக்களால் போற்றப்படும் உயர்ந்த இலக்கியமாகத் திருக்குறள் திகழ்கிறது'' என்று குறிப்பிட்டார்.

இலக்கியத்தில் புகழேந்தி நிற்கும் திருவாளர்கள் தா. பாண்டியன், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை சுந்தரேசனார், டாக்டர் முருகரத்தினம், திருமதி அரசு மணிமேகலை ஆகியோர் தனித்தனித் தலைப்புகளிலே சிறப்புரையாற்றி கருத்தரங்கைக் கவின்பெறச் செய்தனர்.

''கண்ணும் புண்ணும்'' என்னும் தலைப்பில் பண்ணும் பாவமும் பின்னி விளையாட இன்னிசை மழை பொழிந்தது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் தலைமையேற்க தமிழ் வளர்ச்சிக் கழகத்தினரால் உருவாக்கப்பட்ட ஆறு பெரும் நூல்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது.

நூல்களை நீதிபதி திரு. எஸ். மகராஜன் அவர்கள் அறிமுகப்படுத்தி உரை நிகழ்த்தினார்.

''பதிற்றுப் பத்து''

''அணிலாடு முன்றில்''

''ஞானரதம்''

ஆகிய தமிழ் நூல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்களும்





# திருவள்ளுவர் நாள் விழா

தமிழர் திருநாளையொட்டியே தமிழிலக்கியத்தின் தலை இலக்கியமான குறளைத் தந்த வள்ளுவரின் விழா அண்மைக் காலமாக அரசினால் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜனவரி 15ஆம் நாள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவப் பெருந்தகைக்கு விழா கொண்டாடப்பட்டது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் கல்வித்துறை ஆணையர்— அரசுச் செயலாளர் திரு. சி. இராமதாசு, இ. ஆ. ப. வரவேற்றார்.

விழாவை மேதகு தமிழக ஆளுநர் சாதிக்அலி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

திருக்குறளார் வீ. முனுசாமி அவர்களை நடுவராகக் கொண்டு நடைபெற்ற வழக்காடு மன்றம் நகைச்சுவையோடும் - நயமான முறையிலும் அமைந்திருந்தது.

''ஊழ் மனித வாழ்க்கையை நடத்திச் செல்கிறது என்பது குற்றம்'' என்று பேராசிரியர் ஞானசுந்தரம் வழக்காட டாக்டர் அவ்வை நடராசன் எதிர் வழக்காடி வள்ளுவத்தின் மாண்பை விளக்கினார்— விளக்கேற்றி வைத்தார்.

பிற்பகல் விழா நிகழ்ச்சியின் தொடக்கமே வில்லுப்பாட்டாக- அதுவும் கலைமாமணி திரு சுப்புஆறுமுகம் அவர்களின் வில்லுப்பாட்டாக அமைந்தது.

''சிவானந்த நடனம்''

''தீர்க்கதரிசி''

''சோவியத் கவிஞர் சுற்றுலா'

ஆகிய ஆங்கில நூல்களின் தமிழ் மொழியாக்க நூல்களும் விழாவில் வெளியிடப்பட்டன.

இந்த நூல்களை மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் வெளியிட்டார்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் நூல்களை பெற்றுக்கொண்டு பேசுகையில்,

''மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டு அதை

நான் பெற்றுக் கொள்ளப் பேறு பெற்றமைக்குப் பெருமையடைகிறேன். இந்தப் பெருமை அனைத்தையும் அவருக்கே காணிக்கையாக்குகிறேன்'' என்றுரைத்து தமக்களிக்கப்பட்ட நூல்களையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கே காணிக்கையாக்கினார்.



'ரசிகமணி டி. கே. சி.' எழுதிய கடிதங்களின் தொகுப்பு நூலை திரு மீ.ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் அறிமுகப்படுத்திப் பேசினார்.

விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் மாண்புமிகுகல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் ''தமிழகத்திற்கு மட்டும் வள்ளுவர் சொந்தமில்லை. இந்த உலகத்திற்கே அவர் சொந்தமானவர். அந்த அளவுக்கு அவரது புகழ் பரவி இருக்கிறது'' என்றார்கள்.



இந்த விழாவில் பெருமையின் சிகரத்தை எட்டிப் பிடித்த பெரும் புலவர் வள்ளுவரைப் பாராட்டிய தோடல்லாமல் 'வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் முப்பது புலவர்களுக்கு முதல் அமைச்சர் உதவிப் பணத்திலிருந்து மாதம் தலா ரூ. 250 வழங்கப்பட்டது.

வறுமையில் வாடிய தமிழறிஞர்கள் இனி வாழ்நாள் முழுதும் இந்த உதவிப் பணத்தைப் பெறுவார்கள். சிறந்த தமிழ் நூல்களை வெளியிட்ட ஐம்பெரும் தமிழறிஞர்களுக்கு அவர்கள் தொடர்ந்து நூல்களை வெளியிடவும் அரசின் சார்பில் முதல் அமைச்சர் உதவிப் பணம் வழங்கினார்.

இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில்,

''திருக்குறளை இந்தியாவின் தேசிய நூலாக ஆக்க வேண்டுமென்ற கருத்து உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பட்டது. அதை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென மத்திய அரசுக்கு தமிழக அரசு எழுதும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும். ஏனென்றால் ஒரு மதத்தினருக்கோ- குறிப்பிட்ட சாதியினருக்கோ என்று இல்லாமல் மனித சமுதாய முழுமைக்குமாக எழுதப்பட்ட நூல் திருக்குறள். அப்படிப்பட்ட நூல் இந்தியாவின் தேசிய நூலாக ஆக்கப்படுவதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்கவே' முடியாது'' என்றார்.

''வறுமையில் வாடும் தமிழறிஞர்களுக்கு அளிக்கப்பட்ட உதவிப் பணத்தை 100 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கிறோம். இந்தத் தொகை போதுமா என்றால் போதாது. இது பற்றியும் தமிழக அரசு ஆலோசித்து வருகிறது.

''எங்கும் தமிழ் - எதிலும் தமிழ்'' என்ற உன்னத நிலையை உருவாக்குவோம். தமிழை நம்பி வாழ்பவர்களுக்குத் தொழில் வாய்ப்புக் கிடைப்பதற்கு அரசு புதிய திட்டத்தைச் செயல்படுத்த விரும்புகிறது'' புதிய நூல்கள் வெளியிடுவதில் - மேலும் அதன் எண்ணிக்கை உயர வேண்டும் என்று'' குறிப்பிட்டதோடு—

ரசிகமணி டி. கே. சி. யின் நூற்றாண்டு விழாவை அரசு கொண்டாடும் என்ற அறிவிப்பையும் வெளியிட்டார்.

தமிழ் மொழிக்கும் - அந்தத் தன்னேரில்லாத மொழியை வளர்த்து வரும் தமிழ்ப் புலவர் பெருமக்களுக்கும் தண்ணிழல் தந்துவரும் தருவாக தமிழக அரசு விளங்கி வருகிறது.

தமிழுக்குப் பொற்காலத்தை உருவாக்கும் அரசாக - தமிழ் அன்னையைப் புதுக்கோலம் பூணச் செய்யும் அரசாகத் திகழ்ந்து வருகிறது என்பதற்கான அரிய எடுத்துக் காட்டாகவே வள்ளுவர் விழா அமைந்தது!

தொகுப்பு: அனந்தன்

# பண்பாட்டுப் பரிமாற்றம்

ஜே. தேவசகாயம்
கல்வித்துறை, தலைமைச்செயலகம்,
சென்னை.

அகிலம் வியக்க ஐந்தாம் தமிழ் மாநாடு கண்ட தமிழகம், தன் தலைநகரில் ஒரு ஆறாம் மாநாட்டுக்காக ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது. அளவில் சிறிய இம்மாட்டின் நோக்கம் மிகப் பெரியது. பாரதியும் தாகூரும் தங்கள் கனவுகளைக் கவிதையாக்கினர். அக்கவிதைகளை வரலாறாக்கினார் அமரர் நேரு. ஆண்டுதோறும் குடியரசு திருநாளிலும், விடுதலைநாள் விழாவிலும் இந்தியத் தலைநகரில் எல்லாக் கலைஞர்களும் கூடுவர். ஆடுவர், பாடுவர். ஆங்கே ஒயிலும் பாங்க்ராவும் ஒருமித்து ஆடப்படும். ஹோலியும், பொங்கலும் ஒன்றாகக் காட்சி தரும். எல்லை வாழ் மலை மக்கள் ஆடுவது இதயங் கவர்கின்ற எழில் காட்சியாகும்.

1952-ஆம் ஆண்டு இத்தகைய மகிழ்ச்சியான ஒரு விழா நாளன்றுதான், உயர்ந்த நோக்கங்களுக்காகப் பிறந்தது ஒரு உன்னதமான திட்டம். ''பாரதநாடு பழம்பெரும் நாடு நீரதன் புதல்வர்! இந்நினைவகற்றாதீர்'' என்ற பாரதியின் பாடலை நினைவூட்டும் நிகரில்லா திட்டம் அது. ஒருமைப்பாட்டுக்குப் பெருமை சேர்க்கும் ஒரு ஒப்பில்லாத் திட்டம். பண்பாட்டைப் பரிமாற்றம் செய்வதுடன், அதைப் பாதுகாக்கவும் செய்யும் ஒரு பலமான திட்டம். அதுவே, ''மாநிலங்களிடையே கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டம்.''

முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் எனில்
சிந்தனை ஒன்றுடையாள்
எங்கள் தாய்! எங்கள் தாய்!

எம்மொழியாயினும், எம்மதமாயினும், எவ் இனமாயினும், வரவேற்பதுடன் மட்டுமல்லாமல் வாழவும் வைப்பாள் பாரதத்தாய். எனவேதான் உலகில் வேறெந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு இந்திய மண்ணில் பல்வேறு இனங்கள், மொழிகள், சமயங்கள் தோன்றி தழைத்துச் செழித்தோங்கியுள்ளன. இத்தனை வேற்றுமைகளுக்கிடையே இழைந்து செல்லும் ஒரு சிந்தையே ஒருமைப்பாட்டுணர்வு. இந்த உணர்வில்தான் இந்தியா எனும் பெரிய நாடே நிற்கிறது. இவ்வுணர்வை வளர்ப்பதுதான் இணையில்லாத கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டம்.

இத்திட்டத்தின் மூலம் காஷ்மீரின் குரல் கன்னியாகுமரியிலும், கங்கையின் ஓசை காவிரியிலும், சிந்து நதியின் சந்தம் சேர நாட்டிலும் ஒலிக்கும். மொழி வழியே இப்பரிமாற்றம் இயலாது. வேறெந்த சாதனத்தால் இயலும்? ஒரு மொழியால் உண்டு பண்ண இயலாத விளைவுகளை ஏற்படுத்தி, உள்ளத்து உணர்வுகளை உண்மையாகவே பரிமாற்றம் செய்து கொள்ள, மொழியில்லாத, மொழிகளுக்கெல்லாம் பெரிய மொழியான உள்ளத்து மொழியான கலையே அந்தச் சாதனமாகும். அந்தக் கலைப் பரிமாற்றமே பல விந்தைகளை நிகழ்த்தும் என்பதற்குச் சான்றாக அண்மையில் நடந்தது ஒரு நிகழ்ச்சி!

கடந்த ஆண்டு, அரியானா மாநிலக் கலைக்குழு தமிழகத்தில், தர்மபுரி மாவட்டத்தில் கலை நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருந்தது. வடபுலத்தில் புகழ் வாய்ந்த ''பாங்க்ரா'' எனும் நடனம் ஆடப்படும்போது காணவந்த மக்களுள் பலபேர் ஆடத்தொடங்கினர். கலை நிகழ்ச்சி முடிந்தது. தமிழகத்துக் காவடி ஆட்டம் விருந்தினர்களைச் சிறப்பிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது. சிறுவன் ஒருவன் சிறப்பாக ஆடினான். பார்வையாளர்களைச் சொக்க வைத்தான் அந்தச் சின்னஞ் சிறுவன். அரியானா கலைஞர்கள் அனைவரையும் ஆட வைத்தான்! தமிழ் மக்கள், அரியானா கலைஞர்களுக்கு அணிவித்த மாலைகள் அத்தனையும் அந்தச் சிறுவனின் சிறிய தோளினை அலங்கரித்தன.

ஒரு மாநிலம், தனது கலைக்குழுவை இரண்டு பிற மாநிலங்களுக்கு அனுப்பி, தனது நிலத்தின் கலையுணர்வைக் காட்டி வரும். மாற்றாக தனது மாநிலத்தில் இரண்டு பிற மாநிலங்களின் கலைக்குழுக்களை வரவேற்று கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யும். கலைஞர்கள் ஒரு மாநிலத்தில் எட்டு கலை நிகழ்ச்சிகள் நடத்தி, பதினைந்து நாட்களுக்குப் பிறகு சொந்த மாநிலம் திரும்பும் போது, மாசில்லா அன்பையும் மாறாத நினைவுகளையும் சுமந்து செல்கின்றனர். அவர்கள் விடைபெறும் காட்சியே ஒரு விவரிக்க முடியாத காவியமாகும். கண்ணீர்ப் பெருக்கெடுக்க, நன்றி நவில நா நடுங்க பிரிந்து செல்ல மனம் நடுங்க, உணர்ச்சி வெள்ளத்தில் திணறியவாறு புறப்படும் காட்சி.. உயிரோட்டமான ஒன்றாகும்!

மத்திய அரசு, பயனுள்ள இத்திட்டத்தை மிகவும் சிறந்த முறையில் செயல்படுத்தி வருகிறது. கலைக்குழுக்களை வரவேற்கும் மாநிலத்துக்கு உயர்ந்தபட்சம் ரூ. 6,000 வரையிலும், அனுப்பி வைக்கும் மாநிலத்துக்கு ரூ. 25,000 வரையிலும் நிதியுதவி வழங்குகிறது. வரவேற்கும் மாநிலம் எட்டு கலை நிகழ்ச்சிகளை எட்டு மாவட்டங்களில் நடத்த ரூ. 6,000 போதாதென்பதால், இக் கலை நிகழ்ச்சிகளைக் காணவரும் பொதுமக்

களிடம் குறைந்த பட்ச கட்டணம் வசூலிக்கவும் மாநில அரசுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு தொடர்பு அலுவலர் இருப்பார். இந்தியாவின் எல்லா மாநிலத் தொடர்பு அலுவலர்களும் ஆண்டுக்கு ஒரு முறை ஒரு மாநிலத்தில் கூடுவர். செயல் முறைகள், கலைப் பயண நிகழ்ச்சிகள், வளர்ச்சிக்கான கருத்துக்கள், இம்மாநாட்டில் பேசப்பட்டு ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரலை நடப்பாண்டுக்கு வரைவார்கள். இம்முறை, ஆறாம் அனைந்திந்திய தொடர்பு அலுவலர்கள் மாநாடு சென்னையில் இராசாசி மண்டபத்தில் 5-2-1981 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் தொடங்கப் பெற்று 6-2-1981 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் நிறைவாக்கப்படுகிறது. இத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழகம்தான் முதலில் நிற்கிறது.

வரையறுக்கப்பட்ட இரண்டு மாநிலங்களை அழைப்பதோடு மட்டுமின்றி வருகை வர விரும்பும் மாநிலங்களையும் பேருவகையுடன் வரவேற்று வருகிறது, தமிழகம். கலைத் தாயின் தலைமகன் தலைமையில் தமிழகம் ஏறுநடை போடும் இத்தருணத்தில் கலைத் தொடர்பான இம்மாநாடு நடைபெறுவது சாலப் பொருத்தமானதன்றோ?

ஒரு உன்னதமான திட்டம் உருவாகிட பாதை வகுக்கக் கூடுகிறது.—இம்மாநாடு

வானிலிருந்து வாழ்த்துகிறான் வண்டமிழ்க் கவிஞன்; பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி :—

''சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டி விளையாடி வருவோம்.''

## உலக ஊனமுற்றோர் ஆண்டு 1981

# ஊனமுற்றோர் மறுவாழ்வு



- ஊனமுற்றோரிடம் காட்ட வேண்டியது பரிவுக் கண்ணீர் அல்ல, உறவுக் கரங்களே!
- பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து ஆழ்வினையின்மை பழி.
- ஊனம் என்பது உறுப்புக் குறைவே; அது ஞானக் குறைவன்று.
- ஊனமுற்றோர் உங்களிடம் வேண்டுவது அனுதாபமன்று; அறிவார்ந்த அணுகுமுறையே!
- பயிற்சியால் பழுதைப் போக்கலாம்; அது பாசத்தில் கலந்து முழுமையாக்கலாம்.
- வருமுன் காப்பதே வாழ்க்கை.
- முடம் என்பது திருத்த முடிவது; முயற்சியே அதற்கு முதலீடாகும்.
- ஊனத்தால் ஞானம் உயர்வதும் உண்டு.
- கண் இழந்தும் கண்டவர்கள் காசினியில் உண்டு.
- ஊனமுற்றதால் யான் உளம் வருந்தவில்லை;
  உண்மை, உழைப்பின் உயர்வைத் தெரிந்திட
  ஞான வாயிலாய் அமைந்தது ஊனமே!
  —ஹெலன் கெல்லர்.
- ஊனமுற்றோர் துயர் காணா உளமென்ன உளமே !
  உருகியவர்க்கு உதவுவதால் உண்டாகும் வளமே !
- உடல் முடமானாலும், உள்ளம் முடமாகாது.
- சிங்கத்தின் கால்கள் பழுது பட்டாலும்
  சீற்றம் குறைவதில்லை.
  அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும், ஆற்றல்
  குறைவதில்லை.
- உறுப்புகள் மனிதனை உருவாக்குவதில்லை ;
  உணர்வுகளே அவனை நிறைவாக்குகின்றன.
- ஒதுக்காமல் எங்களுக்கு வாழ்வு தாருங்கள்
  உயரிய உழைப்பே வழங்குவோம் நாங்கள்.

# மொழி ஞாயிறு



பளபளப்பான கருத்த முகம்; ஒளிநிரம்பி வழியும்கூரியவிழிகள்; அகன்று ஏறிய நெற்றி. அடர்த்துச் சிலிர்க்கும் அரிமா மீசை; ஏக் கழுத்து; பீடுநடை; பெருமிதமான உடை, அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம் - இவற்றின் மொத்த உருவம்தான் பாவாணர் அவர்கள்.

நெல்லை மாவட்டத்தில் சங்கரநயினார் கோவில் என்னும் ஊரில் திருவாளர்கள் ஞானமுத்து, பரிபூரணம் ஆகிய பெற்றோருக்குத் தி. பி. 1933 சுறவம் 26 (7-2-1902) ஆம் நாள் மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் பிறந்தார். பண்டிதர், புலவர், வித்துவான், கலைமுதுவர் ஆகியவற்றைத் தேறி முப்பத்து நான்காண்டுகள் பல்வேறு கல்வி நிலையங்களில் பணியாற்றிய பாவாணர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறையில் ஐந்தாண்டுக் காலம் பணி புரிந்தார்.

பிறமொழித் தாக்கத்திலிருந்து தமிழைப் பாதுகாக்கத் தமிழ்க்கடல் மறைமலையடிகளார் வழியைப் பின்பற்றி உலகத் தமிழ்க் கழகம் கண்ட பெருமைக்குரியவர் பாவாணர்.

அவர்தம் கடுமையான உழைப்பாலும், உண்மை காணும் அவாவாலும் கடந்த அறுபதாண்டுக் காலத்தில் மறைந்து கிடந்த பல தமிழுண்மைகள் வெளிப்பட்டன.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டகத்தின் இயக்குநராகப் பணியாற்றிய பாவாணர் அவர்கள் 16-1-1981ல் அதிகாலையில் காலமானார்.

பாவாணர் எழுதியுள்ள நூல்கள் :

1. ஒப்பியன் மொழி நூல்
2. முதல் தாய் மொழி
3. சுட்டு விளக்கம்
4. திரவிடத் தாய்
5. இயற்றமிழ் இலக்கணம்
6. செந்தமிழ்க் காஞ்சி
7. தமிழர் திருமணம்
8. பழநதமிழாட்சி
9. கட்டுரை வரைவியல்
10. தமிழ்நாட்டு விளையாட்டுகள்
11. உயர்தரக் கட்டுரை இலக்கணம் (2 பாகம்)
12. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு.
13. தமிழ் வரலாறு
14. தமிழர் வரலாற்றுச் சுருக்கம்.
15. கட்டுரை கசடற
16. மண்ணில் விண் அல்லது வள்ளுவர் கூட்டுடமை
17. பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும்.
18. இசைத் தமிழ்க் கலம்பகம்
19. சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
20. வடமொழி வரலாறு.
21. தமிழர் வரலாறு
22. தமிழர் மதம்
23. திருக்குறள்-தமிழ் மரபுரை
24. தமிழிலக்கிய வரலாறு
25. வண்ணனை மொழி நூலின் வழுவியல்.
26. The Primary Classical Language of the World.



# கலைத் திறமைக்குத் தலை வணங்குவோம்!

சென்னை அண்ணாசாலையிலுள்ள, விக்டோரியா டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்டிலுள்ள ஒரு மண்டபம்.

பரிசளிப்பு விழா நடக்கிறது.

அதோ, ஒரு இளைஞர் பரிசு பெற வருகிறார். அவர் முகத்தில் மகிழ்ச்சி கொப்பளிக்கிறது. பரிசு பெறுகிறார். பெருமிதத்துடன் திரும்புகிறார். யார் அவர்?

வி.டி.ஐ. என்று புகழப்படும், விக்டோரியாடெக்னிக்கல் இன்ஸ்டிடியூட்டின் சார்பில், கடந்த ஆண்டு அக்டோபர் திங்களில் ஓவியக் கண்காட்சி நடந்தது. அதில் சுமார் 217 ஓவியங்கள் - சித்திர வேலைப்பாடுகள் உள்ள கலைப் பொருள்கள் இடம் பெற்றிருந்தன. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரம், கேரளா ஆகிய மாநிலங்களிலிருந்து ஓவியர்கள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டார்கள்.

இவர்களின் கலைப்படைப்புகளுக்குத்தான் 10.12.80 அன்று பரிசளிப்பு விழா நடந்தது.

முதல் பரிசு பெற வந்த இளைஞர்தான் திரு டி.கே. மூர்த்தி என்னும் கை வினைஞர். 26 வயதான இவர், சென்னைக்கு அருகாமையிலுள்ள திருமழிசையைச் சேர்ந்தவர். இவரது கைவண்ணத்தால் உருவான அந்தக் கலைப் பொருள் தான், சந்தன மரத்தாலான 'தசாவதாரம்' என்னும் மிக நுண்ணிய வேலைப்பாடு. இதுவே போட்டியில் முதல் பரிசைத் தட்டிச் சென்றது. இதன் விலை எவ்வளவு தெரியுமா? ரூ 9,900.

அன்று நடந்த இந்த விழாவுக்கு, மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி பு.ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''மகாத்மா காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 1964 ஆம் ஆண்டு முதல் இந்தக் கண்காட்சி நடந்து வருகிறது. தென்னகத்திலுள்ள 4 மாநிலங்களில் உள்ளவர்கள் பங்கேற்று பல்வேறு கைவினைப் பொருள்களை அனுப்புகிறார்கள். சிறந்தவைகளுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. கைவினைஞர்களை ஊக்குவிக்கவே இந்தப் பரிசுகளை வழங்குகிறோம்.''

கைவினைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கி மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''மகாத்மா காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி வழங்கப்படும் பரிசுகளைக் கைவினைக் கலைஞர்கள் இங்கே பெருமிதத்துடன் பெற்றுச் சென்றனர். அவர்களது கலைத் திறமைக்கு நாமெல்லாம் வணக்கம் தெரிவிக்கவும், பாராட்டு தெரிவிக்கவும் கடமைப்பட்டு இருக்கிறோம்.

''எவ்வளவோ திறமைகள் எங்கெங்கோ மறைந்து இருக்கின்றன. சுற்றுச் சார்பு, சூழ்நிலை அப்படிப்பட்டவர்கள் வாய்ப்பு வசதி இல்லாமல் இருக்கிறார்கள். அப்படி இருப்பவர்களை இங்கே அறிமுகம் செய்து வைக்கிறார்கள். இது ஒரு துணிச்சலான செயல்தான்.

''சந்தனமரத்தால் தசாவதார அமைப்பை உருவாக்கியவர் இங்கே சிறப்புப் பரிசு பெற்றிருக்கிறார். அதை உருவாக்கிய அவரது கற்பனையை வியக்கிறேன்.''

முதல் பரிசு பெற்ற திரு மூர்த்திக்கு ரூ. 2000மும், சான்றிதழும் முதல்வர் அவர்கள் வழங்கினார். திருவாளர்கள் டி. டி. ஜார்ஜ் (ரூ. 32,000 மதிப்புள்ள யாளியை உருவாக்கியவர்) ஆர்.பி.ராஜு, எம். சுப்பிரமணியாச்சார், பி.பி. சுரேந்திரநாத், மாதவன்பிள்ளை, நாகராஜன் ஆகிய ஆறுபேர்களுக்குத் தலா ரூ. 1000 வழங்கி மாலையும் அணிவித்தார் முதல்வர் அவர்கள்.

இந்தவிழாவில், ஒருவர் ஓவியர் தமது கலைப்படைப்பு ஒன்றை முதல்வர் அவர்களுக்குப் பரிசாக வழங்கினார். அந்தப் படைப்பினை உற்று நோக்கினால், பேரறிஞர் அண்ணா அவர்கள் மரமாகவும், முதல்வர் அவர்கள் கிளையாகவும் சித்திரித்திருப்பது தெரியவரும்.

இதைப் பெற்றுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், ''இதைத் தமிழக அரசின் சொத்தாக ஆக்குகிறேன். ஆட்சியில் யார் இருந்தாலும்; தலைமைச்செயலகத்தில் இது வைக்கப்படும்'' என்றார் பெரு மகிழ்ச்சிக்கிடையே!

—பி. வி. கிரி






# மன்னன் - திருமலை ஒலி - ஒளிக்காட்சி

தொகுப்பு: தமிழ்ப்பித்தன்

மதுரையில், கீழமாசி வீதியும், தெற்கு மாசி வீதியும் சந்திக்கும் இடத்திலிருந்து சற்று தூரத்தில் உள்ளது மன்னன் திருமலைநாயக்கர் மகால்.

252 அடி அகலமும் 151 அடி நீளமும் பரப்பளவுள்ள திறந்தவெளிவளாகத்தை உடைய இந்த மாளிகை வனப்பும் வசீகரமும் மிக்கது. அடுக்குப் படல் செங்கல்லால் ஆன மேல்விதானம் நாற்பதடி உயரத் தூண்கள் பலவற்றால் தாங்கப்பட்டுள்ளது. வளாகத்தின் நான்காவது பக்கம் 105 அடி அகலமுள்ளது. அதன் குவிமாடக்கூரை 16 அடி அகலமும், 72 அடி உயரமும் உடையது.

இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாளிகை கி.பி. 1636ஆம் ஆண்டில், நாயக்க மன்னர்களுள் நாயகனாய்த் திகழ்ந்த திருமலை நாயக்கரால் கட்டப்பட்டதாகும்.

இந்த மாளிகையிலேதான் மன்னன் திருமலை நாயக்கரின் ஒலி-ஒளிக் காட்சி தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது-ஐந்தாவது உலகத் தமிழ்மாநாட்டுக்கு அழகு செய்வதாக!

தமிழ்நாடு மாநிலத் தொல் பொருட் துறை சார்பிலே நடத்தப்படும் இந்த 45 நிமிட ஒலி-ஒளிக்காட்சி 30 இலட்ச ரூபாய் செலவிலே ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு காளிமுத்து அவர்கள் எழுதிய வளமான வசனத்திற்கேற்ப, பழம் பெரும்திரைப்பட இயக்குநரான திரு ஏ.எஸ்.ஏ. சாமி அவர்கள் இதனை ஒப்பற்றதாக உருவாக்கியிருக்கிறார்.

நுண்கலை வடிவமைப்பு நிறைவேற்றம்-பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ்' என்ற நிறுவனத்தாரால் செம்மையுறச் செய்யப்பட்டிருக்கிறது.

கவிஞர் ஆத்மநாதன் இசையமைக்க, பாலமுரளிகிருஷ்ணா, சீர்காழி கோவிந்தராசன் முதலானோர் இசைபாடி நமக்கு இதமூட்டுகிறார்கள். பாட்டுக்கேற்றபடி மின் விளக்குகளும் நடிப்பது, எண்ணி எண்ணி வியக்கத் தக்கதாக விளங்குகிறது!

மன்னன் திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலம் -இந்த மாளிகை கட்டப்பட்ட விதம் இனிய மனைவியோடு நடத்திடும் இல்லற நேர்த்தி-மைசூர் மன்னரோடு போர் ஆகிய அக்காலச் சம்பவங்கள் பல ஒலி-ஒளிக்காட்சியிலே ஒப்பற்ற விதத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

நாடகத்துள் நாடகம் போல் இதில் வரும் சிலப்பதிகாரக் காட்சி, நம் சிந்தையினைச் சிலிர்க்க வைக்கிறது.

''என் சிலம்பில் உள்ளவை மாணிக்கப் பரல்கள்; இதோ பார்!'' என ஆவேசத்தோடு கூறி கண்ணகி சிலம்பை உடைக்கிற கட்டத்தில், அதிலுள்ள மாணிக்கப் பரல்கள் நமது முகமெல்லாம் தெறிப்பதுபோல உணர்கிறோம். குதிரைகள் ஓடுவதால் ஒலி எழும்புகிறபோது, நமக்கருகிலேயே அவை ஓடுவதாய்க் கருதி நம்மை மறந்து ஒதுங்கிக் கொள்கிறோம்!

அவ்வளவு சிறப்பாக-அற்புதமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஒலி-ஒளிக்காட்சியினை நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஏ. ஜி. சுப்பராமன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு அஞ்சையா அவர்கள் துவக்கி வைப்பதாக இருந்தது. இயலாமையால் அவர் வராத நிலையில், மாண்புமிகு ஆந்திர கலாச்சாரத் துறை அமைச்சர்



திரு பட்டம் இராமமூர்த்தி அவர்கள் வந்து பங்கேற்றார்.

இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த திரு ராஜாராம் நாயுடு வாழ்த்துரை வழங்கினார்.

சிறு சேமிப்புத் துறை துணைத்தலைவர் திரு எஸ்.எஸ். ராஜேந்திரன் அவர்கள் மன்னன் திருமலை நாயக்கரின் சிலையைத்திறந்து வைத்துப் பேசுகையில்,''இன்றைய தினம் திருமலை மன்னரின் புகழுக்குப் பெருமைசேர்த்துக் கொண்டிருக்கிறது திருமலை மகால். அவரது சிலையைத் திறந்து வைக்க வாய்ப்பளித்த தமிழக அரசுக்கும், அண்ணன் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு அமைச்சர்கள் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன், திரு கே.ஏ. கிருஷ்ணசாமி ஆகியோரும் விழா நாயகனாம் மன்னன் திருமலையின் வளமான வாழ்வு, ஆட்சிமுறை ஆகியவை குறித்து மிகச் சிறப்பாக உரையாற்றினார்கள்.

அதே மேடையில், மன்னன் திருமலை ஒலி-ஒளிக்காட்சி தொடக்க விழா நடைபெற்றது. மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு அஞ்சையா அவர்கள் அனுப்பியிருந்த செய்தியினை ஆந்திர மாநில கலாச்சார அமைச்சர் படித்தார். மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்கள் சார்பில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு அழகுச் சிலையொன்றும் அன்பளிப்பாக வழங்கப் பட்டது.

ஆந்திர முதல்வர் அவர்கள் அனுப்பியிருந்த செய்தி விவரமாவது:

''தமிழர்களும் தெலுங்கர்களும் தொன்மை வாய்ந்தவர்கள். அவர்களது வரலாறு, நாகரிகம், மொழி ஆகியவையும் தொன்மை நிறைந்தவை. அவை இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளதாக-இணைந்ததாகக் காணப்படுவதற்குக் காரணம் அவை இரண்டும் ஒரே மண்டலத்தைச் சேர்ந்த கிருஷ்ணா நதிக்கரையிலும் காவேரி நதிக்கரையிலும் பூத்துக்குலுங்குவதனால்தான்! தெலுங்கு கலாச்சார வரலாற்றிற்குத் தொண்டு செய்துள்ளதாக, தமிழ்ப் பெருமக்கள் பெருமை எய்திக் கொள்ளலாம். அதே நேரத்தில் தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு தெலுங்குப் பெருமக்கள் தாங்கள் செய்துள்ள தொண்டு குறித்துப் பெருமைப்படலாம். இந்த நாட்டில் மதுரை மாநகரில் நாயக்க மன்னர் செய்த நிலையான பணிகளை நாம் மீண்டும் எண்ணிப் பார்க்கத் தக்கவர்களாக இருக்கிறோம். தெலுங்குக் கலைகளை கிருஷ்ண தேவராயருக்குப் பின்னர் ஆந்திர மாநிலம் மறந்து விட்டபோது, அவற்றைக் காக்க-வளப்படுத்த-பெருந்தொண்டினை - ஆதரவை நல்கியது தமிழ்நாடு. சான்றாக யக்சகானம், பத கவிதை, உரைநடை இலக்கியங்கள், மற்றும் பலவேறு வகையான தெலுங்கு மொழி இலக்கியங்களை எல்லாம் மதுரையை ஆண்ட மன்னர்கள் மிகுந்த நட்பிதயம்கொண்டு இரு மொழிகளையும் ஆதரித்தனர். அவற்றிற்கு மரியாதை செய்தனர்.

“1953ஆம் ஆண்டுவரை தமிழர்களும் ஆந்திரரும் ஒரே மாநிலத்தில் இணைந்து வாழ்ந்தனர். பின்னர் ஏற்பட்ட பிரிவு அரசியல் காரணங்களுக்காகத்தான் ஏற்பட்டது. தெலுங்கர்கள் தங்களது திறமையைப் பயன் படுத்தி நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொள்வதற்கு அந்தப் பிரிவு வகையளித்தது. இந்தப் பிரிவுக்குப் பின்னரும் இரு சகோதரர்களின் இதயத் துடிப்புகளும் ஒரே தாளத்தில் தான் இயங்குகின்றன. உண்மையில் நாம் இருவரும் வாய்ப்புகளை எல்லாம் பங்கிட்டுக் கொள்ளும் சகோதரர்களாக-வருகின்ற திங்கு



களை எல்லாம் திறமாகச் சமாளித்துக்கொள்ளும் வலுவான இதயத்துக்குச் சொந்தக்காரர்களாக விளங்குகிறோம். கிருஷ்ணா நதியின் தண்ணீரை உங்களுக்குக் குடி நீராக வழங்குவதற்கு நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறோம்- பஞ்சத்துக்குரிய இடமாகத் திகழும் ஆந்திரத்தின் ஒவ்வொரு துளித் தண்ணீரும் விலை மதிப்பற்றது என்னும் உண்மையை சில கணங்களுக்கு மறந்து விட்டு! நாம் இருவரும் வாய்ப்புகளைத் தொடர்ந்து பயன்படுத்துவோம். பிரச்சினைகளைத் துணிந்து சமாளிப்போம். ஒரு வகையில், இது தமிழகத்து மக்களுக்கு ஆந்திர மக்களிடமிருந்து நான் கொண்டு வந்துள்ள சேதி.

"தமிழ் மாநாடு குறித்து நான் விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. வரலாறு படைத்த - பெருமை மிகுந்த இந்த மதுரை நகரம் பழைய தமிழ்ப் பண்பாட்டின் ஆன்மா போன்றதாகும். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இங்கு உள்ள ஒவ்வொரு கல்லும், ஒவ்வொரு மரமும் வரலாற்றைத் தெரிவிக்கும். உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் மனிதனின் உயர்ந்த எண்ணங்களை எடுத்துரைக்கின்றன. காலத்தின் பாதை மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது. தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் இந்நகரம் ஓர் இருக்கையாக விளங்கியிருக்கிறது. தமிழ்ச்சங்கம் இந்த நகரத்தில் செழிப்படைந்து விளங்கியிருக்கிறது— இரண்டாயிரம் ஆண்டுகளாக மிகச் சிறந்து விளங்கி தென்னிந்திய மொழிகளின் வரலாற்றில் தனி இடம்பெற்றுத் திகழ்கிறது.

"17ஆம் நூற்றாண்டில் மதுரையிலும் அதனைச் சுற்றிலும் ஆலயங்களை அழகுற அமைத்து-கலைத் தொண்டு செய்திருக்கிறார்கள் நாயக்க மன்னர்கள். நாயக்க மன்னர்களில் மிகச் சிறந்தவர் - புகழ்பெற்றவர் திருமலை நாயக்கர் ஆவார். மதுரையின் வரலாற்றில் தமக்கென ஒரு சிறப்பிடத்தை அவர் உருவாக்கிக் கொண்டார். திருமலை நாயக்கர் மகால் -1636ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாக வரலாற்று ஏடு தெரிவிக்கிறது. அதன் உண்மையான அமைப்பு, தற்போது இருக்கும் அமைப்பை விட நான்கு மடங்கு பெரிதாக இருந்திருக்கக்கூடும். என்றாலும் நூற்றாண்டுகளைக் கடந்து பல இடையூறுகளை எல்லாம் தாண்டி-வரலாற்றில் புகழ் ஏட்டை உருவாக்கி வந்திருக்கிறது. இன்று, நாயக்க மன்னர்களின் பெருமையையும் - அவர்களது ஆட்சிச் சிறப்பையும் அது எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறது.

"எனது மாநில மக்களின் சார்பில் திருமலை நாயக்கரின் வரலாற்றைத் தெரிவிக்கும் இந்த ஒலி, ஒளிக் காட்சியைத் துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். இந்த நிகழ்ச்சி- தமிழர்வரலாற்றின் பல நூற்றாண்டுகளை - அவர்களது மன்னர்களை—தளபதிகளை— அவர்தம் மொழியை-இலக்கியத்தை, எடுத்துக் காட்டும். பெருமை படைத்த அந்த வரலாற்றில் மீண்டும் வாழும் நிலைபெறுவோம். கடந்த காலத்திலிருந்த நம் உணர்வுகளைப் பெறுவோம். நமது முன்னோர்களுக்கு தக்க பாரம்பரியமாகத் திகழ்வோம்."

—இவ்வாறு அந்த ஆங்கிலச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்பித்த மாண்புமிகு முதல்வர் திரு எம் ஜி. ஆர். அவர்கள் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சி மொழிக்கு அப்பாற்பட்டு, இனத்திற்கு அப்பாற்பட்டு மதுரையை ஆண்ட திருமலை மன்னனை நாம் புரிந்து கொள்ள உதவுகிறது.

"நாயக்க மன்னர்கள் காலத் தமிழகம் சீரும் சிறப்பும் பெற்றிருந்த காலமாகும். நாயக்கர்களை இந்நாட்டின் நாயகர்கள் என்றே கூறலாம். வீரச் சின்னமாக நாயக்கர்களை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

"இங்கே இந்தச் சிலையைத் திறக்க உதவியவர்களுக்கு நாங்கள் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சிலையின் கீழே, எதுவும் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. ஆனால், இந்தச் சிலையைச் செய்து கொடுத்த சங்கத்தின் பெயர் எழுதி வைக்கப்படும். அவர்களின் சேவைக்கு அரசு உரிய மரியாதை தரும்.

"சாதி, மதம் இவைகளுக்கு அப்பாற்பட்டு இந்தப் பகுதியை மேம்படுத்தியவர் திருமலை மன்னர். அவரை வாழ்த்தவும் வணங்கவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

"ஆந்திர முதல்வர் அவர்களின் சார்பில் இங்கே எனக்குகொரு சிலை பரிசாக அளிக்கப்பட்டது. அதனை, இந்த மாநாட்டின் நினைவாக, மாநாடு நன்றாக நடக்க ஏற்பாடுகளை செய்து சிறப்பாகச் செயல்பட்ட மதுரை மாநகராட்சிக்குப் பரிசாக வழங்குகிறேன்.

"உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாக இந்தச் சிலை எப்போதும் மதுரை மாநகராட்சியில் வைக்கப்பட்டிருக்கும்."

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.



# நெஞ்சார்ந்த குடியரசு நாள் வாழ்த்துக்கள்

1950 ஜனவரி 26 அன்று இந்திய மக்கள் ஒரு மதச்சார்பற்ற சமதர்ம ஜனநாயகக் குடியரசு ஆதிக்கத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். கடந்த 31 ஆண்டுகளில் நமக்குப் பெருமை சேர்க்கும் சாதனைகள் பல புரிந்திருக்கிறோம்.

- ஜனநாயகத்தை வலுமிக்க அடிக்கல் மீது அமைத்திருக்கிறோம்
- தீராத உணவுப் பற்றாக்குறையைக் கடந்தேறியிருக்கிறோம்.
- தொழில் துறையில் மிகச் சிறந்த நாடுகளில் ஒன்றாகத் தலையெடுத்திருக்கிறோம்
- அறிவியலிலும் தொழில்நுட்பவியலிலும் தலையாயதோர் இடம் பெற்றிருக்கிறோம்
- வெளிநாட்டுத் தாக்குதல்கள் மூன்றை முறியடித்திருக்கிறோம்
- பல நாடுகள் கூடும் அரங்குகளிலே நம் குரலும் செல்கிறது.

இருந்தும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், குறைவற்ற சரிசமமான நீதியை எல்லோருக்கும் உறுதிப்படுத்துவதற்கும் செய்ய வேண்டியது இன்னும் பல இருக்கிறது.

**இதைச் செய்வதற்கு நாட்டு ஒற்றுமை உணர்வு தரும் வலிய பாசத்தால்தான் முடியும்**



**முன்னேற்றமும் இடையூறற்ற பாதுகாப்பும் நிலைக்க நாட்டின் ஒருமைப்பாடு உணர்வைத் திடப்படுத்துங்கள் மதச் சார்பற்ற ஊக்கங்களை வலுப்படுத்துங்கள்.**

davp80/331

# உலக வாழ்வுக்கு உயர்வூட்டுவது......



மதுரை பந்தயத் திடலில், மூவேந்தர் அரங்கில் 6-1-81 அன்று காலை 9 மணிக்கு மதுரை ஆதீன ஓதுவார்கள் திருமுறைப் பாடலுடன் உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சி தொடங்கியது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில், ''உலக வாழ்வுக்கு உயர்வூட்டுவது அறிவியலா, பொருள் வளமா, இன்பச் செழுமையா'' என்னும் தலைப்பில் பட்டி மண்டபம் நடைபெற்றது.



**தா. பாண்டியன்**

திரு. தா. பாண்டியன்அவர்கள் பட்டி மண்டபத்தைத் தொடக்கி வைத்தார். அப்போது அவர் குறிப்பிட்டார் :

''மதுரையில் நடைபெறும் 5-வது உலகத் தமிழ் மாநாடு எழுச்சி ஊட்டுவதாக உள்ளது. முதல் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் என முச்சங்கங்கள் வளர்த்ததாகச் சொல்கிறார்கள். கடைசிச் சங்கம் அல்ல-தமிழுள்ளளவும் அது தொடரும் என்பதைக் காட்டுவதற்காகக் கூட்டிய மாநாடாக இது திகழ்கிறது. நமக்குப் புத்துணர்ச்சியை-எழுச்சியைத் தருகிறது. தமிழை இனி மேல் கடல் கொள்ளாது-அதனை காக்க ஆயிரமாயிரம் இளைஞர்கள் தோன்றியுள்ளார்கள் என்பதைத் தான் இங்கு வீற்றிருக்கின்ற மக்கள் கூட்டம் தெளிவு படுத்துகிறது.

தமிழகத்தில் மூன்று சங்கங்கள் இருந்தன என்பதை நாம் மறந்து போனாலும் ஆய்வாளர்கள் மறக்கவில்லை. அது குறித்து ஆய்ந்து கொண்டே இருக்கிறார்கள். அகழ்வாய்வு நடத்தப்பட்டால் கடல் கொள்ளப்பட்ட நகரங்கள்முழுமையாகக் கிடைக்கும் என்று ஆய்வாளர் கூறுகின்றனர். மஞ்சூரியாவில் அகன்றெடுக்கப்பட்ட கிராமத்தில் தமிழ்ச் சான்றுகள் கிடைத்தன எனச் சீன ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். இப்படிப்பட்ட செய்திகளை எல்லாம் நூலாக வெளியிட வேண்டும் என்று மாண்பு மிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**தமிழ்க் குடிமகன்**

வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் தமிழ்க் குடிமகன் குறிப்பிட்டார்.

''பட்டி மன்றம் என்னும் அமைப்பு பத்தாண்டுகளாக நல்ல வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. சட்டையைக் கிழிக்காமல் எந்த விதமான காயமும் படாமல் ஒரு சண்டை நடக்கவேண்டும். அதில் நாம் சிக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பது இந்தப் பட்டி மண்டபத்தின் பாங்கு!

செய்திகளைத் தெரிவிப்பதற்குத் திரைப்படம், செய்தித்தாள், பட்டி மண்டபம் மூன்றும் பயன்படுகின்றன.

மார்க்ஸ் தத்துவத்தை எடுத்துச் சொன்னார். அதைச் செயல்படுத்த லெனின் இருந்தார். மார்க்ஸ் தத்துவத்தைவிட ஆழமான கருத்துக்களைச் சொல்வது திருக்குறள். அது இன்னும் பட்டி மண்டபப் பொருளாகத் தான் இருந்து வருகிறது. முனைப்பு நமக்குக் குறைவு. எல்லா வகையிலும் இனிமேல் முனைப்பு வளர வேண்டும் ; வளரும் என்பதை இந்த மாநாடு எடுத்துக் காட்டத்தக்கதாக இருக்கிறது.

**தவத்திரு அடிகளார்**

நடுவராகப் பொறுப்பேற்றிருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் முன்னுரையில் குறிப்பிட்டதாவது :

நிகழ்ச்சித் தொகுப்பு

**எல்.எஸ்.சுந்தரம்**

தமிழன் தனது இழந்த— புகழ் பூத்த வரலாற்றைத் திரும்பவும் அடையக்கூடும் என்பதை இந்த மாநாடு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது.

ஒரு மொழி காலத்தினால் மூத்தது என்பதால் மட்டும் அதற்குச் சிறப்புச் சேர்ந்து விடுவதில்லை; காலத்தையும் வென்று அது சிறப்படைய வேண்டும்; தமிழ் காலம் கடந்தது-காலத்தை வென்று சிறந்தது என்றபெருமை பெற்றிருக்கிறது.

தென்கிழக்காசிய நாட்டு மக்கள் பேசும் மொழி, நமது மொழியால் வேறுபட்டிருப்பினும், நமது கருத்துக்களை அதுவும் கூறுகின்றது. கருத்தில் ஒருமைப்பாடு காணப்படுகிறது. மிகப் பழங்காலத்தில் தமிழகத்திலிருந்து அங்கெல்லாம் சென்றிருந்த தமிழர்கள்தான் இதற்குக் காரணம். பாலித் தீவில்கூட நமது திருநீறு என்பதற்குப் பதில் பஸ்மம் என்று வழங்குகிறார்கள்.

வெளிநாட்டுக்குச் சென்ற நமது மக்கள் அங்குள்ள மக்களைக் கொத்தடிமைகளாக்காமல் தாயகத்திற்கே திரும்பி வந்ததன் காரணமாகத்தான் இன்று வெளிநாட்டவர்களும் நமது தமிழைப் போற்றி வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

மலாக்கா நாட்டில் வாழ்வோரிடம் பழக்கம், வழக்கம், நடை, உடை, ஆகியவற்றில் தமிழ்நாட்டுச் சடங்குகள் கையாளப் படுகின்றன. அவர்களது மொழி வேறாக உள்ளது. பண்பு ஒன்றாக உள்ளது.

தமிழக வரலாறு அறுந்து பட்ட கயிறாக உள்ளது. அதிலே தொடர்புகள் விடுபட்டுள்ளன. முழுமையான பயனை இந்த உலகத் தமிழ் மாநாடு உருவாக்கும் என்பதை முதல்வர் அவர்களின் அறிவிப்பின் மூலம் அறிய முடிகிறது. தமிழக வரலாறு எழுதப்படும் - தமிழ்ச் சங்கம் ஒன்று உருவாக்கப்படும் என்று அவர் அறிவித்தது - வரலாறு எழுதத் தவறியதற்குப் படிப்பினையாக இனி வரலாறு எழுதப் படும் என்ற நம்பிக்கையை— நல்ல எண்ணத்தை ஊட்டுவதாக உள்ளது.

இந்திய நாடு ஒரு நாடு என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. வலிமையான ஆட்சியின் மூலம் சாம்ராஜ்யங்களை உருவாக்க முடியும் : மதத்தை வைத்தும்கூட உருவாக்கி விட முடியும். ஆனால் மொழியை வைத்துச் செய்துவிட முடியாது. அதற்குச் சான்றுகள் ஏராளம் உள்ளன.

மனித இனத்தை ஒருமைப் படுத்துவது தேவை. சமயங்கள் மூலமாக அது முடியுமா என்றால் முடியும் ; என்றாலும், உயர்வு தாழ்வின் காரணமாக சமயம், சக்தியை இழந்து விடுகிறது. நாடுகளை இணைக்கக்கூடிய நாட்டு இலக்கியம் ஒன்று இருக்க வேண்டும் என்று கார்லைல் கூறியுள்ளார். இந்திய நாட்டில் இதுவரை நாட்டு இலக்கியம் ஒன்று தோன்றவில்லை. அதனால்தான் 'மண்ணின் மைந்தர்கள்' தோன்றி வருகிறார்கள்.

நம்மை ஒற்றுமைப்படுத்துவதற்கு நாட்டு நூல் ஒன்று வேண்டும். அதற்குத் தகுதி படைத்தது திருக்குறள் தான். அது இந்தியாவில் உள்ள எல்லாச்சட்ட மன்றங்களிலும் சொல்லப்பட வேண்டும்-எல்லா மாநிலங்களிலும் படிக்கப்பட வேண்டும். அவ்வகையில் ஒரு புதிய சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டும்.

சமய அடிப்படை கொடுத்ததனால்தான் திருக்குறள் மதிப்பிழந்திருக்கிறது. வேறு நாட்டு மருந்துகளை அருந்தி நோய் நீக்கிக் கொள்வதைவிட நமது நாட்டு இலக்கியமான திருக்குறள் என்னும் நாட்டு மருந்தின் வாயிலாகச் செய்து கொள்ளலாம்.

மொழி-தன்னைக் கடந்து இலக்கியமாக உருமாற்றம் பெறுகிறது- பின்னர் அது நாகரிகமாக மலர்ந்தால் அது தான் சிறப்பு. தமிழ் என்றாலும் ஒன்றுதான்— பண்பாடு என்றாலும் ஒன்றுதான் என்ற நிலை ஏற்பட வேண்டும்.

ஏதோ ஒரு தவறு நமது சமுதாயத்தில் உள்ளீடு அடைந்திருக்கிறது. அதற்குக் காரணம் அழுக்காறுதான். அழுக்காறு என்னும் பாவி என்று வள்ளுவர் கூட கடுமையான சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். தமிழின் பேரால் - தமிழினத்தின் பேரால்- விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் தமிழர் முன்னேற்றம் பெறலாம். அதற்கு முயற்சி செய்யும் முதல்வர் அவர்கள் வெற்றி பெறுவார் என்பது உறுதி. அவரது தலைமையில் தமிழ் இனம் ஒன்று பட்டுப் புகழ் எய்தும் என்பது திண்ணம்.

அடிகளாரின் முன்னுரைக்குப் பின்னர் பட்டிமண்டபம் தொடங்கியது.

'உலக வாழ்வுக்கு உயர்வூட்டுவது அறிவியல்' என்ற அணியில், பேராசிரியர் அறிவொளியின் தலைமையில் டாக்டர் பூ. சொல் விளங்கும் பெருமாள், திரு. தா. கு சுப்பிரமணியம், புலவர் இராசம் மரகதம் ஆகியோர் வாதாடினர்.

சிந்தித்தால் உரையாற்றலாம்; சிந்தித்து நெகிழ்ந்தால் மட்டும்தான் கவிதை இயற்ற முடியும். தான் கண்டு, உள்ளம் நெகிழ்ந்ததை மற்றவர்கள் நெகிழத் தக்க அளவுக்கு அள்ளித் தருவதுதான் கவிதை.

—பேரறிஞர் அண்ணா

'பொருள் வளமே' என்னும் அணியில் திரு. இ. மறைமலை அவர்களின் தலைமையில் செங்கோட்டை திரு. சனார்த்தனம், நாஞ்சில் திரு. நெடுமாறன், புலவர் கோ. பா. தாமரை ஆகியோர் வாதிட்டனர்.

'இன்பச் செழுமையே' என்னும் அணியில், பேராசிரியர் ஞானசுந்தரம் தலைமையில் திரு அறிவுமணி, திருமதி அரசு மணி மேகலை - திருமதி புலவர் கா. தமிழரசி ஆகியோர் வாதிட்டனர்.

ஒவ்வொரு அணியினரும் தமது கொள்கையை வலியுறுத்துவதற்குச் சான்றுகள் காட்டி-வீறுடன் பேசி அரங்கத்து மக்கள் அனைவரின் கர ஒலியையும் பெற்றார்கள். நிகழ்ச்சியைக் கண்ணுற்றுக் கொண்டிருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏனைய அமைச்சர்களும் நன்கு ரசித்தார்கள்.

### அடிகளார் தீர்ப்பு

நடுவர் பொறுப்பேற்றிருந்த தவத்திரு அடிகளார் தமதுதீர்ப்பாகக் குறிப்பிட்டார் :

வாழ்வில் உயர்வதற்குத்துணை யாவது செல்வம்; செல்வம் பெற்று உயர வேண்டும், அதன் பின்னர் உதவுவதுதான் இன்பம்.

வெறும் பொருள் மனித வாழ்க்கையை உருவாக்கி விடுவதில்லை. செல்வத்தைப் பகிர்வதிலும் நுகர்வதிலும் அறம் வேண்டும்.

எல்லாரும் எனக்காக-நானும் எல்லோர்க்குமாக என்ற எண்ணம் வர வேண்டும். மனத்துக் கண் மாசிலனாதல் அறம் என்றார் வள்ளுவர்; அதுதான் அனைத்து அறங்களிலும் சிறந்தது என்று குறிப்பிட்டார் வள்ளுவர். எனவே உலக வாழ்வுக்கு உயர்வூட்டுவது அறிவியலே என்று தீர்ப்பு வழங்குகிறேன்.

# இசை நிகழ்ச்சிகள்












# நாடக நிகழ்ச்சிகள்











# நடன நிகழ்ச்சிகள்













# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

MFL 2111

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001



# செந்தமிழ்ச் சான்றோர்க்குச் சிலை திறப்பு விழா

'ராஜு'

தொல்காப்பியர்

தந்தை பெரியார் அவர்களின் வளைவின் முன்புறம் அமைந்துள்ள தொல்காப்பியர் சிலையினை அ.இ.அ.தி.மு. கழகப் பொதுச் செயலாளர் திரு ப.உ. சண்முகம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

''தொல்காப்பியர் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததாகக் கூறப்படுகிறது. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவர் இருந்ததாகக் கூறப்படுகிறது. தமிழ் வளர்க்க 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை அறிஞர்கள் தோன்றியுள்ளனர். பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழினை வளர்க்கத் தோன்றினார்கள்'' என்று தமது உரையில் திரு ப.உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பேசியதாவது:

''ஒல்காப்புகழ் கொண்ட தொல்காப்பியர் அவர்களுக்கு இன்று சிலை திறப்பதில் பெருமையும் பூரிப்புமடைகிறேன். தமிழுக்கு ஆற்றின் இரு கரைகளாக இலக்கணத்தை வகுத்து நடுவே இலக்கியம் என்ற நீர் செல்ல வழிவகுத்தவர் தொல்காப்பியர். எழுத்து, சொல்லுக்கு மட்டுமே மற்ற மொழிகளில் இலக்கணமுண்டு. ஆனால் தொல்காப்பியர் தமிழ் இலக்கணம் வாழ்க்கைக்கே வழி காட்டுவதாகும். பகுத்தறிவுக்கு தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா போல் தமிழ்ச் சமுதாயத்திற்கு வழி காட்டியவர் தொல்காப்பியர் ஆவார்.

## ராபர்ட் டி நோபிலி

மதுரை பாத்திமா கல்லூரி அருகில் அமைக்கப்பட்டுள்ள ராபர்ட் டி நோபிலி அவர்களின் சிலையை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ்.முத்துச்சாமி அவர்கள் மாண்புமிகு ஊரகத் தொழில் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் அமைச்சர் தலைமையில் திறந்து வைத்தார்.

விழாவின் தலைமையுரையில் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் குறிப்பிட்டதாவது :

''400 ஆண்டுகளுக்குமுன் பாண்டிய நாட்டிற்கு வந்து தமிழ்க் குடி மகனாக, பாண்டிய நாட்டு மரபினராக திருமலைநாயக்கரோடு இருந்து சமயப்பணியோடு தமிழ்ப் பணியும் ஆற்றியவர் நோபிலி அவர்கள். அப்பெருந்தகைக்கு சேர, சோழ நாடுகளுக்கு செல்லும் வழியில் வைகை நதிக்கரையில் நன்றி கூறும் வகையில் சிலை அமைத்தது பெருமைக்குரியதாகும்.

சிலையைத் திறந்து வைத்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தம் உரையில் டி. நோபிலி அவர்கள் தமிழுக்கு மட்டுமல்லாமல் இந்நாட்டின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டவர் என்பதால் தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இச்சிலையை அமைத்துள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

விழாவில் அருள்தந்தை பீட்டர் குழந்தை வரவேற்புரையாற்றினார். பேரருள் பெருந்தகை ஜஸ்டின் திரவியம் விழா சிறப்பு மலரின் முதல் மலரை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

## தனிநாயகம் அடிகள்

வண்டியூர் - சிவகங்கைச் சாலையில் தமிழறிஞர் தனிநாயகம் அவர்களின் சிலை திறப்பு விழாவிற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.ப. நெடுமாறன் அவர்கள் தலைமையேற்றார்.

''உலகத்தமிழ் மாநாட்டிற்கு வித்திட்ட உலகத்தமிழர் தனிநாயகம் என்று தனது தலைமை உரையில் குறிப்பிட்டார், சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் உரையாற்றினார்கள்.

உலகத்தமிழ்ப் பண்பாட்டின் தலைநகரமாக இருக்கின்ற மதுரை மாநகரில் உலகத் தமிழ் மாநாடு நடக்கின்ற இந்தத் தருணத்தில் தனிநாயகம் அவர்களுக்குச் சிலையெடுப்பது சாலப் பொருத்தமாகும்.

ஒரு நாடு வாழ்வதற்கும் கலை, கலாச்

சாரம் வளர்வதற்கும் மொழியை வளர்க்க வேண்டியது அவசியமாகும். மொழியை இழக்கும்போது கலாச்சாரத்தை இழக்கின்றோம். கலாச்சாரத்தை இழந்துவிட்டால் நாடோடியாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

தமிழர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் மொழியை வளர்க்கிறார்கள், அறிவை வளர்க்கிறார்கள், பல நூல்கள் வெளியிட்டு இலக்கியப்பணி ஆற்றுகிறார்கள், இலங்கையில், மலேசியாவில் மற்ற பிற நாடுகளில் அங்குள்ள தமிழறிஞர்கள் வெளியிடுகின்ற நூல்களைத் தமிழகத்தில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அத்தகைய நூல்களை வாங்கிப்படிக்கின்ற ஆசை வளர வேண்டும்.

விழாவில் கலந்துகொண்டு இலங்கை பாராளுமன்ற எதிர்க்கட்சித்தலைவர் திருஅமிர்தலிங்கம் அவர்கள் திருவனந்தபுரம் திராவிட மொழிகள் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் டாக்டர் சுப்ரமணியம் மறை திரு ஜெபனேச அடிகள் (ஈழம்) மேலவை உறுப்பினர் டாக்டர் ஜனார்த்தனம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

விழா துவக்கத்தில் இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடினார். திரு நாகலிங்கம் வரவேற்புரையாற்றினார்.

திரு எஸ்.குமரவேல் நன்றியுரை ஆற்றினார்.

## தமிழ்த்தென்றல் திரு.வி.க.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் சிலையை சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்களின் தலைமையில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவிற்குத் தலைமை வகித்து சட்டமன்ற மேலவைத்தலைவர் டாக்டர் ம.பொ. சி. அவர்கள் பேசுகையில்தொழிலாளர் தலைவராக இருந்து தொழிலாளர் நல அமைச்சராகப் பணிபுரியும் ஒருவர், தொழிலாளர் தலைவராகப் பணிபுரிந்த ஒருவரின் சிலையைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் அரசியலை விட்டார், ஆசிரியர் தொழிலை விட்டார். ஆனால் தொழில் சங்கத்துடன் தொடர்பு கொண்டு தமிழை வளர்த்த தமிழ்ப்புலவர் ஒருவருக்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சிலை திறப்பது மிகவும் மகிழ்ச்சியானது ஆகும்.

சிலை திறப்பு விழாவிற்கு முன்பு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் பேசுகையில் ''தமிழின் முக்கியத்துவம் உலக அரங்கில் பாராட்டப்படுகின்றது. மேற்கு ஜெர்மனியர், ஸ்காட்லாந்து, மலேசியா முதலிய மேல்நாட்டு அறிஞர்கள் எல்லாம் தமிழின் சிறப்பை நேற்று பாராட்டிப் பேசினார்கள். அயல்நாட்டில் தமிழுக்கு இருக்கும் ஆதரவு தமிழகத்தில் இன்று சிலருக்கு இல்லை. இந்த மாபெரும் எழுச்சிக்குப் பிறகாவது தமிழில் அனைவரும் ஆர்வம் காட்டவேண்டும்.



திரு.வி.க. அவாகள் கடினமான தமிழை புலவர்களுக்கு மட்டும் புரியும் தமிழை எல்லோருக்கும் புரியும் வண்ணம் எளிமைப்படுத்தினார். தமிழ் மேம்பட—தமிழ் சிறப்புப் பெறும் திட்டத்தில் மதுரை நகரின் வளர்ச்சியும் மேம்பாடு செய்யப்பட்டது. தமிழ் மேலும் சிறக்க திரு.வி.க. விட்டுச்சென்ற நாட்டுப்பணியில் அனைவரும் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

மேலவைத்தலைவர் அவர்கள் பேசுகையில் ''இலக்கணத்திற்கு இலக்கியம் வகுத்த தொல்காப்பியர் வழியில் தமிழுக்குத் தொண்டு செய்தவர் திரு.வி.க. அவர்கள். அப்படிப்பட்டவருக்கு இன்று இந்த சிலை திறப்பு விழா நடைபெறுகிறது. ஆசிரியர் தொழிலை விட்டார். ஆனால் தமிழ் மொழி வளர்ச்சியில் பங்கு கொண்டதோடு அல்லாமல் தேச விடுதலையில் பங்குகொண்டார். 1919 ரௌலட் சட்டத்தில் காந்தி இயக்கத்திற்கு தமிழகத்தில் பெயர்கொடுத்த முதல் தமிழ் முனிவர் திரு. வி.க. அவர்கள் ஆவார்கள். பால கங்காதர திலகர், காந்தி முதலியவர்கள் தமிழகத்தில் வருகை புரிந்தால் அவர்களின் பேச்சுக்கு மொழிபெயர்ப்பு செய்ய எங்கே அந்த தமிழ் பண்டிட் என்று திரு.வி.க. அவர்களைத் தேடுவார்கள். அப்படிப்பட்ட பெருமகனுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இச்சிலை திறப்பு விழா நடைபெறுகிறது. சிலை திறப்பு விழாவிற்குத் தலைமை தாங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்''. என்று கூறினார்.

## பாண்டித்துரைத் தேவர்

மதுரை நகர் கிருஷ்ணாராவ் குளக்கரை தெருவில் பி-4 காவல் நிலையத்தின் முன்புறம் பாண்டித்துரைத் தேவர் திருஉருவச்சிலையினை மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துணை இராசாங்க அமைச்சர் திரு ஆர்.வி. சாமிநாதன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக தொழிலமைச்சர் திரு எஸ்.திருநாவுக்கரசு அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவில் தலைமையுரை ஆற்றிய மாண்புமிகு மத்திய வேளாண்மை துணை இராசாங்க அமைச்சர் திரு ஆர்.வி. சாமிநாதன் அவர்கள் தன்னுடைய உரையில் கூறியதாவது

''இராமநாதபுரம் மன்னர் பரம்பரையைச் சார்ந்த பாண்டித்துரைத்தேவர் நாட்டுப்பற்றும் தேசிய மனப்பான்மையும் உடையவர். இவர் நான்காவது தமிழ்ச்சங்கத்தைத்தோற்றுவித்தவர். எனவே ஐந்தாவது தமிழ்ச்சங்கம் என்று ஒரு புதிய தமிழ்ச்சங்கத்தைத் தோற்றுவிப்பதற்கு பதிலாக நான்காவது தமிழ்ச் சங்கத்தைப் புதுப்பித்து நடத்த வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறினார்



பாண்டித்துரைத்தேவர் திருஉருவச் சிலையைத் திறந்து வைத்து உரையாற்றிய மாண்புமிகு தமிழக தொழிலமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 'நான்காவது தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்து பழந்தமிழ் இலக்கியங்களையெல்லாம் தன் சொந்த செலவில் பதிப்பித்து நூல்களாக வெளியிட்ட பாண்டித்துரைத்தேவருக்கு தமிழக வரலாற்று நூல்களில் அவ்வளவாக இடம் தரப்படவில்லை. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பாண்டித்துரைத்தேவரை நினைவு கூரும் வகையில் அவரின் சிலையினை அமைக்க ஏற்பாடு செய்தார்.

இந்த விழாவில் முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் திரு செ.கந்தசாமி அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மாயூரம் வேதநாயகம் பிள்ளை

மாண்புமிகு தமிழக வருவாய்த்துறை அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு தமிழக பாசனத்துறை அமைச்சர் திரு கே. இராசாமுகமது அவர்கள் தமிழறிஞர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் சிலையை மதுரை தமிழிசைச் சங்கக் கட்டிடத்தில் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சிலை அன்பளிப்புச் செய்த திரு வி.ஜி.பன்னீர்தாஸ் சகோதரர்கள், மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களின் கொள்ளுப்பேரன் திரு.ஆ. பீட்டர் வேதநாயகம் மதுரைத் தமிழிசைச் சங்கத்தைச் சார்ந்த திரு எல். அழகுசுந்தரம் செட்டியார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவிற்கு தலைமை தாங்கிய வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தமிழிற்குத் தொண்டு செய்த பெரியவர்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் தமிழுக்காக சிலை திறப்பு விழா நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது என்றும், தமிழ் மொழி 2000 ஆண்டுகட்கு முன்னால் தோன்றியிருந்தாலும் இன்னும் அதன் சீரிளமைத் திறம் குன்றாமல் விளங்கிவருகிறது என்பதைக் காட்ட இம்மாநாடு நடத்தப்படுகிறது என்றும் குறிப்பிட்டார். இன்றைய விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தமிழ்மொழியில் கலைச் சொற்கள் உருவாக்கப்படவேண்டும். அவ்வாறு கலைச் சொற்களை உருவாக்க அரசு முயலும் என்றும் அவர் பேசினார்.

சிலையைத் திறந்து வைத்த நீர்ப்பாசன அமைச்சர் மாண்புமிகு கே. இராசாமுகமது அவர்கள், மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களின் ''பிரதாப முதலியார் சரித்திரம்'' நாவல் இலக்கியத்திற்கான அருமையான இலக்கண உணர்வுகளைக் கொண்டு விளங்குகிறது என்றும், அவரது 'கீர்த்தனைகள்' தமிழ் இசை உணர்வுக்குப் பெருமை சேர்ப்பவை என்றும் சுட்டிக் காட்டினார். இவருடைய சிலையைப் பார்க்கின்ற தமிழ் இளைஞர் சமுதாயம் இவரைப் போன்றே தமிழ்மொழிக்கு ஏற்றந்தரும் இலக்கியங்களைப் படைக்க முனைவர் என்று தாம் நம்புவதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

## திருவள்ளுவர்

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன் மதுரை செல்லூர் திருவள்ளுவர் சமூக சேவை நிறுவனம் அமைத்த திருவள்ளுவர் திருஉருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு சட்டப்பேரவைத்தலைவர் திரு க. ராசாராம் அவர்கள் தலைமையில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள் திறந்து வைத்தார்கள். திருவள்ளுவர் சமூகசேவை நிறுவனத்தலைவர் திரு மோகன் காந்தி வரவேற்புரை ஆற்றினார்

பேரவைத் தலைவர் அவர்கள் தனது உரையில்'', திருவள்ளுவர் வாழ்க்கை முறையினைச் சிறப்பாக விளக்கியுள்ளார். 2000ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மன்னர்கள் எப்படி ஆள வேண்டும் என்பதையும் எடுத்துரைத்துள்ளார்.

''மன்னர் ஆட்சி சீராக நடைபெற ஒற்றர்கள் தேவை என்பதையும்; மன்னர் சிறப்பாகப் பணிபுரிய தூதுவர்கள் வேண்டும் என்றும், அப்பொழுதுதான் நாட்டின் கலாச்சாரம், மொழி, இனம், பண்பாடு இவை உலகமெல்.

லாம் பரவ வேண்டும்-முடியும் என்றும் தான் இயற்றிய குறளில் விளக்கியுள்ளார்.

மனித சமுதாயம் எப்படி வளர வேண்டும் என்பதையும், ஆட்சிமுறை பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

மயில் தேசியப் பறவையாக இருப்பது போல் திருக்குறள் தேசிய நூலாக அமைய வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இச்சிலையை உருவாக்கிய திருவள்ளுவர் சமூக சேவை மன்றத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்''. என்று குறிப்பிட்டார்.



திருவள்ளுவர் திரு உருவச் சிலையினை மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதிசீனிவாசன் அவர்கள் திறந்து வைத்துப்பேசுகையில் ''ஒருமொழியில் இருக்கக் கூடிய சிறப்பினையும் வளத்தினையும் இலக்கண இலக்கியத்தையும் கலையுணர்வையும் பார்த்துத்தான் அம்மொழிக்கு சிறப்பு ஏற்படுகிறது என்பதைக்குறிப்பிட ஆசைப்படுகிறேன், அந்த வழியிலேதான் இலக்கிய இலக்கண நயமும் தொன்மைச் சிறப்பும் பெற்றிருக்கிற வள்ளுவத்தை அளித்த வள்ளுவனுக்குச் சிலை எழுப்பியிருக்கிறோம்.

பைபிள் பிறந்ததால், ஈப்ரு மொழியும், குர்ரான் பிறந்ததால் அரேபிய மொழியும் சிறப்படைந்ததுபோல், திருக்குறளால் தமிழும் சிறப்படைந்திருக்கிறது.

திருக்குறள், எல்லாக் கருத்துக்களையும் உள்ளடக்கி இருக்கிறது என்பதோடு எக்காலத்திற்கும் பொருந்தக் கூடியனவாக இருக்கிறது'' என்று குறிப்பிட்டார்கள்.

## உ. வே. சாமிநாதய்யர்

தல்லாகுளம் பெருமாள் கோவில் மைதானம் அருகில் அமைக்கப்பட்டுள்ள உ.வே. சாமிநாதய்யர், கவிமணிதேசிக விநாயகம் பிள்ளை ஆகியோரின் சிலைகளை முறையே மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ஹெச்.வி. ஹண்டே தலைமையில் மாண்புமிகு சட்டஅமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் தலைமையில் மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் திரு எஸ். என். இராஜேந்திரன் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஹண்டே அவர்கள் பேசுகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளை ஆய்ந்து அவைகளைப் புத்தக வடிவமாக மாற்றினார் தமிழுக்கு செய்த தொண்டைப் பாராட்டி அவருக்கு நிறைய பட்டங்கள் கொடுக்கப்பட்டன. அவைகளுள் 1906ஆம் ஆண்டு மகாமகா உபாத்தியாய என்ற பட்டமும் 1917ஆம் ஆண்டு திராவிட வித்ய பூஷின் என்ற பட்டமும் 1925ஆம் ஆண்டு கலாநிதி என்ற பட்டமும் 1932ஆம் ஆண்டு டாக்டர் பட்டமும் மிக முக்கியமானதாகும்.

சிலையை திறந்து வைத்து மாண்புமிகு சட்ட அமைச்சர் பேசியதாவது: ''உ.வே.சாமிநாத அய்யர் சிலை திறப்பதில் இன்றைய தமிழக அரசியல் சூழ்நிலையில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தமிழ் வளர்ச்சிக்கு பிராமண சமுதாயம் ஒரு முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது என்ற எண்ணத்தை முறியடிக்கிற வகையில் இவ்விழா இன்று இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பெருமகனார் தோன்றியிருக்காவிடில் சங்ககால இலக்கியங்கள் என்ன என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கும். சிதறிக் கிடந்த ஓலைச்சுவடி வடிவில் இருந்த சங்ககால இலக்கியங்களைத் தேடி எடுத்து தமிழுக்கு நற்றொண்டாற்றியுள்ளார். பிரபஞ் ங்களை தமிழ் உலகிற்குக் கொண்டு வந்த பெருமையும் அவரையே சாரும்.

## கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் சிலை திறப்பிற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை தாங்கி உரையாற்றும் போது கவிமணியின் பாடல்களில் அதிகமாக கம்பரைப் பற்றியும் பாரதியைப் பற்றியும் ஔவையார் பற்றியும் அதிகமாகக் குறிப்பிட்டுள்ளார்.'' சிலையைத் திறந்து வைத்து மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது கவிமணி அவர்கள் 30 ஆண்டுக் காலம் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டே தமிழுக்கு அரும் தொண்டு புரிந்தார். உமர்கய்யாமின் பாடல்களை முதன் முதலில் தீந்தமிழில் மொழி பெயர்த்து தமிழுக்கு அணிசேர்த்த பெருமை கவிமணி அவர்களுக்கே சாரும்.

கவிமணி அவர்கள் ஒரு கவிஞராக மட்டுமல்லாமல் ஒரு பெரிய ஆராய்ச்சியாளராகவும் திகழ்ந்தார். பல கல்வெட்டுக்களை ஆராய்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். கவிமணி அவர்கள் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறப்பு வாய்ந்த கவிஞர்களில் ஒருவர் ஆவார்.

## திருத்துவோம் அல்லது துரத்துவோம்!

வழியில் ஒரு கூடைக்காரனைக் கண்ட நான், ''என்னப்பா அது?'' என்றேன்.

''வாயப்பயம்'' என்றான் அவன்.

''இப்படித் தமிழைக் கொலை செய்யும் நீ இந்த ஊருக்கு ஏம்பா வந்தே?'' என்றேன்.

''பொயக்க'' என்றான்.

''அடச்சே, எங்கேப்பா இருக்குது உன் ஊரு?''—இது நான்.

''கெயக்கே!''—இது அவன்.

''ஏன் இப்படிப் பேசறே? சரியா தமிழ் பேசக் கூடாதா?'' என்றேன் நான்.

''அப்படிப் பேசித்தாங்க வயக்கம்'' என்றான் அவன்.

இப்படிப்பட்ட தமிழ்க் கொலையாளிகளைத் திருத்த வேண்டும் அல்லது நாட்டை விட்டே துரத்த வேண்டும்!

—உலகத் தமிழ்மாநாட்டில்
கி. ஆ. பெ. விசுவநாதம்.

---

## ஆறுமுக நாவலர்

தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் தலைமையில் ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலையை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :

பெரியவர், தமிழ் வித்தகர் ஆறுமுக நாவலர் அவர்களின் திருஉருவச் சிலையினை இங்கே திறந்து வைக்கின்ற பொழுது-இதனை நிறுவியவர்களுக்குத் தமிழக அரசு சார்பிலும், புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆங்கிலத்திலிருந்து பைபிளைத் தமிழிலே மொழிபெயர்த்துத் தந்து பெருமை கொண்டவர் ஆறுமுக நாவலர்.

சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து நாம் வாழ்த்திடும் தமிழின் மீது நடந்த தாக்குதல்கள் அளவற்றவைகளாகும். அவ்வாறான தாக்குதல்கள் வேறெந்த மொழி மீதாவது நடத்தப்பட்டிருக்குமேயானால் அவை இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும்.

இங்கே பேசிய இலங்கை அமைச்சர் ராஜதுரை அவர்கள் விபுலானந்தருக்குச் சிலை வைக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆறுமுக நாவலர் இல்லையானால் பால பாட நிலை உண்டாகியிருக்குமா என்பதே சந்தேகம். அதேபோல் விபுலானந்தர் இல்லையானால் தமிழ் இசை இருக்குமா என்பதே சந்தேகம் என்ற நிலையிருப்பதை நாங்கள் உணர்ந்து தான் இருக்கிறோம்.

19-ஆம் நூற்றாண்டின் கடைசியிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தான் இராமலிங்க அடிகளாரிலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் வரை தமிழ்நலம் காப்போரெல்லாம் தோன்றியிருக்கிறார்கள்.

கடைச் சங்கத்திலிருந்த 48 புலவர்களின் சிலை இன்றைக்கு மீனாட்சியம்மன் கோயிலிலே இருக்கிறது. அந்த வகையிலே, தமிழுக்குத் தரும் உயர்வளித்த ஆறுமுக நாவலர் அவர்களின் சிலையைத் திறந்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இவ்வாறு மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார். விழா முடிவில் கிடிகிட்டி மேளத்தோடு கரக ஆட்டம் நடைபெற்றது.

## சோமசுந்தரபாரதி

பழங்காநத்தம் பைபாஸ் சாலையில் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரின் திருவுருவச் சிலைத் திறந்து வைக்கப்பட்டது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து இதனைத் திறந்து வைத்தார். இவ்விழாவுக்கு காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு, குமரி அனந்தன் அவர்கள் தலைமை தாங்கினார்.

''பசுமலை பாரதி'' எனக் குறிப்பிடப் படும் திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் சட்டக்கல்வி பயின்றும் தமிழ்த் தொண்டு புரிந்தவராவார். 'எப்பக்கம் வந்து புகுந்து விடும் இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்' எனத் தோள் தட்டி நின்ற தூய தமிழறிஞர் அவர் -என மாண்புமிகு அமைச்சர் அவர்களும், திரு குமரி அனந்தனும் தமது சொற்பொழிவில் குறிப்பிட்டார்கள்.



## வீரமாமுனிவர்

வீரமா முனிவர் சிலையை மாண்புமிகு அரிசனநல - வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் திரு விஜயசாரதி தலைமையில் மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் திறந்து வைத்தார்.

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்!
உயர்ந்த தரம்! நியாயமான விலை!
இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி
## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை–600 014
தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41–7496 TNSI

# அருந்தமிழ் மாநாட்டில் அனைத்து நாட்டு அறிஞர்கள்



ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை, மதுரை பந்தயத் திடலில் அமைந்திருந்த வள்ளுவர் அரங்கில் 4-1-81 அன்று மேதகு தமிழக ஆளுநர் சாதிக் அலி அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விழாத் தலைமையேற்றார்.

பிரம்மாண்டமான தேர்போலத் தஞ்சாவூர் பாணிப் பந்தல் அலங்காரத்தில் மேடை அமைக்கப்பட்டிருந்தது.

நாமகிரிப்பேட்டை கிருஷ்ணனின் நாதசுர இசை நிகழ்ச்சி நடைபெற்றது முதலில். பின்னர், தமிழக அரசு இரண்டாவது செயலாளரும், உலகத் தமிழ் மாநாட்டின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான திரு க. திரவியம் அவர்கள் உலகத் தமிழ் மாநாடு தொடங்குவதாக அறிவித்தார்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை கலைமாமணி சீர்காழி கோவிந்தராசன் பாடினார்.

தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும், உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் முன்னாள் நீதிபதி திரு எஸ். மகராஜனும் வரவேற்புரை ஆற்றினர்.

அதையடுத்து மேதகு தமிழக ஆளுநர் திரு சாதிக் அலி, அவர்கள், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

**ஆர். வி. சாமிநாதன்**

மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை துணை அமைச்சர் திரு ஆர். வி. சாமிநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

மத்திய அரசின்சார்பில் கலந்து கொள்வதற்காக மட்டுமல்ல, பாண்டிய மண்ணைச் சேர்ந்தவன் என்பதற்காகவும், சிவகங்கை நாடாளுமன்றத் தொகுதி பிரதிநிதியாகவும் இந்த மாநாட்டிலேகலந்து கொள்ளுவதில் பெரிதும் மகிழ்கிறேன்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் தேச விடுதலைப் போராட்டத்தில் மைய நகரமாக விளங்கியது மதுரை மாநகரம். காமராசர் போன்ற பெருந் தலைவர்களோடு இணைந்து அப்போது நான் அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டவன்.

தொன்மைச் சிறப்பும் அண்மைச் சிறப்பும்மிக்க இந்த மதுரை மாநகரில், உலகத் தமிழ்மாநாடு நடப்பது மிகவும் பொருத்தமுடையதாகும்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்கிற தமிழ்ப் பண்பாடு அகில உலகமே போற்றி மதிப்பதாகும். இப்படிப்பட்ட பல சிறப்புக்களையுடைய தமிழைக் கற்பதில் நம்முடைய பிரதமர் அவர்கள் மிகவும் ஆர்வமுள்ளவராக இருக்கிறார். அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் உலகத்தமிழ்மாநாடு மேலும் சிறப்படைகிறது.

**எம். பக்தவத்சலம்**

முன்னாள் தமிழக முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் பேசியதாவது :

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாநாட்டிலே கலந்துகொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

மலேசிய நாட்டில் முதலாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அங்கேதான் சென்னையில் இரண்டாவது மாநாடுநடத்த வேண்டுமென நான் கேட்டுக் கொண்டேன். உலகத் தமிழ் மாநாடு நடத்தும் முறையைக் கொண்டுவந்த தனிநாயக அடிகளுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்' என்ற பொது நோக்கம் உடையவர்கள் தமி

ழர்கள். என்றும் கன்னித்தன்மை மாறாத மொழி நமது தமிழ் மொழி.

அப்படிப்பட்ட தமிழுக்கு மிகவும் ஆர்வத்தோடு உலகத் தமிழ் மாநாடு நடத்துகிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இதற்காக அவருக்கும் அவர் சகாக்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வளவு விமரிசையாக நடக்கும் இந்த மாநாடு தொடர்பான முயற்சிகள் எதுவும் வீண் போகாது என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை.

**பிரான்சிஸ் ரயான்**

கிறிஸ்தவ ஜனநாயக முன்னணி தலைவர் திரு எம். பிரான்சிஸ் ரயான் தமது உரையில்'ராபர்ட்' டி. நோபிலி, வேதநாயகம் பிள்ளை, வீரமா முனிவர், தனி நாயக அடிகள் ஆகியவர்களுக்குச் சிலை வைத்துப் பெருமைப்படுத்தும் இந்த அரசுக்கு, கிறிஸ்தவ சமுதாயத்தின் சார்பில் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

**ஜெகத்சிங்**

மொரீஷியஸ் தீவிலிருந்து வந்து கலந்து கொண்ட அந் நாட்டின் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு ஜெகத்சிங் பேசுகையில்''பழம்பெருமைமிக்க மதுரையம்பதியிலே நடைபெறும் இந்த உலகத் தமிழ் மாநாடடுக்கும், இதை இவ்வளவு சிறப்பாக நடத்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் எங்கள் அரசின்-மொரீஷியஸ் தீவு மக்களின் நெஞ்சார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

**ராஜதுரை**

ஸ்ரீலங்காவிலிருந்து வந்த மாண்புமிகு அறநிலையத்துறை-தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு ராஜதுரை அவர்களின் பேச்சு விவரமாவது :

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பாடிய பாடலுக்கு எடுத்துக்காட்டை இன்று இந்த மதுரையிலே காண்கிறேன்.

ஒரு கருத்தரங்கு அளவிலே தான் மலேசியாவில் முதலாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைப் பிரமாண்டமான அளவிலே நடத்திக் காட்டினார் பேரறிஞர் அண்ணா. அவர் வழி நடக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் இன்று அதே போல் இந்த மாநாட்டை நடத்திக் காட்டி, அண்ணாவின் தம்பி என்ற பேருண்மையை நிலை நிறுத்திக் காட்டுகிறார்.

**தொண்டைமான்**

ஸ்ரீலங்காவின் மாண்புமிகு தொழில் வளர்ச்சி அமைச்சரான திரு தொண்டைமான் அவர்கள் பேசுகையில் - ''எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ, அங்கெல்லாம் தமிழ் வளர நாம் உதவ வேண்டும். நம்முடைய தமிழானது எல்லா வகையிலும் நமக்கு உதவுவதாக இந்த மாநாட்டின் ஆராய்ச்சிகள் அமைய வாழ்த்துகிறேன்'' என்றார்.

**அமிர்தலிங்கம்**

ஸ்ரீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரான திரு அமிர்தலிங்கம் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு :

இது அரசியல் கலப்பற்ற மாநாடு ஆகும். தமிழ் வளரவும் வாழவும் உலகின் பல பாகங்களிலுள்ள தமிழர்களெல்லாம் ஒன்று கூடி இந்த மாநாட்டிலே விவாதிக்கிறோம். இப்படியொரு மாநாட்டை நடத்த 1974-ல் இலங்கையிலே முயன்று சிறப்பாக நடத்தி முடித்தார்கள்.

நாமெல்லாம் தமிழர்கள் என்று கூறுபவர்களாக மட்டும் இல்லாமல், தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபட நாம் முனைவோம். 'மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை' என்று பாரதி பாடினானே, அந்தக் குறைபாடு அடியோடு நீங்கிடப் பாடுபடுவோம்.

எந்த நாட்டில் பேசப்படும் தமிழனாலும் எல்லாரும் பேசத் தக்க சொற்களை ஆராய்ச்சி



யாளர் கண்டு பிடித்துத் தெரிவிக்க வேண்டும்.

**பக்கீர் மரக்காயர்**

ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அவைத் தலைவரான திரு பக்கீர் மரக்காயர் அவர்கள் தமது உரையில் ''இலங்கையிலே உள்ள முஸ்லீம் மக்களிடையே தமிழ் ஆர்வம் ஏற்படச் செய்த பெருமை முதலாவது தமிழ் மாநாடு கண்ட தனிநாயக அடிகளுக்கே உண்டு. அவருக்குச் சிலையெடுக்கும் தமிழக அரசை இதய பூர்வமாகப் பாராட்டுகிறேன். சீறா போன்ற இஸ்லாமிய இலக்கியங்களின் வளர்ச்சிக்குத் தமிழக அரசு பெரிதும் உதவ வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

**டேவிட்**

மலேசிய நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு டேவிட் அவர்கள் உரையாற்றும்போது, ''மலை நாட்டில் உள்ள 12 லட்சம் தமிழ் மக்களின் சார்பில் பேசுகிறேன். எனக்குக்கொடுத்த வாய்ப்பு, 12 லட்சம் மக்களுக்கும் கிடைத்த பெருமை எனத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே இருக்கும் தமிழர்களுக்கும் இங்கே இருக்கும் தமிழர்களுக்கும் அரசியல் சம்பந்தம் கிடையாது.; உதிர சம்பந்தம் தான் உண்டு. இரு நாட்டுத் தமிழர்களுக்கும் கலாச்சார ஒற்றுமை உண்டு - ஒருமைப்பாடு உண்டு. , மொழி உரிமைக்காகப் போராடும் சூழ்நிலை பலநாடுகளிலும் ஏற்பட்டதுண்டு. மலை நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. அடுத்த மாநாடு மலைநாட்டில் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இதற்குப் புரட்சித் தலைவர், ஆதரவு தருவார் என்று நம்புகிறேன்'' எனக் குறிப்பிட்டார்.

**டாக்டர் ஆஷர்**

எடின்பர்க் நகரிலிருந்து வருகை தந்திருந்த டாக்டர் ஆஷர் அவர்கள் தமது மழலைத் தமிழில் நிகழ்த்திய உரை மிகச் சிறப்பாக இருந்தது. அதன் விவரம் வருமாறு:

பாரீஸ் நகரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்து கொண்டவன் நான். அதில் என்னோடு பங்கேற்றுக் கொண்ட தனிநாயக அடிகளும், டாக்டர் மு. வ. அவர்களும், தெ. பொ. மீ. அவர்களும் இந்த மாநாட்டைக் காண இன்றில்லையே என்று வருந்துகிறேன்.

'மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடித்த அழகான தென் மதுரை'யில் இந்த மாநாடு நடப்பது மிகவும் சிறப்புடையதாகும். தனிநாயக அடிகளும், ஏ. சுப்பையா அவர்களும், இப்படி மாநாடு நடத்த முழு முதற் காரணம் ஆனவர்கள். அவர்களுக்கு இந்த நேரத்தில் நம்முடைய நன்றியறிதலைக் கூறிக் கொள்ள வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!'

**டாக்டர் ஜெனார்ட்**

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் ஜெனார்ட் உரையாற்றுகையில், ''எங்கள் நாட்டு மக்களின் சார்பில் எங்களது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக இந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருக்கிறேன். இம்மாநாடு எல்லா வகையிலும் சிறப்பெய்த மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

**எஸ். ஏ. ராஜா**

மலேசிய நாட்டின் மேலவை செனட்டர் எஸ். ஏ. ராஜா அவர்கள் உரையாற்றுகையில், ''தமிழகத்திற்கு முதன் முறையாக வருகை புரிந்திருக்கிறேன் என்பதை எண்ணும்போதுமிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் மலேசிய நாட்டு அரசின் சார்பிலும் எங்கள் மலேசிய முன்னேற்றக் கட்சித் தலைவரின் சார்பிலும் வாழ்த்துக்களை நான் வழங்குகிறேன். ஒரு தமிழனாகப் பிறந்தவன் உலகத் தமிழ் மாநாடு நடைபெறும் இந்த அரங்கில் தமிழில் பேசாவிட்டால் அவன் தமிழனல்லன் என்று கருதி நான் தமிழில் பேசுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

**சி. சுப்பிரமணியம்**

முன்னாள் அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் வருமாறு :

தமிழ்ப் பற்றினாலேதான் நாமெல்லாம் இங்கே ஒன்றாகக் கூடியுள்ளோம். வராதவர்களும், வர இயலாதவர்களும் எண்ணத்தினாலே, இங்கு நம்மோடு இருக்கிறார்கள். எல்லாருமே இந்த மாநாடு வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்றுதான் விரும்புவார்கள்.

இந்த மாநாட்டின் மூலம் பிற்காலத்திலே, தமிழ் இன்னும் ஏற்றம் பெற வேண்டுமென்பதே என் விருப்பம்.

விஞ்ஞானக் கருத்துக்களைச் சொல்ல 'ஃப்' போன்ற சில எழுத்துக்கள் தமிழில் புதிதாக வேண்டும் என்று கருதப்படுகிறது. தமிழின் இயல்பைக் கெடுத்து விடாமல் அப்படிச் செய்வது பற்றி ஆராய்ச்சியாளர்கள் விவாதிக்க வேண்டும். ஆராய வேண்டும்.

உலகத்திலுள்ள பலமொழி விஞ்ஞான நூல்களைத் தமிழாக்கும்போது என்னென்ன விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை அறிவிக்க வேண்டும்.

தமிழ் மக்கள் விஞ்ஞானத்தின் மூலம் புதுப்புது விஷயங்களைக் கண்டு பிடித்தாக வேண்டும். சிறந்த தமிழ் விஞ்ஞானிகள் உருவாகத் தமிழக அரசுபெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் பேசினார்.

**டி. என். உப்பாரெட்டி**

யுனெஸ்கோவின் சார்பில் திரு டி. என். உப்பா ரெட்டி பேசுகையில், ''யுனெஸ்கோ' வின் இயக்குநரின் சார்பில் இம்மாநாட்டிற்கும் தமிழக அரசுக்கும் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டின் கலாச்சாரவளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு எங்கள் நிறுவனம் பணியாற்றுகிறது என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

**ஜோசப் செல்வராசு**

தேசிய கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சித் தலைவர் திருஜோசப் செல்வராஜ் அவர்கள் பேசுகையில் ''கிறிஸ்தவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தமிழ் வளர்த்த பெருமைக்காகத் திருவுருவச் சிலை எழுப்பிடும் இந்த அரசை அந்தச் சமுதாயத்தின் சார்பில் பெரிதும் பாராட்ட நாங்கள் கடமையுள்ளவர்களாக இருக்கிறோம்'' என்று மிக்க மகிழ்வோடு தெரிவித்தார்.

**வை. பாலசுந்தரம்**

அம்பேத்கார் மக்கள் இயக்கத் தலைவரான திரு வை. பாலசுந்தரம் அவர்கள் பேசியதாவது:

கூடவேண்டிய இடத்தில், கூட்ட வேண்டிய நேரத்தில் இந்த உலகத்தமிழ்மாநாட்டைக் கூட்டி சரித்திரத்திலும் ஒரு புரட்சியைச் செய்திருக்கிறார் பெருமதிப்பிற்குரிய நமது முதல்வர் அவர்கள்.

பேச்சுந் தமிழ் நமது மூச்சுந் தமிழ் என்ற நிலையைப் பிறக்



கெல்லாம் உணர்த்துவோம். ஒன்றே குலமென்ற தத்துவத்தை உலகலொம் உணர்த்துவோம்.

**செய்குத் தம்பி பாவலர்**

தமிழ்நாடு முஸ்லீம் லீக் சார்பில் திரு. செய்குத் தம்பி பாவலர் அவர்கள் உரையாற்று கையில் குறிப்பிட்டதாவது :

இவ்வளவு சிறப்பான வகையில் உலகத் தமிழ் மாநாடு காணும் நம்முடைய புரட்சித் தலைவருக்கு நாமெல்லாம் இணைந்து நல்வாழ்த்துக் கூறுவோம்.

காசிம் புலவர், சேசனா புலவர், குணங்குடி மஸ்தான், பீர்முகமது சாயபு, உமறுப்புலவர், ஹாரிஸ் நாவலர் முதலானோரிலிருந்து இந்த செய்குத் தம்பி பாவலர் வரை ஏராளமான முஸ்லீம் பெருமக்கள் தமிழ் வளர்ச்சியிலும் வாழ்விலும் மிகவும் பங்கு கொண்டிருந்திருக்கிறார்கள். தமிழுக்கு நலம் சேர்த்த எல்லா சமுதாயத்தாருக்கும் சிலை வைத்துப் பெருமை செய்யும் தமிழக அரசு, முஸ்லீம் சமுதாயத்திற்கும் அப்படிப்பட்ட பெருமை தர வேண்டுகிறேன்.

(இவ்வாறு திரு, செய்குத் தம்பி பாவலர் அவர்கள் உரை நிகழ்த்திய அடியோடு மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் எழுந்து-''அடுத்த ஆண்டு எட்டய புரத்தில், முஸ்லீம் தமிழ்ப் பெரியாரான உமறுப் புலவருக்குச் சிலை வைக்க முன்பே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீர்மானித்திருக்கிறார்'' என்றார்.)

**திருவாரூர் தங்கராசு**

திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு :

இந்த உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்பு வருங்காலத் தமிழகத்தில் பெரும் அளவில்போற்றிப் புகழ்ந்து பேசப்படவிருக்கிறது.

லத்தீன், பிராகிருதம், சமஸ்கிருதம் போன்ற பல மொழிகள் பேச்சு வழக்கு இழந்துவிட்ட போதும், சீரிளமைத் திறம் மாறாமல் கன்னித் தன்மையோடிருக்கும் ஒரே மொழி நம்முடைய தமிழ்மொழிதான். ரோமாபுரி, பாடலி புத்திரமெல்லாம் பழமையான நகரங்களாக இருந்தாலும் இந்த மதுரை மாநகருக்குள்ள பழஞ்சிறப்பு வேறெந்த நகருக்கும் இல்லை.

அப்படிப்பட்ட நகரில் இந்த மாநாடு கூட்டப்படுவது மிகவும் பொருத்தமானதாகும்.

தமிழில் பேசினால் கேவலம் என்று கருதப்பட்ட நிலையை மாற்றி மொழி வளர்ச்சி கருதி தமிழிலே 50 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தந்தை பெரியார் அவர்கள் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். அதைச் சட்டமாக்கி இன்றைய தினம் மூவேந்தர் குலத்திலகமாகத் திகழ்கிறார் நம்முடைய முதல்வர் அவர்கள்.

**ஆண்டித் தேவர்**

பார்வர்டு பிளாக் கட்சி சார்பில் ஆண்டித் தேவர் எம்.எல்.ஏ. அவர்கள் பேசும்போது—''நான்காவது தமிழ்ச் சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவருக்குச் சிலையெடுத்துப் பெருமை செய்திருக்கும் புரட்சித் தலைவர் அவர்கள், இந்த மாநாட்டை நடத்துவதால் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் சொல்லை மெய்யாக்கிப் பெருமை தொள்கிறார்'' என்று குறிப்பிட்டார்.

**இஸ்மாயில்**

ஜனதா கட்சி சார்பில் உரையாற்றிய எம். இஸ்மாயில் அவர்கள் உரைச் சுருக்கம் வருமாறு :

ஒரு காலத்தில் ஆங்கிலத்தில் பேசுவதே நாகரிகம் என்று கருதப்பட்டது. 'அது முறையல்ல. அவரவரும் அவரவர் தாய்மொழியிலேயே பேச வேண்டும்; அந்தந்த மாநிலத்திற்கும் அந்தந்த மாநில மொழியிலேயே பெயர் சூட்டப் பட வேண்டும்' என்று நாற்பதாண்டுகளுக்கு முன்பே சொல்லிப் பெருமை கொண்டவர் மகாத்மா காந்தியடிகள்.

எந்த மொழியானாலும் அது வளம் பெற வேண்டுமானால் அம்மொழியின் பலகணிகள் திறந்து வைக்கப்பட வேண்டும். தமக்குத் தேவையான சொற்களைப் பிற மொழிகளிலிருந்து எடுத்துக் கொண்டு அதைத் தன்னுடைய தாக்கிக் கொண்டதால்தான் ஆங்கிலம் பெரு வளர்ச்சி பெற்றது.

தமிழ் இன்னும் வளர அப்படிப்பட்ட நிலைமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**நெடுமாறன்**

தமிழ்நாடு காமராஜ் தேசிய காங்கிரஸ் தலைவர் திரு நெடுமாறன் அவர்கள் ''பாண்டிய மன்னர்கள் தலைநகராகவும் நாயக்கர்கள் தலைநகராகவும், முகலாயர்களின் தலைநகராகவும் இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரையிலே உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது.

இங்கே பேசிய இலங்கைஎதிர்க் கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் அவர்கள் நாட்டுக்குநாடு தமிழ் வேறுபடுவது வேதனைக்குரியது என்றார்கள். தமிழகத்தில் தனித்தமிழ் அமைச்சரவை இருக்கிறது. ஈழத்திலும், மலேசியாவிலும் தமிழ் அமைச்சர்கள் இருக்கிறார்கள். எல்லாரும் இணைந்து ஒரு கூட்டுக் குழு அமைத்து இதுபற்றி ஆராயலாம்.

**அனந்தநாயகி**

அர்ஸ் காங்கிரஸ் கட்சிசார்பில் கலந்து கொண்ட திருமதி அனந்த நாயகி அவர்கள், ''மதுரையை மீட்ட சுந்தர பாண்டியனைத் திரையிலே பார்த்த நான், இங்கே நேரில் பார்க்கிறேன். இவ்வளவு செலவு தேவையா என்கிறார்கள். மதுரையில் நடைபெற்றுள்ள ஆக்கப்பணிகளைப் பார்ப்பவர்கள் அப்படிக் கேட்க மாட்டார்கள்'' என்று குறிப்பிட்டார்.

**குமரி அனந்தன்**

காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் பேச்சு விவரம் வருமாறு :

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையிலே உலகத் தமிழ் மாநாடு. லட்சோப லட்சம் பேர் வருவார்களே; மதுரை தாங்குமா என்றார்கள். இது சங்கப் பலகை, எல்லோரையும் தாங்கும். தாங்கிக் கொண்டிருக்கிறது.

சங்கத் தமிழ் மட்டுமல்ல, சந்தத் தமிழும் கூட! அந்தத் தமிழுக்கு உலகளாவிய மாநாடு கண்டு மகிழ்கிறார் நம்முடைய முதல்வர் அவர்கள்.

இவ்வளவு மொழி உலகுக்குத் தேவையா என்கிறார்கள். நியாயம்தான். எல்லாரும் கற்கும் படியான உலக மொழி ஒன்று கண்டால், எல்லோருமே அந்த மொழியையும் தமது தாய்மொழியையும் கற்றுக் கொள்ளலாம். உலகில் இரண்டே மொழி இருக்கும்.

அப்படியொரு காலம்வந்தால், தான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற அந்த அதி உன்னத நிலை உருவாகும்.

**அறவாணன்**

செனகல் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த டாக்டர் திரு க. ப. அறவாணன் அவர்கள் தமது உரையில் செனகல் நாட்டில் தமிழானது பல்கலைக் கழக அளவில் இரண்டாவது மொழியாக அரங்கேறியுள்ளது என்பதை மகிழ்வோடு தெரிவித்து தனது நாட்டு மக்கள் சார்பில் உளமார்ந்த நல்வாழ்த்துக்களைக் கூறினார்.

**சங்கரய்யா**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பில் திரு. சங்கரய்யா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்ட கருத்துக்களாவன :

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் எங்களது கட்சி சார்பில்— தமிழின் வளர்ச்சிக்காகவும், அதற்காக எடுத்துக் கொண்ட இவ்வாறான முயற்சிக்காகவும் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நன்றி, மதுரை மாநகரில் பல முக்கியச் சீர் திருத்தங்களைச் செய்தமைக்காகவும் ஆகும்.

பழம்பெரும் தமிழ் நூலான தொல்காப்பியத்தில் மோட்சம் பற்றிய வியாக்கியானம் இல்லை. உலகப் பொது மறையான திருக்குறளில் அறம் பொருள் இன்பம் தான் சொல்லப்பட்டுள்ளதே தவிர, வீட்டு நிலை கூறப்படவில்லை. பிறகு அதெல்லாம் யாரால் ஏன் வந்தது என்றெல்லாம் பாரபட்சமின்றி ஆராய வேண்டும்.

**ப. உ. சண்முகம்**

அனைத்திந்திய அண்ணா தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பேசியதாவது:

இந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின் மூலம் தமிழறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உலகத்தார் மிக உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்கும் எதிலும் தமிழ் இருக்க வேண்டும் என்பதில் எனக்கோ, எங்கள் கட்சிக்கோ மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், ஆங்கிலத்தை அறவே தூக்கி எறிய முடியாத சங்கடம் நமக்கு இருப்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்த மாநாட்டிலே கலந்து கொள்ளும் ஆராய்ச்சியாளர்கள் புதிய பல கருத்துக்களை ஆராய்ந்தறிந்து தமிழகத்திற்குத் தர வேண்டும் எனப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மேலவைத் தலைவர்**

மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்கள் சொற்பொழிவுச் சுருக்கம் வருமாறு:

இந்த மாபெரும் மக்கள் கூட்டத்தைப் பார்க்கிறபோது, தமிழ் நாட்டில் மதுரை இருக்கிறதா, அல்லது மதுரையிலே தமிழ்நாடு இருக்கிறதா என்றே நான் ஐயுறுகிறேன்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு கண்ட இந்த அரிய சாதனைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அவரது சக அமைச்சர்களையும் மனமாரப் பாராட்டுகிறேன்.

புராணத்திலே கூறப்படும் மீனாட்சிக் கல்யாணத்திற்கு, சிலப்பதிகாரத்திலே கூறப்படும் இந்திர விழாவுக்கு, ராஜ ராஜ சோழன் நடத்திய சதய விழாவுக்கு இவ்வளவு கூட்டம் வந்திருக்குமா என நான் படித்த இலக்கியங்களையெல்லாம் நினைத்துப் பார்த்தேன்; இல்லவே இல்லை.

ஆகவே, இந்த மாநாட்டின் மூலம் முந்தையோர் புகழையெல்லாம் தம் புகழ் ஆக்கிக் கொள்கிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

தமிழ்த்தாயே வந்து அணைத்தாலும் விலகி ஓடும் ஆங்கில பக்தர்கள் உள்ள இந்த நாட்டில், தமிழை எந்த அளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு இந்த அரசு பயன்படுத்தித்தான் வருகிறது என்பது பாராட்டப்படக் கூடியதாகும்.

மத்தியிலே ஆங்கிலம் நீடிக்கட்டும்; நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், தமிழர்கள் வாழ்விலுமா ஆங்கிலம் நீடிக்க வேண்டும் ?

தமிழரோடு தமிழர் பேசினால் அன்புகூர்ந்து தமிழிலேயே பேசுங்கள். வேறுமொழியாளரோடு பேசினால் ஆங்கிலத்திலே பேசுங்கள் - நான் வேண்டாம் என்று கூறமாட்டேன்.

மாஸ்கோ பெருநகரில் நின்று- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ்க் கவிதையைப் பாடி தமிழுக்குப் பெருமை சேர்த்த இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கு நன்றி செலுத்தும் வகையிலேயே இந்த விழாஎன்றே கூடச் சொல்லலாம். நன்றி மறப்பது நன்றன்று.

—இவ்வாறு மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் பேசினார்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுத் துவக்க விழாவின் நிறைவுச் சொற்பொழிவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிட-அதன் பின், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

—பி.எல்-ராஜேந்திரன்



# கவிஞர்களுக்குப் பொற்கிழி....

உலகத் தமிழ் மாநாட்டின் ஓர் அங்க மாக-மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் (9-1-81) பொற்கிழி பரிசளிப்பு விழா நடை பெற்றது.

ஆலய அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் அவர்கள் வரவேற் புரையாற்ற, மாண்புமிகு மேலவைத் தலை வர், டாக்டர் திரு. ம. பொ. சி. அவர்கள், தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தொழிலதிபர் திரு. என். மகாலிங்கம் அவர்கள் தொடக்க உரையாற்றினார்.

'தலையாய தமிழுக்கு நிலையாய மகு டங்கள்' என்ற தலைப்பிலான கவிதைப் போட்டியில் வென்றவர்களுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பொற்கிழி வழங்கிப் பாராட்டினார்.

அவ்வகையில் முதல் பரிசு பெற்ற திரு. சோ. சோ. மீ. சுந்தரத்திற்கு ரூ. 3001 முதல் பரிசாக வழங்கப்பட்டது. அருண கிரிநாத னுக்கும் பேராசிரியர் துரைசாமிக்கும் முறையேரூ. 751ம், ரூ. 501ம் பொற்கிழி அளிக் கப்பட்டது.

விழா நிகழ்ச்சி விவரம் வருமாறு :

**என். மகாலிங்கம் :**

தனது தொடக்கவுரையின்போது தொழி லதிபர் திரு. என். மகாலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதாவது :

கலையை, பண்பாட்டை, நாகரிகத்தை வளர்க்கவே அக்காலத்தில் கோயில்கள் கட்டப்பட்டன. அந்நாளில், கோயில்களைச் சுற்றி அன்னசத்திரங்கள் இருக்கும். இப்போது அவைகளெல்லாம் கடைகளாகி விட்டதைப் பார்க்கிறோம்.

தமிழ்க் கவிஞர்களுக்கு உற்சாகம் தரும் நிகழ்ச்சியாக இந்தப் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. மதுரை மீனாட்சி யம்மன் கோயிலில் மட்டுமல்லாமல், தமிழ கத்தின் கோயில்களிலெல்லாம் இந்நிகழ்ச்சி நடைபெற வேண்டும் என்பது என்னுடைய ஆசை.

தருமிக்கு, ஆண்டவனே பொற்கிழி வழங்கியது இந்த மீனாட்சியம்மன் கோயி லில்தான். அப்படிப் புகழ் பெற்ற இந்த இடத்தில் புலவர்களுக்குப் பொற்கிழி வழங் கும் இந்நிகழ்ச்சி நடைபெறுவது மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

**அ. ச. ஞானசம்பந்தம் :**

பரிசு பெற்றார்க்கு வாழ்த்துரை வழங்கி பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் பேசியதாவது :—

உலகில் உள்ளோர் நாவெல்லாம் மதுரை என்ற சொல் ஒலிக்கும் என்று கலித்தொகை யில் கூறப்படுகிறது.

அத்தகு சிறப்புடைய மதுரையில் இந்தப் போட்டி என்பது அவசியம் நடத்தப்பட வேண்டியதேயாகும். இப்படிப் பரிசளிப்பு முறை 1974-ல் தொடங்கப்பட்டது.

இந்தப் போட்டிக்கு 402 பேர்களிட மிருந்து கவிதைகள் வந்தன. வந்த கவிதை களில் மரபுவழிக் கவிதைகள் இவ்வளவே! இதில் பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந் தெடுப்பதில் நான் எடுத்துக் கொண்ட முயற்சி யில் சுப. அண்ணாமலை அவர்கள் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். அவருக்கும், இதனை ஏற்பாடு செய்தவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கப் பெரிதும் கடமைப்பட்டி ருக்கிறேன்.

**கவிதைகள் :**

பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை, அதனதன் படைப்பாளர்களே படித்துக் காட்டினார்கள்.

அந்த மரபுவழிக் கவிதைகள் மூன்றும், அவையிலிருந்தோரால் பெரு மகிழ்வோடும்

கரவொலியோடும் வரவேற்கப்பட்டன.

மாண்புமிகு இலங்கை அமைச்சர் திரு. ராஜதுரையும் இவ்விழாவில் பங்கேற்றார்.

**வ. சுப. மாணிக்கம் :**

மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தரும், தமிழகப் புலவர் குழுத் தலைவருமான டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தனது வாழ்த்துரையின்போது கூறியதாவது :

மரபுநிலை திரிதல் செய்யுட்கில்லை என்பது தொல்காப்பியம். அவ்வகையில் தமிழ் மரபு கெடாமல் இந்தப் போட்டியை நடத்துவதற்கு மிக்க மகிழ்ச்சி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மரபு என்பதே இப்போது சிலருக்குப் பிடிப்பதில்லை! மரபு என்பது ஒழுங்கு. எல்லாவற்றுக்கும் ஒரு மரபு இருக்கிறது. எங்கள் தமிழகப் புலவர் குழு, புதுமையை வரவேற்கும் குழு. ஆனால், மரபைப் பாராட்டும் குழு. புலவர்களுக்குப் பரிசுகூழ் தேவையில்லை; மரியாதைதான் முக்கியம்.

மதுரைகோயில், திருப்பரங்குன்றம், பழனி, திருத்தணி, சுவாமி மலை கோயில்கள் ஒவ்வொன்றும் பற்றி ஒவ்வொரு புத்தகமே வெளியிடலாம். அந்த வகையில் தமிழக அரசு அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் உரை :**

கவிதைப் போட்டியில் முதல் பரிசுபெற்ற திரு. சோ. சோ. மீ. சுந்தரத்திற்கு, அண்ணாமலை செட்டியார் அறக்கட்டளை சார்பில் ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன்அவர்கள் அத்தொகையை வழங்கி பரிசு பெற்ற கவிஞர்களை வாழ்த்தியும், தமிழகப் புலவர் குழுவினரைப் பாராட்டியும் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு :

இந்தப் போட்டிக்கு ஐநூறுக்கு மேலான கவிதைகள் வந்திருந்தன. அவைகளை ஆராய்ந்து, பரிசுக்குரியவற்றைத் தேர்ந்தெடுக்கும் பணியைப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்களிடம் ஒப்படைத்தோம். குறுகிய காலத்திலே ஒப்படைக்கப்பட்ட பணியானாலும், மிகச் சிறப்பாக அதனைச் செய்து முடித்த அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலாவது தமிழ்ச் சங்கமும் இரண்டாவது தமிழ்ச் சங்கமும் கடல் கொண்டுவிட்டப் பிறகு, மதுரையில் கடைச்சங்கம் அமைக்கப்பட்டது. அதில் அமர்ந்து தமிழ் வளர்த்த புலவர் பெருமக்கள் 49 பேருக்குச் சிலை வைத்துப் பெருமை செய்யப்பட்டிருக்கிறது. இந்த மீனாட்சியம்மன் கோயிலில், அப்படிப் பட்ட இக்கோயில் வளாகத்திலே புலவர்களுக்குப் பொற்கிழி வழங்கும் விழா நடப்பது தான் பொருத்த முடையது எனக் கருதிய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இதனை இங்கே ஏற்பாடு செய்யும்படி பணித்திருக்கிறார்கள்.

கவிதைப் போட்டிக்குத் தலையாய தமிழுக்கு நிலையாய மகுடங்கள் எனத் தலைப்பிட்டார் கவியரசர் கண்ணதாசன் அவர்கள். மரபுவழிக் கவிதைகளே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

மரபு என்பது தமிழுக்கு மாத்திரம் அல்ல; மரபைக் காப்பாற்றுவதில் பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு நமது புரட்சித் தலைவர் அவர்கள்தான் நிகரற்றுத் திகழ்கிறார். அப்படி மரபு வழி நடக்கும் வகையிலேநான் அண்ணா அவர்கள், எங்களை வளர்த்து ஆளாக்கியிருக்கிறார். அந்த மரபைநாங்கள் மீறமாட்டோம். மரபு வழி நின்று மாற மாட்டோம்.

**ஆற்றல் மிக்க தமிழறிஞர்களை வாழ்த்துகிற, வணங்குகிற மாநாடுதான் இந்த அரசு நடத்துகின்ற உலகத் தமிழ் மாநாடு.**

கவிதைப் போட்டிக்கான பரிசுத் தொகையை உயர்த்த வேண்டும் என்று



# தமிழ் தொலை எழுது பொறி

தமிழில் தொலை எழுது பொறி (டெலிபிரிண்டர்) என்னும், செய்தி அனுப்பும் கருவியை மத்திய அரசு நிறுவனமான இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் உருவாக்கியுள்ளது. முதன்முறையாக மதுரை உலகத் தமிழ்மாநாடு பந்தயத் திடலில் 9—1—1981 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் இயக்கி வைக்கப்பெற்றது.

''இது ஒரு புரட்சிப் பொறி; எனவே, இதனை புரட்சித் தலைவர் இயக்கி வைப்பது பொருத்தம் தான்'' என்று குறிப்பிட்டார் டாக்டர் ஔவை நடராசன்.

இந்நிகழ்ச்சியில் பங்குபெற்ற மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்:

''தமிழால் தமிழ்நாடு – தமிழ் மக்கள் பெருமை அடைகிறார்கள்; தமிழால் தமிழ் மக்கள் நன்மை பெறுகிறார்கள். எங்கும் தமிழ்-எதிலும் தமிழ் என்ற முறையில் புரட்சித் தலைவர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள். தமிழை நாம் பயன்படுத்தும் முறையிலேதான் தமிழர்களின் உயர்நிலை இருக்கிறது. டெலி பிரிண்டர் என்னும் இந்தப் பொறியில் இதுவரை ஆங்கிலம் தான் இடம் பெற்றிருந்தது. தற்போது தமிழ் எழுத்தும் இடம் பெற்றுள்ளது.''

பொறியை இயக்கி வைத்துப் பேசிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்.

''உலகெங்கும் பரவிவரும் அறிவியல் மூலமாக, அறிவியல் கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலமாக, தமிழ் மொழியில் நாம் காட்டும் அக்கறையைச் செயலாக்க வேண்டும். மொழியிலே நமக்கு மிகுந்த ஆர்வம் - பற்று இருந்தாலும்கூட நாம் வெற்றி பெற முடியாது - அறிவியலை நாம் பயன்படுத்தாவிட்டால்!

''பொறியியல் அறிவை நாம் பயன்படுத்தினால், அது தமிழுக்குச் செய்யும் சரியான தொண்டாக அமையும்!''

மாண்புமிகு மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு ஸ்டீபன் அவர்களுக்கு, முதல்வர் இந்தத் தொலை எழுது பொறியின் மூலமாக, ''தமிழ் வாழ்க'' என்று செய்தியை விடுத்தார். அந்தச் செய்தியை ஏற்றுக்கொண்டு ஸ்டீபன் அவர்கள், மாண்புமிகு முதல்வருக்குச் செய்தி விடுத்தார்கள். அது வருமாறு:

''வணக்கம்'', பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் கலந்து கொள்கிற 5 வது உலகத் தமிழ் மாநாட்டில் முதல்முறையாக தமிழ் தொலை எழுது பொறி இயக்கப்படுகிறது. இந்திய அரசின் சார்பிலும், என் சார்பிலும் தமிழகத்து மக்களுக்கும், தமிழக முதல்வருக்கும் இதய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் உயர் தனிச் செம்மொழியாகும். அதற்கு இந்தக் கருவி மிகவும் பயன்படும்'' என நம்புகிறேன். மாநாட்டில் பங்கேற்கும் பன்னாட்டு அறிஞர்களுக்கும் பொது மக்களுக்கும் எனது வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.''

—த.பி.

---

இங்கே தெரிவித்தார்கள். அதன்படி, வருகிற ஆண்டிலிருந்து முதல் பரிசாக ஐயாயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக மூவாயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக இரண்டாயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

—இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

**மேலவைத் தலைவர் :**

மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் பேசியதாவது :

இங்கே இந்தப் போட்டியில் பரிசு பெற்றிருக்கிறவர்கள் தமிழ்ப் புலவர்கள் அல்ல. வணிக இயல், மருத்துவ இயல் படித்துப் பட்டம் பெற்றவர்களே பரிசு பெற்றிருக்கிறார்கள்.

இதில் நமக்கு ஒரு திருப்தி. ஆங்கிலம் தான் தமிழை நோக்கி வந்து கொண்டிருக்கிறதே தவிர, தமிழ் ஆங்கிலத்தை நோக்கிச் செல்லவில்லை என்பதில் நமக்கு மகிழ்ச்சி!

சேரநாட்டின் தலைநகரான வஞ்சி நம்மிடம் இல்லை. சோழ நாட்டின் தலைநகராக இருந்த பூம்புகாரைக்கடல் கொண்டு போய் விட்டது. தொண்டை நாட்டின் தலைநகரான காஞ்சி இப்போது நெசவாளர் நகராகி விட்டது. இன்னும் பழம் புகழ் பெற்ற தொண்டி, முசிரி எல்லாம் இருக்குமிடம் தெரியாத நிலை.

மூவேந்தர் தலைநகரில், இந்த மதுரை மூதூர் ஒன்றே பழம் பெருமை குன்றாமல் உள்ளது. ஆகவே இங்கே உலகத் தமிழ் மாநாடு நடைபெறுவதும், பொற்கிழி வழங்கு விழா நடைபெறுவதும் மிகமிகப் பொருத்தமுடையதாகும்.

இவ்வாறு மாண்புமிகு மேலவைத் தலைவர் உரையாற்றினார்.

இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு. யூ. சுப்பிரமணியம் அவர்கள் நன்றி கூறினார்.

**கவியரங்கம் :**

இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து 'நான் ஒரு புலவன்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

அரசுக் கவிஞர் கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமை தாங்கினார்.

கவிஞர்கள் மா. வே. பசுபதி தமிழவேள், மரியதாசு, சோ. சோ. மீ. சுந்தரம், மா. கண்ணப்பன், வி. அசோக்குமார், ஜெயின், பெரி. சிவனடியான், இர. ம. இராமநாதன் ஆகியோர் கவியரங்கில் பங்கேற்றனர்.

அறங்காவலர் குழுத் தலைவர் திரு. வி. என். சிதம்பரம் நன்றி கூறினார்.

—இல. இராசேந்திரன்




# ஆராய்ச்சிக் கருத்தரங்கம்

**பி.எல்.ஆர்.**

உலகத் தமிழ் மாநாட்டுப் பந்தலிலிருந்து புறப்பட்டு, மதுரை-தேனி சாலையில், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் நோக்கிச் செல்கிறோம்.

வாழை, மா, பலா, தென்னஞ் சோலை, வயல்வெளி என எங்கு நோக்கினும தஞ்சைப் பசுமை அந்தப் பாண்டிய மண்ணில். அங்கயற்கண்ணி, தோரண வாயிலைக் கடந்து நாகமலை புதுக்கோட்டையினை அடைகிறோம். அங்கேதான், மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் உலகத் தமிழ் மாநாட்டின் முக்கிய அங்கமான தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு!

மலைத் தொடர் பின்னணியில் அமைந்துள்ள பல்கலைக் கழக வளைவில் 'முத்தமிழ் போற்றும் உலகத் தமிழ் அறிஞர்களே வருக!' என்கிற வரவேற்புப்பதாகை !

உள்ளே செல்கிறோம். அலங்கார வளைவு அழகு காட்டுகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' என்று எழுதப்பட்டிருக்கிறது. அதன் கீழே 'நல்வரவு' 'மெய்ப் பொருள் காண்பதறிவு'.

'வேதியியிலகத்' தின் எதிரே தொல்காப்பியர் அரங்கிலேதான் கருத்தரங்கம். விளக்கு, கோபுரம், ஏடு-சிறகு, யானை, தாமரை, ராக்கெட், 2 மீன்கள் ஆகியவற்றோடு கூடிய மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சின்னம் பந்தல் முகப்பில் நம் கருத்தைக் கவர்கிறது.

பன்னாட்டுத் தமிறிஞர்களும் ஆங்கே "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' எனச் சொல்லாமல் சொல்லி இனமானம் காத்திடும் நெஞ்சு நிமிர்வோடு அலங்காரப் பந்தலில் அமர்ந்திருக்கிறார்கள்.

ஆராய்ச்சிக் கருத்தரங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மொழியியல், வினைச் சொற்களின் அமைப்பு முறை, நேர்க்கூற்று, அயற் கூற்று, இந்திய இசைக் கருவிகளின் வரலாறு, பக்தி, தத்துவராயர் பாடிய புதுமைப் பிரபந்தங்கள் சங்ககாலச் சமூகவியல் கோட்பாடு, குறவஞ்சியும் பிற சிற்றிலக்கியங்களும், குற்றாலக் குறவஞ்சி நாடகத்தின் அமைப்பு, தமிழில் உரைகளின் தோற்றமும் வளர்ச்சியும், மதுரைக் கலம்பகமும் மக்காக் கலம்பகமும், தமிழ் நாட்டில் சாதிப் பாகுபாடுகள், கூவல் நூல் நூல் அறுமுகம், நோயினின்று காக்கும் சித்த முறை, சோழர் காலத்தில் கல்வி வளர்ச்சி, சிங்கப்பூரில் தமிழ் நாடகங்கள், தமிழ் கல்வெட்டுகளின் காலத்தைக் கணிப்பதில் கம்ப்யூட்டர்— இப்படி எண்ணற்ற தலைப்புகளின் கீழே, பல்வேறு நாடுகளிலுமிருந்தும் வந்திருந்த கற்றறிவாளர்கள் பலர் வியத்தகு விவாதங்களை நடத்தினார்கள், அருமை பெருமை மிக்க 176 ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தார்கள். அவற்றுள் பிறநாட்டார் கட்டுரைகள் 75.

8-1-81 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் பல்கலைக் கழகக் கருத்தரங்கினைக் காண வருகைத் தந்தார். வாழ்த்துரை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்.

**முதல்வரின் வாழ்த்துரை:**

ஆராய்ச்சிக் கருத்தரங்கிலே பங்கேற்று, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களை வாழ்த்திப் பேசுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது :

இங்கே கூடியுள்ள அறிஞர் பெருமக்கள் தங்கள் உள்ளத்தில் உருவாகியுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தித் தமிழ்மொழி வளரவும், எதிர் காலத்தில் தமிழகம் நன்மை பெறவும் உறுதுணையாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆராய்ச்சிக்கருத்தரங்கில் என்னை வாழ்த்தும்படி கூறினார்கள்.

என்னால் வாழ்த்த முடியுமா? தமிழ் இலக்கியத்தின் ஒரு கருத்தை குறிப்பிட்டுச் சொல்லி விளக்கிக் கூற இயலுமா என்ற சிந்தனை என்னிடத்தில் தோன்றினாலும், என் உள்ளத்தில் தோன்றும் கருத்தை, எண்ணத்தை எதையும் தாங்கும் இதயத்தோடு வெளிப்படுத்த பின்வாங்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டின் பிரதிநிதிகளாக வந்திருக்கும் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் சில பிரச்சினைகளைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் தங்களை வெளிநாட்டவர் என்று கருதிக் கொள்ள வேண்டாம். தமிழுக்குச் சொந்தக்காரர்கள் எல்லோரும் சமம். நமக்கு இருக்கும் உரிமை அவர்களுக்கும் (வெளிநாட்டவர்) உண்டு.

தமிழ் அறிஞர்களைப் பிரித்து நோக்குவது எங்கள் நோக்கமல்ல. ஆராய்ச்சிக் கருத்தரங்கிற்கு மக்கள் கூட்டம் தேவையுமில்லை.

அறுவை சிகிச்சை நடைபெறும் இடத்தில் மருத்துவர்கள் தங்கள் காலணிகளைக் கூட கழற்றி வைக்க வேண்டும்.

கட்டுப்பாட்டோடு இருந்தால்தான் அறுவை சிகிச்சை ஒழுங்காக நடைபெறும். அதனால்தான் பொதுமக்கள் அனுமதிக்கப்படுவதில்லை.

மாநாட்டின் வெற்றியின் பாராட்டுக்கு நான் மட்டும் சொந்தக்காரனல்ல. இரவு பகலாக உழைத்த அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்கள். அவரவர்கள் தங்கள் பொறுப்பை உணர்ந்து காரியங்கள் ஒழுங்காக நடைபெற ஒத்துழைத்தார்கள்.

குமரிக்கண்டம் என்பது பற்றி இலங்கையைச் சேர்ந்த அமைச்சர் ராஜதுரை ஒரு பிரச்சினையை எழுப்பினார்.

நான் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

தமிழகத்தில் முதலில் ஒரு உலகத்தமிழ் மாநாடு நடந்தது. இப்போது இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது. முதலில் நடந்த மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்துக்கள் பற்றியும் எதுவும் முயற்சி எடுக்கவில்லை என்று கேட்கலாம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்கெல்லாம் வழி வகுத்திருக்கிறார். அலட்சியப்படுத்தவில்லை. இடையே அதற்குத் தேவையான விளம்பரம் தரப்படவில்லை.

அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால்தான் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றிருக்கிறது. உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

இங்கே அமைக்கப்படும் தமிழ்ச் சங்கம் ஐந்தாவது சங்கமாகவோ ஆறாவது சங்கமாகவோ இருக்க வேண்டும் என்று விரும்பவில்லை.

உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் தெரிந்த ஆராய்ச்சியாளர்கள் பயன்பெறும் வகையில் இச்சங்கம் அமைக்கப்படும்.

டெல்லி, பம்பாய், காஞ்சி, மதுரை ஆகிய இடங்களில் தமிழ்ச் சங்கம் இருக்கிறது. மதுரையில் மீண்டும் அமைக்கப்படும் சங்கம் எந்தத் தமிழ்ச் சங்கமாக அமைவதும் சரியாக இராது.

வெளிநாடுகளிலும் உலகத் தமிழ்ச் சங்கத்தின் அமைப்புகளை ஏற்படுத்தி அதற்கான விதிகளை ஏற்படுத்தி ஆறு மாதத்திற்கு ஒரு முறையோ மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ ஆராய்ச்சியாளர்கள் கூடி தங்களின் புதிய கண்டு பிடிப்பை அனுப்ப வேண்டும்.

அப்படிச் செய்பவர்கள்தான் அடுத்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு அழைக்கப்படுவார்கள்.

தமிழ் நலன், தமிழின் பண்பாடு, தமிழ்ச் சமுதாயம் தமிழ் கலாச்சாரம் வளர வேண்டும் என்பது எங்கள் நோக்கம்.

இந்த அரசு இருக்கும் வரை -
அதற்காக ஒத்துழைப்பு தருவோம் என்ற உத்திரவாதத்தைத் தரத் தயார்.

இந்த மாநாட்டின் அழைப்பிதழ் ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டிருந்ததாகக் குறை கூறினார்கள். சஞ்சீவியே குறையைச் சொன்னார்.

தமிழாராய்ச்சிக் கழகம் அழைப்பிதழைத் தயாரித்தது. வெளிநாட்டவர்களும்



மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் நடந்த தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு.




புரிந்து கொள்ள வசதியாகத்தான் ஆங்கிலத்தில் அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டது. தமிழைப் பின்னால் தள்ளும் எண்ணம் கிடையாது. தமிழிலும் அழைப்பிதழ் அச்சிடப்பட்டது.

மொரிஷியஸ் தீவு மக்களுக்குத் தமிழ் படிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்கள் இதற்கு வசதி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நான் ஒரு அரசு உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறேன். மூன்று நான்கு மாதமாகிறது.

இங்கிருந்து தமிழாசிரியர்களை மொரீஷியஸ் தீவுக்கு அனுப்ப உத்தரவில் கையெழுத்திட்டிருக்கிறேன்.

மத்திய அரசு அனுமதி கிடைத்ததும் தமிழாசிரியர்கள் அனுப்பப்படுவார்கள்.

நாங்கள் இதையெல்லாம் விளம்பரம் செய்து கொண்டிருக்கவில்லை. எங்களால் முடிந்த அளவு தமிழருக்கு, தமிழ்நாட்டிற்கு, தமிழுக்கு தொண்டு புரிந்து வருகிறோம். தமிழுக்கு ஒன்றும் செய்யாமல் ஒதுங்கியிருக்கவில்லை. இங்கே நடைபெறும் மாநாட்டில் எப்படிப்பட்ட பேரறிஞர்கள் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்க்கிறேன்.

பேரறிஞர் அண்ணா உபதேசித்த அறிவுரைகள்-'ஏதாவது ஒரு வகையில் நம்மைவிட' மற்றவர்கள் சிறந்திருப்பார்கள். அவர்களை மதித்து நடக்க வேண்டும்'' என்று சொன்னார்.

என் தாயும் சொல்லிக் கொடுத்திருக்கிறார். அப்படிப்பட்டவர்களை மதித்து வருகிறேன்-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரை நிகழ்த்தினார்.

**கருத்தரங்கில் டாக்டர் சுதாராணி ரகுபதி 'தமிழ்நாட்டின் நாட்டியக் கலையான பரதம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையை விளக்கினார்.**





# குறைந்த அளவு நீரினால் ஏற்படும் நீர்ப்பாசனப் பிரச்சினைக்குத் தீர்வு:

# வோட்டா

## ஸ்ப்ரிங்க்ளர் ஸிஸ்டம்.






வோட்டா ஸ்ப்ரிங்க்ளர்ஸ். கட்டுறுதி மிக்கது. நம்பகமானது. பராமரித்தல் எளிது. சிறு வயல்களுக்கும், பெரு நிலப்பரப்புகளுக்கும் நீர்ப்பாசனம் செய்ய மிகவும் சிறந்தது. மண்ணின் தன்மை, நில அமைப்பு, விதைக்கும் பயிர், என்றிவ்வாறான பலவும் கருத்திற் கொண்டு, அதிக விளைச்சல் பெறும் வகையில் ஸ்ப்ரிங்க்ளர் ஸிஸ்டத்தைச் சரிவர பயன்படுத்தும் முறையை, வோல்டாஸ் தொழில் அறிஞர் உங்களுக்குப் போதிப்பர். வோட்டா ஸ்ப்ரிங்க்ளர் உபயோகிப்பதால் 50% கூடுதல் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைக்கிறது; விளைச்சலும் இருமடங்கு ஆகிறது.

வோட்டா ஸப்மெர்ஸிபிள் பம்புடனும் உபயோகிக்கக் கூடியது வோட்டா ஸ்ப்ரிங்க்ளர்ஸ்.

உங்களது நீர்ப்பாசனத் தேவைகளுக்கேற்ப நாங்கள் வழங்குவன: கேட்டெட் பைப், பெர்:.ப்-ஓ-ரெய்ன், டிரிப் இரிகேஷன் ஸிஸ்டம் ஆகியன; இக்கருவிக் கலங்களுடன், இவற்றைப் பயன்படுத்தும் முறைக்கான தொழில் நுட்பத்தை, எமது பயிற்சி பெற்ற தொழிலறிஞர் உங்களுக்குக் கற்பிப்பர் — இலவசமாக.

வோட்டா கருவிக்கலங்களுடன், வோல்டாஸ் நிறுவனத்தின் புகழ்பெற்ற விற்பனைக்குப் பிந்தைய சேவையின் பயனும் உங்களுக்குக் கிடைக்கும்.

வோல்டாஸ் அளிக்கும் விதவிதமான நீர்ப்பாசனக் கருவிக்கலங்கள் :



வோட்டா ஸ்ப்ரிங்க்ளர் இரிகேஷன் ஸிஸ்டம்.



வோட்டா பெர்:.ப்-ஓ-ரெய்ன் இரிகேஷன் ஸிஸ்டம்.



வோட்டா டிரிப் இரிகேஷன் ஸிஸ்டம்.



வோட்டா கேட்டெட் பைப் இரிகேஷன் ஸிஸ்டம்.





வோட்டா ஸி:.ப்ட் இரிகேஷ ர் ஸிஸ்டம்.

HTB-VOL-6027-A

வோல்டாஸ் — விளைச்சல் பெருகிட
விளைச்சல் சிறந்திட

**வோல்டாஸ் லிமிடெட்**
ஆக்ரோ-இண்டஸ்ட்ரியல் ப்ராடக்ட்ஸ் டிவிஷன்,
52, அரண்மனைக்காரத் தெரு,
சென்னை 600 001.





# ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு பொருட்காட்சி

மதுரையில் நடைபெற்ற ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை யொட்டி, தமுக்கம் மைதானத்தில் மூவேந்தர் வாயில்களும், கண்காட்சியும் (5.1.1981) திறந்து வைக்கப்பட்டது.

அன்று காலையில் ஆறுமுக நாவலர் சிலையைத் திறந்து வைத்த மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள், நண்பகலில் தமுக்கம் திடலில் நடைபெற்ற மூவேந்தர் வாயில்கள் திறப்பு விழாவுக்குத் தலைமையேற்றார்.

முன்னாள் மேயர் மதுரை திரு எஸ். முத்து அவர்கள், மூவேந்தர் நுழைவாயிலைத் திறந்து வைத்துப் பேசுகையில் - ''முத்தமிழ் வளரச் சங்கம் இருந்த இடம் மதுரை என்றாலும், மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பெயரில் அமைந்த நுழை வாயில்களை இங்கே திறந்து வைப்ப௹ில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்'' என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

இவ்விழாவில், மாண்புமிகு இலங்கை அ௱நிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு ராஜதுரை அவர்களும் ட்ங்கேற்றார்.

அதே இடத்தில் மாலை 6 மணியளவில் நடைபெற்றது கண்காட்சி திறப்பு விழா. மாண்புமிகு தமிழக முதல்வர் திரு, எம். ஜி.ஆர். அவர்கள் தலைமையில் மாண்புமிகு கர்னாடக முதல்வர் திரு குண்டுராவ் அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

சட்டமன்ற அவைத்தலைவர், மேலவைத் தலைவர் அமைச்சர் பெருமக்கள், அனைத்து நாடுகளிலுமிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் ஆகியோரும் பல்லாயிரக் கணக்கான பொது மக்களும் பங்கேற்றுச் சிறப்பித்த இவ்விழாவில் வரவேற்புரையாற்றிய மாண்புமிகு செய்நி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம் வீரப்பன் அவர்கள் பேசியதாவது:

**அண்மச்சரின் வரவேற்புரை**

''14 அரசுத்துறைகள் இந்தக் கண்காட்சியிலே அங்கம் வகித்திருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின் ஆசிய நாட்டின் தொழில் கண்காட்சி ஒன்று நடத்தினார்கள். அவ்வகையில், அவர் வழிநடக்கும் புரட்சித் தலைவ






ரின் அரசு ஆண்டுதோறும் தொடர்ந்து கண்காட்சி நடத்தி வருகிறது.

''இன்று இங்கே தொடங்கு கிற கண்காட்சி நான்குமாத காலம் இருக்கப் போகிற நிரந் தரக் கண்காட்சியாகும். ஆகவே, வழக்கம்போல் நடத்தப்படுகிற கண்காட்சி இந்த ஆண்டு இங்கே நடத்தப்படமாட்டாது.

கடந்த மூன்றாண்டுகளில் இவ் வாறான கண்காட்சிகளின் மூலம் தமிழக அரசு ஈட்டிய தொகை 42 இலட்சம் ரூபாயாகும். இதைப் பார்த்துப் பாராட்டுகிறவர்கள் பாராட்டட்டும்; பாராட்ட மன மில்லாதவர்கள் அப்படியே இருக்கட்டும்''.

—இவ்வாறு மாண்புமிகு செய் தித்துறை அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.



**எஸ். முத்து**

முன்னாள் மேயர் மதுரை திரு எஸ். முத்து அவர்கள் தமது வாழ்த்துரையில் - முரசுகொட்டி தமிழ் வளர்த்த மதுரைமாநக ரில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்காகவும், பலகோடி ரூபாய் செலவிட்டு மதுரையை அழகு நகராக்க மேற் கொண்ட நடவடிக்கைகளுக்காக வும் அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில்- உலகத் தமிழ்ச் சங்கத்தை மட்டு மல்ல; தமிழ்ப் பல்கலைக் கழகத் தையும் மதுரையிலேயே நிறுவ வேண்டும் எனத் தமது ஆசை யினையும் வெளியிட்டார்.

**கர்னாடக முதல்வர்**

கண்காட்சியைத் திறந்து வைக் கும்பாங்கில் மாண்புமிகு கர்னா டக முதல்வர் திரு, குண்டுராவ் அவர்கள் ஒரு பித்தானை அழுத்த 'ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு கண்காட்சி' என்ற சரவிளக்குப் பலகை ஒளி சிந்தியது. உலகத் தமிழ்மாநாட்டுச் சின்னமும் ஒளி யுமிழ்ந்தது.

அவர் தமது உரையின் முன் பாதியைத் தமிழிலும், பின் பாதியை ஆங்கிலத்திலும் நிகழ்த் தினார். அதன் விவரம் வருமாறு:

இந்தத் தமிழ் மாநாட்டைத் தமிழ் நாட்டின் முதலமைச்சர் மிகவும் நல்ல முறையில் ஏற்பாடு செய்திருக்கிறார்.

தமிழ்க்கலையானதுமிகவும்புரா தனமானது. இந்தியாவிலேயே தமிழ்தான் எல்லா மொழிகளுக் கும் மூத்தது. தமிழ்க் கலைக்கும் கர்னாடகக் கலைக்கும் அவ்வளவு ஒன்றும் வித்தியாசம் கிடையாது. இரண்டும் அக்காள் தங்கைமாதிரி தான்.

எங்கள்பக்கத்திலே பிறக்கிற காவிரி தண்ணீர் இங்கே உங்கள் நாட்டில் வந்து கடலிலே கலக் கிறது. அந்த வகையிலும் உங்க ளுக்கும் நமக்கும் ஒரு அன்பான நட்புறவு இருக்கிறது. நானும் உங் கள் முதலமைச்சரும் பத்தாண் டுக் கால நண்பர்களாக இருக்கி றோம். எனக்கு யாரும் சகோ தரர்கள் இல்லாததால் நான் திரு எம்.ஜி.ஆர். அவர்களை என் மூத்த சகோதரராக எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

இந்த உலகத் தமிழ்மாநாட் டுக்குப் பல மாநிலத்திலிருந்தும் எல்லோரையும் அழைத்த ஒரு மரபை ஏற்படுத்தியிருக்கிறார் உங்கள் முதல்வர்.

அடுத்த வருஷம் இதேபோல் கன்னடத்தில் நான் ஒரு மாநாடு நடத்தப் போறேன். அதற்கு அவ சியம் அங்கு வந்து அவர் ஒருவார காலம் கலந்து கொள்ள வேண் டும். தமிழ் எல்லா இடங்களிலும் பிரபலமாக இருக்கிறது. பெங்க ளூரில் கூட கிட்டத்தட்ட 19 சத விகிதத்தினர் தமிழ் பேசுவோர் இருக்கிறார்கள்.

தென் இந்தியாவில் கர்னாட கம், கேரளம், ஆந்திரம், தமிழ் நாடு எல்லாம் ஒற்றுமையாக வாழ இந்த மாநாடு ஒரு முன் மாதிரி ஆகும்.

பிரமாதமாக நடக்கிற இந்த உலகத் தமிழ் மாநாட்டில், இந் தக் கண்காட்சியைத் திறந்து வைப்பதில் நான் பெருமைப்படு கிறேன். இந்த நாள் தமிழகத்தின் வரலாற்றில் ஒரு பொன்னாள் ஆகும்.

**தமிழக முதல்வர்**

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தனது தலைமை உரையில் குறிப்பிட்ட தாவது:

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் பல விஷயங்கள் இந்தக் கண்காட்சியிலே உள்ளன. இது நிச்சயம் உங்களைக் கவர்ந் தீர்க்கும். குறிப்பாக மாணவ மாணவிகளுக்கு இது மிகவும் பயன்படும். பல புத்தகங்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை சிறிது நேரம் இந்தக் கண்காட்சியைச் சுற்றிப் பார்த்தாலே தெரிந்து கொண்டுவிட முடியும்.

காவிரி நீர் பற்றிய பேச்சு வார்த்தையின்போதுதான், இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் படி நான் கர்நாடக முதல்வரிடம் கேட்டேன். உடனேயே ஒத்துக் கொண்டார். கேரள முதல்வர் நாயனார் அவர்களும் இங்கே வந்து கலந்து கொள்ள உடனே ஒப்புக் கொண்டார். ஆந்திர முதல்வர் அஞ்சையா அவர்களும் இந்த மாநாட்டிலே வந்துகலந்து கொள்ளச் சம்மதித்திருக்கிறார்.

இந்த உறவு வளர்ந்தால் தமி ழகத்திற்கும் கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும் கேரளத்திற் கும், தமிழகத்திற்கும் ஆந்திரா வுக்கும் உள்ள தொடர்பு நல்ல படி நீடித்திருக்கும். அப்படி யிருந்தால்தான் இந்த நாட்டுக்கு யார் எந்தப் பிரச்னையை உரு வாக்கினாலும் தடுத்துவிட முடி யும்.




காவிரி அங்கே உருவாகிஇங்கே கடலிலே கலக்கிறது என்றார்கள். வீணாகக் கூடாது தான். அந்த வகையிலும் அவர்கள் மிகுந்த நல்லுணர்வோடு இருக்கிறார்கள். அதேபோலக் கர்நாடக மக்களுக்கு என்ன தேவையோ அதை அவர்கள் அடைவதில் நாமும் நல்லுணர்வோடு இருப்போம் என்று கூறி அவர்கள் வருகைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னாள் மேயர் முத்தண்ணன் அவர்கள், தமிழ்ப் பல்கலைக் கழகத்தை மதுரையிலே நிறுவவேண்டும் என்றார்.

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையிலே தான் உருவாகும். புலவர்களிடம் அதை ஒப்படைத்து நிர்வாகத்தை அரசு வைத்துக் கொள்ளும்.

ஒன்றைக் கொடுத்து ஒன்றைப் பெற வேண்டும் என்ற முறையில் உலகத் தமிழ்ச்சங்கம் இங்கே மதுரையிலே அமைவதால், பல்கலைக் கழகத்தை விட்டுக் கொடுக்க வேண்டும். தமிழர்களுக்குச் சொந்தமாக ஏதாவது ஒரு மாவட்டத்தில் தமிழ்ப்பல் கலைக் கழகம் நிறுவப்படும்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்கள்.

வணக்கத்துக்குரிய மதுரை மேயர் திரு எஸ்.கே. பாலகிருஷ்ணன் அவர்கள் நன்றியுரையாற்றுகையில் -''மதுரை மாநகரம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பப்படி விரைவிலேயே தொழில் நகரம் ஆகும். என்பது உறுதி'' எனக் குறிப்பிட்டார்.

**கண்காட்சி**

'தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மதுரை'யில் உலகத் தமிழ் மாநாட்டையொட்டி அமைந்துள்ள அரங்கின் முன்புறத்தில் நிரந்தரக் கோபுரம் ஒன்றே அழகுபட நிர்மாணிக்கப் பட்டுள்ளது. அனுமதிச் சீட்டு வழங்கும் இடங்களும் பழங்கால மோஸ்தரிலே கட்டப்பட்டுள்ளன. முன்னாலே மூன்று அலங்கார வளைவுகள் 'மூவேந்தர் வளைவு!'

மரமெல்லாம் வண்ண வண்ணச் சர விளக்குகள். வலது ஓரத்தில் அறிவுக்கு விருந்தளிக்கும் அருமையான புத்தக விற்பனை நிலையங்கள் இன்னபிற கடைகள்.....

அரங்குகள் பற்றிய விவரம் காணலாமே?

பட்டினப் பாலையின் காவியத் தலைவன் கட்டி முடித்து, உலக அரங்கிற்கு அறிவியல் தெளிவை நிலைநாட்டிய கல்லணை, உலக அரங்கத்தில் ஒரு விடிவெள்ளி என நிலைநாட்டி நிற்கிறது பொதுப்பணித்துறை அரங்கு! இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னரே காவிரியில் கல்லணையைக் கட்டினான் கரிகாற் பெருவளத்தான். அக்காவியத் தலைவன் படைத்த கல்லணை நீரியல் தத்துவத்தை உலக அரங்கத்திற்குப் பறைசாற்றி நிற்கின்றது. தமிழகத்தில் உருவாக்கப் பட்டுவரும் நீர்ப்பாசனத் திட்டங்கள், பயன்பட்டு வரும் நீர்ப்பாசனத் திட்டங்கள், கருத்தைக் கவரும் வகையில் வளர்ந்துவரும் பாசனம், வேளாண்மை, ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன, இங்கே.

வைகையும், யானைமேல் பாண்டிய மன்னன் உலாவும் இவ்வரங்கின் சிறப்பு அம்சங்கள்!

செல்வ வளத்தையும், மன வளத்தையும் பெருக்கவல்ல கானகம் வனத்துறை காட்சிக் கூடத்தில் காட்சிப் பொருளாய் அமைந்துள்ளது. கானகத்தில் வாழுகின்ற விலங்கினத்தின் தோற்றங்கள், பணத்தை வாரிவழங்கும் வள்ளல் மரங்கள், 'மருந்தாகி' என்ற வள்ளுவன்வாக்கிற்கொப்ப வளர்ந்துள்ள மரம், செடிகள், காண்பாரின் உள்ளத்தைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன இதில்!

லிங்கத்தில் இருந்து பிறப்பது மருத்துவம் என விளக்குகிறது இந்திய மருத்துவத்துறை அரங்கு. திருமூலரும், சித்தர்களும், செப்பியவண்ணம் உடல் நோய் போக்கி, வாழ்வில் உய்வை உருவாக்கும் தமிழ் கூறும் மருத்துவ நெறிமுறைகள் வெகு அழகாய் அமைக்கப்பட்டுள்ளன. நோய் போக்கும் மூலிகைகள் நமக்கெல்லாம் வழிகாட்டும். மருத்துவத்தின்மேன்மையை, தொன்மையை, மூலத்தை, நோய் நாடும் தன்மையை, நோய் போக்கும் வழிமுறையை இவ்வரங்கம் நமக்களிக்கிறது.

தமிழ் நிலத்தை ஆண்ட மாமன்னர்கள், அவர்கள் காத்த அறநெறிகள், படைத்திட்ட புதிய படைப்புக்கள், அவர்கள் பேணிய புலவர்களின் சிந்தனை ஊற்றுகள், படைத்த காவியங்கள், ஓவியங்களாய், நற்காட்சிகளாய் நாம் மதுரை காமராசர் பல்கலைக் கழக அரங்கில் காண இயலும்.

மொழியின் தொன்மையும், இளமை குன்றாத் தனித் தன்மையும், இலக்கியச் செறிவும், இலக்கண மரபும் கொண்ட நற்றமிழின் மாண்பை ஒருசேர முழங்குகிறது இவ்வரங்கம். இலக்கிய மேதைகட்கும், தமிழ்மொழிக் காவலர்க்கும் இது ஒரு திருவரங்கம்.

இந்த அரங்கின் முன்புறம், 'இராசேந்திர சோழனின் கீழை நாட்டுச் செலவு 'என எழுதப் பட்டு, ராஜ ராஜசோழன் தனது மகனை விடை கொடுத்து அனுப்புவது போலச் சித்திரிக்கப்பட்டுள்ள சிலைகள் அற்புதம்!

தமிழர் வீர விளையாட்டுகளை விளக்கிடும் ஓர் அரங்கு. வீரம் விளைந்த பூமி தமிழகம். வீணர்களை வீழ்த்தி வெற்றிக் கொடியை நாட்டியவன் தமிழன். பண்டைக் காலத்திலேயே பல்வேறு போர்க்கருவிகளையும், போரிடும் முறைகளையும், தான் ஒருங்கே தமிழன் பெற்றிருந்தான் இதனை விளக்கும் வகையில் இக்கூடத்தில் வீர விளையாட்டு தொன்மைச் சிறப்பை உணர்த்தும் வண்ணம் நடைபெறுகிறது. கத்திச் சண்டை, குத்துச்சண்டை



சிலம்பம் மட்டுமல்ல; கிடாச் சண்டையும், கோழிச் சண்டையும் கூட இங்கே உண்டு. கண்டு மகிழலாம்.

கைத்தொழிலால் வளர்வதே வளம் என்று வனப்பூட்டும் வகையில், சிறு குடில்தனில், பல் தொழில் நடத்துதல் காணும் வகையில், கைவினை வளர்ச்சிக் கழக அரங்கு அமைந்துள்ளது.

அறுதொழில் காட்டும் சிலப்பதிகாரத்தில் நெய்யும் தொழிலின் மேன்மையைக் காணலாம். நெய்யும்தொழில்தமிழகத்திற்குத் தொன்மைத் தொழிலாகும். இத்தொழிலின் மேன்மைக்கு இத்துறை காட்டும் வழிமுறைகளைக் கைத்தறித்துறை அரங்கில் அடுக்கடுக்காய் காணலாம். பழம் பெருமை உணர்த்தும் பட்டினப் பாலையில் ஆடையின் மெல்லிய தன்மையைக் காணலாம்.

வாயிலில், பட்டத்து யானைகள் இரண்டு கம்பீரமாக வரவேற்கின்றன!

இயற்கை எழிலுக்கும், பக்திச் சுவைக்கும், வனப்பூட்டும் இடங்கள் தமிழகத்தில் ஏராளம். இவற்றை விளக்கும் வகையில் எழிலார்ந்த தமிழகத்தின் அமைப்பும், ஆங்குள்ள சுற்றுலா கேந்திரங்களும், சுவையூட்டும் வகையில் சுற்றுலாத் துறை அரங்கிலே அமைக்கப்பட்டுள்ளன. இராமேஸ்வரத்தின் சிறப்பையும், மாமல்லபுரத்தின் எழிலையும், மதுரை மீனாட்சியின் மகிமையையும், உணர்த்தும் வகையில் ஒலி, ஒளிக் காட்சி உள்ளத்தை உணர்வாக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. விவேகானந்தர் பாறை, சிதம்பரம் கோயில், பூம்புகார், மாமல்லபுரம் கடற்கரை கோயில், முதுமலை ஆகியவை இந்த அரங்கின் சிறப்பு அம்சங்கள்!

காவியத்தை உணர்த்த ஓவியம் கண்டான் தமிழன். அக்கால ஓவியங்களில் செறிந்திருந்த கலை, மறைந்திருந்த அறிவியல் நீரோட்டத்தை ஓவிய நுண்கலைக் குழு கூடத்தில் காணமுடியும். ஆனால் ஒன்று-காணக் கண் கோடி வேண்டும்!

தொல்பொருள் ஆய்வுத் துறை அரங்கு பழங்காலத் தமிழனின் பெரும் சிறப்பை, ஒருசேர உணர்த்தும் வகையில், அமைக்கப்பட்டுள்ளது. பண்டைக்கால தமிழனின் போர்க்கருவிகள், தமிழ் எழுத்து மாற்றங்கள், வீரத்தை விளக்கும் கல்வெட்டுக்கள், பண்டைக்காலத் தமிழனின் படைப்புக்கள், நாணயங்கள், எழுத்து வடிவங்கள் இக்கூடத்தில் அடுக்கடுக்காய் படைக்கப்பட்டுள்ளன.

பொது நூலகத்துறை அரங்கத்தில்-காவியத்தையும், கவிதையையும், வரலாற்றையும், மொழிக்குரிய இலக்கணத்தையும், நிரம்ப பெற்றிருந்த தமிழ் மொழியில், தொன்மைக்கால புலவர்கள் எழுதிய தத்துவ நெறிகள் இக்கூடத்தில் ஒளி ஊட்டும் எதிர்கால வாழ்விற்கு கண்சிமிட்டும் கருத்தோவியமாய் படைக்கப்பட்டுள்ளன. இன்றுள்ள பிரபல எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் இவ்வரங்கை அலங்கரிக்கின்றன!

அகத்தை உணர்த்தும் ஐந்திணைக்காட்சியை அற்புதமாய் படைத்து, காண்பாரின் கருத்தைக் கவரும் வகையில் தமிழ் வளர்ச்சிக் கழக அரங்கு அமைக்கப்பட்டுள்ளது. தலைவியுடன் கூடுதலும், தலைவனுடன் ஓடுதலும், தலைவியுடன் வாழுதலும், தலைவனிடம் ஊடுதலும், தலைவியிடம் பிரிதலும் இக்கூடத்தில் இனிய காட்சிகளாகும்.

தமிழ் மொழியின் இனிமை அளப்பரியது. இனிமைச்சுவையை இசையில் காணலாம். பண்பாட்டின் மணிமகுடமாய் தமிழ்க்கலை விளங்குகிறது. தொன்மைக் காலத்தில் கலையும், இசையும், நாடகமும் விரவி நின்றதை பண்டை இலக்கியங்களில் காணலாம். அதனை வெளிக் கொணர்ந்து பறை சாற்றி நிற்கிறது தமிழ்ப்பண்பாட்டு மைய அரங்கம். இயல் இசை நாடக மன்ற அரங்கம் இதில் அடக்கம்.!

'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற வரிக்கேற்ப, அகத்தே அருள் நெறி பெறத்தக்க தமிழகத்தின் பல கோவில்களை அறநிலையத்துறை அரங்கில் காணலாம். அனைத்துக் கோயிலின் பெரும் சிறப்பை உணர்த்தும் வகையில் இலக்கியச் சுவையோடு ஆன்மீக உணர்வை ஊட்டவல்ல பக்திக்கலை இக்கூடத்தில் பாங்குற அமைக்கப்பட்டுள்ளது. மதுரை மீனாட்சித்தெய்வத்திற்கு அணிவித்தல் பொருட்டு வைக்கப்பட்டுள்ள அணிகலன்கள் பார்வைக்கும் வைக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, தெய்வங்களின் வாகனங்கள் என்னென்ன? எலி, எருது, மயிலில் இருந்து தேர்வரை இந்த அரங்கில் உள. வெள்ளியில் சில-தங்கத்தில் சில!

நாளங்காடி, அல்லங்காடியென பண்டைத் தமிழ் இலக்கியங்கள் செப்புகின்றன. தமிழன் கடல் கடந்தும் குறைவில்லா வாணிபம் மேற்கொண்டான். பழம் சிறப்பைப் பறைசாற்றும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை பனை ஓலையில் கூரை வேய்ந்து, 63 ஆன்மாக்களை உணர்த்தும் வகையில் அற்புதமாய் அமைக்கப்பட்டுள்ளன.

ஆநிரை மணிமேகலையில் காணலாம். ஆம்பல் கடித்த ஆனிரைகள் குளத்தில் முட்டிய மீன்களால், தன் கன்றே முட்டிய தெனப் பால் சுரந்து நின்றன என உரைக்கும் வரிகள், கன்றினைக் கொன்றவன் மன்னன் அல்லன் என உரைத்த ஆவின் காவியங்கள் கூறுகின்றன.

இக்காவியத்தை உள்ளடக்கி அமைக்கப்பட்ட பால்வள நிறுவன அரங்கிலே-பொற்றாமரை. உள்ளே ஆவினை நிறுத்தி ஆவென்று வாயினைத் திறக்கும் நமக்கு பாலினை பாங்குற வழங்க அமைந்துள்ளது.

குழல் இனிது யாழினிது என குழந்தைச் செல்வத்தை குறளில் கண்டாலும், குடும்பத்தைப் பேணி, அளவோடு பெற்று, வளமோடு வாழ வழி காட்டி நிற்கிறது குடும்பநல அரங்கம்.

அரங்கின் முகப்பிலே, குடும்பக் கட்டுப்பாட்டை வலியுறுத்திப் பாடிய வள்ளுவர், பட்டினத்தார், அவ்வை, திருமூலர் ஆகியோர் சிலையாக நின்று வரவேற்கிறார்கள்!

கரும்பினைக் கண்டான் அதியமான். அக்கரும்பிலே வெல்லமும் கண்டான் தமிழன். பனைமரம் போல் வளர்ந்தாய் நீயென வெறும் சொல்மாற்றி, பனையை நினை, பனையால் பலபொருள் உருவாக்க இயலும், பனை வெல்ல அரங்கிலே பற்பல விளக்கங்கள் காணலாம்.

ஒருமுறை அல்ல; பலமுறை திரும்பத் திரும்பப் பார்த்துப் பயனடைய வேண்டிய கண்காட்சியாகும் இது.

தொகுப்பு:

**பி.எல். ராஜேந்திரன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.


இயற்கை அழகுக்கு
இணை இதுவே!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

Licence No. TN/MS(C)/PP-23

பதிவு எண். M. 8676

